திருக்கோயில்

GAZETTEER UNIT 63

ன் கடன்
பணிசெய்து கிடப்பதே

மாலை 14] பரிதாபி — வைகாசி, ஆனி — ஜூன், 1972 [மணி 9

தமிழ்நாடு அரசு

சென்னை திருவல்லிக்கேணி திரு. பார்த்தசாரதி சுவாமி கோயிலில், கொடியேற்று (துவஜாரோகண) மண்டபம் அடிக்கல் நாட்டு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்களும், ஆணையர் கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S., அவர்களும், துணை ஆணையர் திரு. ஏ. வேங்கடாசலம், B.Sc., B.L., அவர்களும், கலந்துகொண்டு சிறப்பித்தல்.

பொருளடக்கம்

1. அப்பரைப் பற்றிய ஓர் ஆய்வுரை
2. அப்பர்: ''தமிழ்நாட்டுத் தந்தை''
3. திருநாவுக்கரசரின் திருப்பாடல்கள்
4. திருப்பணி செய்வதன் சிறப்பு
5. அறிவிப்பு
6. ஞானப் பெருந்தொண்டர்
7. தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய திருமாலை
8. சிவப்பயிர் செய்வோம்
9. படிமக்கலை
10. சிற்றம்பலத்தின் சிறப்பு
11. உள்ளுணர்வு
12. மணியும் நிழலும்
13. சண்டேசுவரர்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் ''திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34'' என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்துக்கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் வருமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.



8-JUN 1972

மாலை 14] பரிதாபி — வைகாசி, ஆனி — ஜூன், 1972 [மணி 9

'அப்பரைப்பற்றியவோர் ஆய்வுரை'*

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.].

தோற்றுவாய் :

சிவநலமும், தமிழ்நலமும் செறிந்த சிறந்த நல்லறிஞர்(1) ஒருவர், "அப்பரைப் பற்றிய ஓர் ஆய்வுரை" என ஒன்றினைச் சில ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்த்தியுள்ளார். அவர்தம் ஆய்வுரையில், அப்பர் பெருமான் அருளிச்செய்துள்ள 'கூற்ருயினவாறு விலக்ககிலீர்' எனத் தொடங்கும் தேவாரத் திருப்பதிகப் பாடல்களுக்கு உரை கொள்ளுந்திறம் பற்றிய இலக்கணம், பொருள்கோள்முறை(2) முதலிய சிக்கல்கள் சில, எழுப்பப்படுகின்றன. அதன்கண் அவர் பின்வரும் கருத்தினைத் தெரிவித்துள்ளார்:

"அப்பர் சமணராய் இருந்தபோது அவருக்கு வயிற்றுவலி யுண்டாயிற்று என்றும், சைவராக மாறித் திருவதிகையில் பதிகம் பாடிய பிறகே அவருக்கு அவ்வலி நீங்கிற்று என்றும், தற்போது வழங்கிவரும் அப்பருடைய வாழ்க்கை வரலாறு கூறும். இதற்கு ஆதாரமாக இருப்பது 'கூற்ருயினவாறு விலக்ககிலீர்' என்று தொடங்கும் திருப்பதிகமே. இதில் உள்ள பத்துப் பாடல்களையும் கூர்ந்து நோக்கினல், நாம் மேற்கூறிய வரலாற்றிற்கு மாருன முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது, அதாவது, அப்பர் சைவராக மாறி வாழ்ந்துவந்த காலத்தில்தான், அவருக்கு அவ்வலியுண்டாயிற்று என்று கொள்ளக் கிடக்கின்றது."

அவ்வாய்வுரையின் முடிவில், அவர் பின்வருமாறும் குறிப்பிட்டிருக்கின்ருர் :

"எப்படி இருந்தபோதிலும் 'கூற்ருயினவாறு' என்று தொடங்கும் பதிகத்தால் குறிக்கப்படும் சூலைநோய், அப்பர் சைவரான பிறகுதான் தோன்றிற்று என்பதற்குப் போதுமான அகச்சான்றுகள் கீழே குறிக்கப்பட்டன. இவைகள் உண்மையோ அல்லவோ என்பதைத் தமிழுலகம் நடுவுநிலையில் நின்று ஆராயுமாக!"

---

* 'அப்பர் அடிகள்' ஆகிய திருநாவுக்கரசர் பெருமானின் சித்திரைச் சதய விழாவினை முன்னிட்டு, இக்கட்டுரை வெளியிடப்பெறுகிறது.

—ஆசிரியர்.

(1)இராவ்சாகிப் திரு. டி. எஸ். நடராச பிள்ளை அவர்கள், B..A., B.L., (கலைக்கதிர்).

அவ்வறிஞர் பெருந்தகை அவர்கள் விரும்பிப் பணித்துள்ள பான்மைக்கு இணங்கவும், "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" எனத் திருவள்ளுவர் அறிவுறுத்தியதற்கு ஏற்பவும், ஆய்வுரையாளர்குறிப்பிட்ட அகச்சான்றுகளை நடுவுநிலை நின்று இயன்றவரை சிந்தித்து உணரும் நோக்கத்துடனும், அப்பர் தேவாரத் திருப்பதிகப் பாடல்களின் கருத்து விளக்கத்தின் பொருட்டும், இக்கட்டுரை 'மிகவும் பணிவுடன்' எழுதப்படுகின்றது. இதனையும் தமிழுலகம் நடுவுநிலையில் நின்று ஆராய்வதாக!

ஆய்வுரையும் அதன் விளைவும்:

"அப்பர் சைவராக மாறி வாழ்ந்து வந்த காலத்தில்தான் அவருக்கு அவ்வலி உண்டாயிற்று"

148698

என, நாம் மேற்குறித்த அவ்வாய்வுரை துணிகின்றது. மேம்போக்காக நோக்கும்போது, இத்துணிவுரை 'அப்பருக்குச் சூலைநோய் ஆகிய வலியுண்டாகிய காலத்தைப் பற்றிய ஆய்வுரை' போலத் தோன்றினும், இதன்கண் வேறு பல அடிப்படையான முதன்மைப் பொருட் குறிப்புக்களும் பிணைப்புண்டு மறைந்து கிடக்கின்றன. ஆதலின், இதனை நாம் 'நேரல்-பல்பொருட் பிணைப்புக்-குறிப்புப்பிழைமொழி, (The fallacia-plurium-interrogationum) என்றே விழிப்பாக இருந்து உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இவ்வாய்வுரை, எத்துணையோ பல அடிப்படையுண்மைகளையும், செய்திகளையும், அடியோடு தகர்த்து எறிந்துவிடும் தன்மையதாகக் காணப்படுகின்றது.

இவ்வாய்வுரையின் முடிவே உண்மை எனத் துணியப்படுமாயின், அது நம் சைவ சமயத்திற்கும், அப்பரின் வாழ்க்கை வரலாற்றுண்மைக்கும், அதனைச் செவ்விதின் ஆராய்ந்து பாடியருளிய சேக்கிழார் பெருமானின் சிறப்புக்கும், எத்துணை முழுமாறாக முடிந்துபோம் என்பது, நடுவுநிலை நல்லறிஞர்கள் அனைவரும் நன்கினிது சிந்தித்து உணர்தற்குரியது.

தவறான அடிப்படை:

ஆய்வுரை நிகழ்த்திய அறிஞர் பெருந்தகை அவர்கள், தமது ஆய்வுரையினைத் தொடக்கத்திலேயே தவறான அடிப்படையை அமைத்துக் கொண்டு நிகழ்த்தத் தலைப்பட்டிருக்கின்றார்கள் எனத் தெரிகின்றது. "அப்பர் சைவராக மாறித் திருவதிகையில் பதிகம் பாடிய பிறகே, அவருக்கு இவ்வலி நீங்கிற்று என்று தற்போது வழங்கிவரும் அப்பருடைய வாழ்க்கை வரலாறு கூறும்" என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பது, தொடக்கத்திலேயே அவர்கள் பிழைபட்டதனைப் புலப்படுத்துவதாகும்.

திருவதிகையில் பதிகம் பாடிச் 'சூலைநோய் தீர்ந்த பிறகே' அப்பர் சைவராக மாறினார் என்பதுதான், தற்போது வழங்கிவரும் வரலாறு. சூலைநோய் தீர்ந்தது முன்னரும், சைவராக மாறியது பின்னரும் நிகழ்ந்தனவாகும். "சைவராக மாறினார்" என்பதுகூடப் பொருத்தமில்லை. இடையிற் பிற சமயம் புக்க அவர், முன்பே தமக்கு உரியதாக இருந்த சைவ சமயத்திற்கு மீண்டு போந்தார் என்றலே உண்மையாகும்.

நிகழ்ச்சிகள் நிகழ்ந்த நிரல்:

அப்பர் தம் சூலைநோயின் கொடுமை தாங்க முடியாமல், 'வெண்புடைவை மெய் சூழ்ந்து' ஒருவரும் காணாமே இரவின்கண் புறப்பட்டுத் திருவதிகையை அடைந்தார். தமக்கையாரின் சொற்படி நடந்தார். புறத்திருள் புலரவரும் நிலைபோல, அவர் தம் அகத்திருள் மாறவரும் நிலையும் நெருங்கி நின்றது. திருவதிகை வீரட்டானர் திருமுன்பு சென்று தொழுது நின்றபோது, அவர்க்கு 'உரைத்தமிழ் மாலைகள் சாத்தும் உணர்வு' நிகழ்ந்தது. அவர் தமது மருளும் பிணியையும், மாயையையும் அறுத்துப் போக்கியருளும்படி, திருப்பதிகம் பாடினார். பதிகம் பாடியபின் சூலைநோய் அகன்றது. அதனால் அவர் தெருட்சியும் மருட்சியும் ஒருங்கே எய்தி, இறைவனின் கருணைக் கடலில் மூழ்கினார். 'புறச் சமயக் குழியில் விழுந்து எழுமாறு அறியாது மயங்கி அவம்புரியும் நான், இவ்வாழ்வு பெறத்தரு சூலைநோய்க்குக் கைம்மாறு யாது செய்ய வல்லேன்'எனத் தொழுதார். பின்னர் மையற்றுறை விட்டு ஏறினார். முன்பு

---

(2) "Grammar, perfectly understood, enables us, not only to express our meaning fully and clearly, but so to express it as to enable us to defy the ingenuity of man to give to our words any other meaning than that which we ourselves intend them to express. This therefore, is a science of substantial utility."

—William Cobbett.

JL
Q2m 211,N59 TIC. N72.149 (164)

போல் மனத்தளவிலும், ஒரோ வழியும் அன்றி, மொழியாலும் மெய்யாலும்கூட, இடையருது எஞ்ஞான்றும் திருப்பணி செய்பவரானர். அதனால் விரவும் சிவ சின்னம் விளங்கிடப் பெற்ருர். அவர்தம் மனம், தியானம் அரு உணர்வுநிலை பெற்றது. வாய் ஈறின்றி எழும் திருவாசகம் உடையதாயிற்று. கையில் உழ வாரம் கைக்கொண்டு கலந்து கசிந்து மகிழ்ந் தார் அப்பர். இவ்வுண்மையினைப் பின்வரும் பெரியபுராணப் பாடல்களால் தெளியலாம்.

"கூற்ருயின வாறு விலக்ககிலீர்
எனநீடிய கோதில் திருப்பதிகம்
போற்ருல்உல கேழின் வருந்துயரும்
போமாறெதிர் நின்று புகன்றனரால்"

"மன்னும்பதி கம்அது பாடியபின்
வயிறுற்றடு சூலை மறப்பிணிதான்
அங்நின்ற நிலைக்கண் அகன்றிடலும்,
அடியேன்உயி ரோடருள் தந்ததெனுச்,
செங்நின்ற பரம்பொருள் ஆனவர்தம்
திருவார் அருள் பெற்ற சிறப்புடையோர்,
முன்நின்ற தெருட்சி மருட்சியினல்
முதல்வன் கருணைக்கடல் மூழ்கினரே"

"மையற்றுறை ஏறி மகிழ்ந்தலர்சீர்
வாகீசர் மனத்தொடு, வாய்மையுடன்
மெய்யுற்ற திருப்பணி செய்பவராய்,
விரவும்சிவ சின்னம் விளங்கிடவே,
எய்துற்ற தியானம் அருவுணர்வும்,
ஈறின்றி எழும்திரு வாசகமும்,
கையிற்றிக ழும்உழ வாரமுடன்,
கைக்கொண்டு கலந்து கசிந்தனரே"

எனவரும் பெரியபுராணப் பாடல்களால், சேக்கிழார் பெருமான் அப்பரடிகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை, அவை நிகழ்ந்த நிரலில், முறை பிறழாதும்-இயற்கைநெறி பிழையாதும் செவ்விதின் விளக்கியருளியிருக்கும் திறம், ஓர்ந்து உணர்தற்குரியது.

இவ்வாற்ருல் திருப்பதிகம் பாடிச் சூலை நோய் தீரப்பெற்ற பிறகே, அப்பர் மனமொழி மெய்களால் மீண்டும் சைவராயினர் என்பதே, வரலாற்றின்படி உண்மையாகும் என்று யாவரும் இனிது தெளியலாம்.

ஆய்வுரையாளர் வினு :

"இனி 'நெஞ்சம் உமக்கே இடமாக வைத் தேன், நினையாது ஒருபோதும் இருந்தறியேன், சலம்பூவொடு தூபம் மறந்தறியேன். தமிழோடு இசைபாடல் மறந்தறியேன், நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்' என்றபடி, அப்பர் சிவனை மறந்து ஒருபோதும் இல்லை என்ருல், அந்த நிலையில் அவர் சைவரான பிறகே இருந்திருக்க முடியும். அதற்கு முன் சமணராய் இருந்தபொழுது அவர் சிவனை மறந்து இருந்தறியார் என்ருல், அது உண்மை யாகாதன்ருே?"

என ஆய்வுரையாளர் வினவுகின்ருர்.

உணர்ச்சித் தடுமாற்றம் :

இத்திருப்பதிகம் பாடப்பெற்ற சூழ்நிலையை யும், அதுபோது அப்பர் அடிகள் கொண்டிருந் திருக்கக்கூடிய "உணர்ச்சித் தடுமாற்றம்" மிக்க கொந்தளிப்பான உள்ள நிலையையும், உள்ளவாறு நாம் உன்னி உணர்ந்துகொள்ளப் பெற்ருல், இவ்வினு நிகழ்தற்கே இடமில்லை. இத்திருப்பதிகம் பாடிய நிலையில் அப்பர் சமண ராகவும் இல்லை. முழுதாக மீண்டு சைவராகி விடவும் இல்லை. 'இருபாற்பட்டு இடையூசல் ஆடி ஒருபாற் படாதென் உளம்' என்றது போன்ற ஒருநிலையில், அவர்தம் உள்ளம் இங்கும் அங்குமாக ஊசலாடிக்கொண்டே இருந் தது. ஒருவகையில் அவர் 'இரண்டு கன்றி னுக்கு இரங்கும் ஓர் ஆன் என இருந்தார்'. "உறுகயிறு ஊசல்போல ஒன்றுவிட்டு ஒன்று பற்றி மறுகயிறு ஊசல்போல வந்துவந்து உலவும் நெஞ்சம்" என்பது அப்பரின் அருண் மொழி. எனவே இவ்விரு சமயங்களையும் குறித்து எத்தகைய முடிவுக்கும் வந்துவிடாமல், உண்மை காணும் ஆய்வு நிலைக்குரியவராக மட்டுமே, அப்பரடிகள் இருந்தார் எனத் தெரிகின்றது.

என் போலிகள் : அடியார் :

இவ்வுணர்ச்சித் தடுமாற்ற நிலையினை "என்போலிகள் உம்மை இனித் தெளியார் அடியார் படுவது இதுவேயாகில்" எனவரும் அப்பர் திருமொழி கொண்டே யுணரலாம். "என்போலிகள்" என்றது அவர் இன்னும் சமண சமயச் சார்பினை அறவே விட்டொழித்து நீங்கப் பெருத நிலையையும், "அடியார்" என்றது மீண்டும் சைவசமயம் சார்ந்துகொள்ளுதற் கேற்ற மனமாற்றம் பெற்று நின்ற நிலையையும், குறிப்பிற் புலப்படுத்தி நிற்றல் காணலாம். 'அடியேன் படுவது இதுவேயாகில்' என்னுது

'அடியார் படுவது இதுவேயாகில்' என்றது கருதத்தக்கது. இது தன்னைப் பிறன்போற் கூறிய கூற்ருகும். இது 'தன்மையிற் படர்க்கை வந்த வழுவமைதி' எனப்படும்.

அப்பர் இங்ஙனம் உணர்ச்சித் தடுமாற்ற நிலையில் இருந்ததனைக் "காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால் கரை நின்றவர் கண்டுகொள் என்று சொல்லி, நீத்தாய கயம்புக நூக்கியிட நிலைக்கொள்ளும் வழித்துறை ஒன்றறியேன்" என இத்திருப்பதிகத்திலேயே அருளிச் செய்துள்ள திருமொழி கொண்டும் தெளியலாம். பிறிதோர் இடத்தும் அவர் "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்றதும் கருதுதற்குரியது.

சிவனை மறவாத சிந்தை :

மேலும் பிறசமயச் சூழ்நிலைகளில் இருப்பினும், ஒருவர் தம் முன்னைய சமயத் தெய்வத்தை மறவாதிருத்தல் இயலும் என்பதற்குச் (The psychology of the newly converted recruits) சாக்கிய நாயனர் வரலாறே போதிய சான்ருகும். "எந்நிலையில் நின்ருலும் எக்கோலம் கொண்டாலும் மன்னிய சீர்ச் சங்கரன் தாள் மறவாமை பொருள்" என்பதனை மனத்திற் பதித்துக்கொண்டால், அப்பர் பிற சமயச் சார்பில் இருந்துழியும் சிவபிரானை மறவாத சிந்தையராக (Qualms of Conscience) இருந்திருத்தல் கூடும் என்பது தேற்றம். "விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயம் செய்தே எரிநுற் சொன்னரேனும் எம்பிராற் கேற்றதாகும்" "யாதோர் தேவர் எனப்படுவார்க்கெலாம் மாதேவன் அலால் தேவர்மற் றில்லையே" என்பன போன்ற அப்பர் அருள்மொழிகளும், ஈண்டு இயைபுபடுத்தி எண்ணி உணர்தற்குரியன.

மேலும் அப்பர் சைவராக மாறிய பிறகும், தயாமூலதன்மம் (6-20, 6., 6-40. 6) என்னும் தலைசிறந்த சமண சமயத் தத்துவக் கொள்கையினை விடாமல் தழீஇக் கொண்டு, சிறப்புறக் குறிப்பிட்டிருத்தல் காண்கின்ரோம். ஆதலின் அவர் சமணராக இருந்தபோதும்; தாம் தோன்றிய குலம் குடும்பம் சுற்றம் சூழ்நிலை முதலியன வற்றின் விளைவாற்றல் காரணமாகத் தமது பழைய சிவநெறிக் கொள்கைகள் பலவற்றைக் கைவிடாமல், ஓரோ வழி ஏற்றுபெற்றி போற்றியிருந்திருப்பார் எனத் துணிவதற்கு ஏது உள்ளது. ஆதலின், "சிவனை மறந்து ஒருபோதும் இராத நிலைமையில் அவர் சைவரான பிறகே இருந்திருக்க முடியும்" என்று ஆய்வுரையாளர் கூறுதல் பொருந்தாது.

'வாழலுற்ருல்...'

(2) "துணிந்தே யுமக்கு ஆட்செய்து வாழலுற்ருல் சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்' என்ற இடத்தில், முன் இரண்டு பாக்களில் சொன்னதைவிட வெளிப்படையாக, நான் துணிந்து சமண சமயத்தைவிட்டுச் சைவனகி உமக்குத் தொண்டு செய்து வாழ்கின்றேன்; இந்நிலையில் எனக்குச் சூலைநோய் வந்ததே, இதைத் தவிர்த்தருள்வீராக! என்று தமக்குச் சூலைநோய் தோன்றியது எப்போது என்பதை அப்பர் வெளிப்படுத்துகின்ருர். 'வாழலுற்ருல்' என்றதனல் நோய் தோன்றுமுன் சிலகாலம் சைவராக வாழ்ந்தார் என்பது பெறப்படும்"

என ஆய்வுரையாளர் துணிகின்ருர்.

"வாழலுற்ருல்" என்ற சொல்லின் இயல்பு அவர் கருத்துக்கு ஆக்கம் தருவதன்று. அது 'செயின்' என்னும் வாய்பாட்டு வினையெச்சப் பொருளில் எதிர்காலத்தைக் குறிப்பிடுகின்றது. ஆதலின், அஃது அப்பர் இன்னும் சிவபிரானுக்கு ஆட்செய்து வாழலுறத் தொடங்கவில்லை என்பதனையே புலப்படுத்தும். 'துணிந்தே உமக்கு ஆட்செய்து வாழலுற்ருல்' என்றதனல், அவர் சிவபெருமானுக்கு ஆட்செய்து வாழ்தற்கண் இன்னும் துணிவுகொள்ள இயலாது ஐயுறவு நிலையில் இருந்தார் என்பதே வெளிப்படும். எனவே, "அப்பர் நோய் தோன்றுமுன் சிலகாலம் சைவராக வாழ்ந்தார்" என்று ஆய்வாளர் கூறுதல் பொருந்தாது.

மேலும் 'வாழலுற்ருல்' என்னும் வினையெச்சம் 'சுடுகின்றது' என்னும் சொல்லோடு இயையாமல், 'தவிர்த்தருளீர்' (போக்கியருள்வீராக) என்னும் வினைமுற்றையே ஏற்று முடிவதாகக் கொள்ளுதல் வேண்டும். ஆய்வுரையாளர் அவர்கள் கொள்ளுமாறு போன்று, 'சுடுகின்றது சூலை' என்பதனைத் தெரிநிலை வினை முற்றுத்தொடர் எனக் கொள்ளாமல், 'சுடுகின்றதாகிய சூலைநோய்' என இருபெயரொட்டுச் சொற்ருெடர் எனவே கோடல்வேண்டும், தமக்குச் சூலைநோய் தீர்த்தருளினல், தாம் இனி அவர்க்குத் துணிந்து ஆட்செய்து வாழலுற ஒருப்படும் துணிவை உணர்த்தும்

'வேண்டுகோள் முறை' (நேர்த்திக்கடன்) இயல்பும் இதனல் இனிது விளங்கும். ''ஆட் செய்து வாழலுற்ருல் சுடுகின்றது சூலே'' எனச் செய்யுளிற் கிடந்தவாறே பொருள் கொள்ளின், சூலேநோய் சுடுகின்றது போல வருத்துவதற்கு ஆட்செய்து வாழலுறுவதே காரணம் என நேர் மாருகப் -பொருள்பட்டு, ஆட்செய்து வாழ் தலேயே பயனின்று எனக் குற்றம் சாற்றியதாக முடியும்.

மனே வாழ்க்கை :

(3) 'உயர்ந்தேன் மனேவாழ்க்கையும் ஒண் பொருளும்...' 'வலித்தேன் மனேவாழ்க்கை மகிழ்ந்தடியேன் . ...' என வருவனவற்ருல் அப்பர் சமண மதத்தில் மாணி (பிரம்மசாரி) யாம் வேடம் தாங்கி இருந்ததை ஒழித்துச் சைவராகித் தமக்கையுடன் இல்லற வாழ்வில் இருந்தபோது தான் சூலேநோய் தோன்றிற்று என்பது தெற் றெனத் தெரிகின்றதல்லவா? இவர் முன்னிருந்த சமண நிலேயில் மனேவாழ்க்கை ஏது?''

என்று ஆய்வுரையாளர் வினவுகின்ருர்.

சமண மதத்தில் மனேவாழ்க்கை இல்லே என்பதற்கோ, அல்லது அப்பர் சைவராக மாறிய பிறகு மனேவாழ்க்கையைத்தான் மேற் கொண்டிருந்தார் என்பதற்கோ தெளிவான வலிவான போதிய சான்றுகள் எதுவும் இல்லே. சமண மதம் சார்ந் தவர்களிடையும் மனேவாழ்க்கை நிலேயின ராகிய இல்லறத்தார் (உலக நோன்பிகள்) உண்டு; அவர்கள் சிராவகர் அல்லது சாவகர் எனப்படுவர் இவ்வுண்மை,

'வண்டுபடப் பழுநிய தேனர் தோற்றத்துப்
பூவும் புகையும் சாவகர் பழிச்ச'

எனவரும் மதுரைக் காஞ்சி வரிகளாலும், சமண சமயம் சார்ந்து இல்லிருந்து விரதங் காத்தொழுகும் 'சிராவகர்'களுள் ஒருவனுகக் கோவலனே மாதரி குறிப்பிடுவதாகப் போதரும்,

'சாவக நோன்பிகள் அடிகள் ஆதலின்
நாத்தூண் நங்கையொடு நாள்வழிப் படூஉம்
அடிசில் ஆக்குதற்கு அமைந்தநற் கலங்கள்
நெடியா தளிமின் நீர்'

எனவரும் சிலப்பதிகாரம் 'அடைக்கலக்காதை' வரிகளாலும் ஐயுறவின்றி அறியப்படும்.

'உயர்ந்தேன்', 'வலித்தேன்':

(4) அன்றியும் மேலேத் தொடர்களுக் குரிய இயல்பான பொருள், ஆய்வுரையாளர் கருதும் பொருளின் அறவே வேறுபட்டதாகும். 'உயர்ந்தேன்' 'வலித்தேன்' என்பன ஈண்டுச் செருக்குற்று மயங்கினேன் என்னும் பொருட் குறிப்பு உடையனவாகும். இவ்வாறே 'மனே வாழ்க்கை' என்னும் தொடர் இல்லற வாழ்வு என்பதனேத்தான் ஈண்டுக் குறித்ததா? என்பதும் ஐயத்திற்குரியது. ''உயர்ந்தேன் மனேயும் + வாழ்க்கையும் + ஒண் பொருளும்'' என அத்தொடரை உம்மை விரித்துப் பொருள் கொள்ளுதற்கும் இட முள்ளது.

மாசில்மனத் துயர்ஒழிய
மருள்நீக்கி யார்நிரம்பித்
தேசநெறி நிலேயாமை
கண்டறங்கள் செய்வாராய்,
காசினிமேற் புகழ்விளங்க
நிதியளித்துக் கருணேயினல்
ஆசிலறச் சாலேகளும்
தண்ணீர்ப்பந் தரும்அமைப்பார்.

காவளர்த்தும் குளந்தொட்டும்
கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன
மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக
நல்கியும்நா னிலத்துள்ளோர்
யாவருக்கும் தவிராத
ஈகைவினேத் துறைநின்ருர்

எனச் சேக்கிழார் சுவாமிகள் பாடுவதுபோல, பசு புண்ணியங்கள் பலவற்றைச் செய்த தாம், பதி புண்ணியங்கள் செய்து முன்னரே இறை யருள் பெறமுயலா தொழிந்த இழிதக வினேயே, அப்பர் 'உயர்ந்தேன்' 'வலித்தேன்' எனக் குறிப்பிட்டருளினுர் என்பதே சிவநெறிப் பேரறிஞர்கள் துணிபு,

அப்பர் தம் இளமைப் பருவத்தில் செய்த அறங்கள் இறை நினேவோடு இயையாத வெறும் பசு புண்ணியங்களே என்பது, 'மனத் துயர் ஒழிய' 'தேசநெறி நிலேயாமை கண்டு' 'புகழ் விளங்க' எனவரும் தொடர்களால், சேக்கிழார் பெருமான் குறிப்பிட்டருளியிருத் தல்பற்றி உணர்ந்து கொள்ளப்படும்.

எனவே 'உயர்ந்தேன் மனேவாழ்க்கை' 'வலித்தேன் மனேவாழ்க்கை மகிழ்ந்தடியேன்' என்பனவற்ருல், அப்பரை இல்லற வாழ்வு

மேற்கொண்டவராகக் கொண்டு, அவர் இத் திருப்பதிகம் பாடிய பொழுது சைவராகிவிட்டிருந்தார் எனத் துணிதல் அமையாது.

சூலைநோய் இருமுறை வந்ததா?

(5) ''முன்னம் அடியேன் அறியாமையினல் முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப் பின்னை அடியேன் உமக்கு ஆளும்பட்டேன்' என வருவதனுல், முதலில் ஒருமுறை அப்பர்க்குச் சூலைநோய் தோன்றியதென்றும், அதனுல் அவர் சைவரானுர் எனத் தெரிகின்றதென்றும், இப்பாடல்களால் விளக்கப்படும் சூலைநோய் இரண்டாம்முறை வந்ததென்றும் அது 'Appendicitis' என இக்காலத்தில் கூறப்படுவதாக இருக்கலாம்''

என்றும், ஆய்வுரையாளர் அறிவிக்கின்ருர்.

இங்ஙனம் சூலைநோய் அப்பருக்கு இருமுறை வந்ததென்பது, ஆய்வுரையாளரின் வெறும் உன்னமே (Figment of imagination) யன்றி, அதற்குச் சான்று வேறு எதுவும் இல்லை. அப்பருக்கு வந்த சூலைநோய் 'Appendicitis' என இக்காலத்தார் வழங்கும் நோய் தானு? என்பது குறித்தும், சான்றில்லாமையால் நாம் தெளிவாக எதுவும் துணிவதற்கில்லை. இன்னேரன்னவை 'தன்னுன் ஒரு பொருள் கருதிக் கூறல்' என்னும் குற்றமாகவே அறிஞர்களாற் கொள்ளப்படும்.

அப்பரின் சூலைநோயை நம்போலியர்க்கு உடற்சார்பு பற்றிவரும் சாதாரண நோய் (Physical illness) போலவே வைத்து ஆய்வுரையாளர் எழுதிச் செல்லுகின்ருர். அது பெருந் தவறு. 'அன்னவனை இனிச் சூலை மடுத்தாள்வம்' எனத் திலகவதியார்க்குக் கனவின்கண் மொழிந்தபடியே இறைவன் விளைவித்த 'திருவருள் நோய்' (Blessed illness bestowed by the Divine Grace) அது, என்பதனை நாம் நம் கருத்தில் நன்கு பதித்தல் வேண்டும். 'தொண்டரை ஆளத் தொடங்கும் சூலை வேதனை' (50) 'கற்றை வேணியர் அருளே காணும் இது' (65) எனப் பல இடங்களிற் பெரிய புராணம் குறிப்பிடுதல் காண்க. 'பிணிகாட்டி ஆட்கொண்டு பிணிதீர்த்த ஆரூரர்' எனவரும் அப்பர் திருமொழியும், 'இறைவன் அவரை ஆட் கொள்வதன் பொருட்டுப் பிணி காட்டினர்; ஆட்பட்டதும் பிணி தீர்த்தருளினர்' என்னும் செய்தியினைப் புலப்படுத்தி நிற்றல் தெளிக. அப்பரின் சூலை நோய் (Appendicitis) என இக் காலத்தார் கூறுவதாக இருக்கலாம் என்றும், அதனுல் அஃது இருமுறை வந்ததாகல் வேண்டும் என்றும் ஆய்வுரையாளர் துணிவது 'ஒன்றனை ஒன்று பற்றல்' (Petitio Principii) என்னும் தருக்கநூற் குற்றமாகும்.

முன்னம்-பின்னை :

(6) அப்பருக்குச் சூலை நோய் இருமுறை வந்ததாகல் வேண்டும் என்பதனை நிறுவும் சான்ருக அவர் காட்டும் மேற்கோளுக்கு அவர் கருதும் பொருள் 'ஓர்த்தது இசைக்கும்பறை' என்பதற்கேற்ப வலிந்தும் நலிந்தும் கொள்ளப் படுவதாகும். அம் மேற்கோளில் அமைந்துள்ள 'முன்னம்' என்னும் சொல் 'அறியாமை' என்பதனைத் தழுவி நிற்க, அடுத்துவரும் 'பின்னை' என்பது அவ்வறியாமை நீங்கிய அறிவு நிலையினைச் சுட்டுகின்றது எனக் கொள்ளுதலே பொருத்தம். முன்னைய அறியாமை நிலை சிவபிரானுக்கு ஆட்படா தொழிந்த நிலை என்றும், பின்னைய அறிவுநிலை ஆட்பட்டநிலை என்றும் கொள்ளுவதே, இயல்பான உண்மைப் பொருளாகும்.

பட்டேன்-படுவேன் :

(7) 'பின்னை அடியேன் உமக்கு ஆளும்பட்டேன்' என்புழிப் 'படுவேன்' எனற் பாலதே விரைவும் தெளிவும் பற்றிப் 'பட்டேன்' எனப் பெற்றதெனக் கோடல் வேண்டும். இங்ஙனம் எதிர்காலத்துக்குரிய வினைச் சொல், இறந்த காலத்துக்குரியதாக வரப் பெறும் காலவழுவமைதி பற்றி,

> வாராக் காலத்தும் நிகழும் காலத்தும்
> ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
> இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
> விரைந்த பொருள என்மனுர் புலவர்

எனத் தொல்காப்பியர் விளக்கியிருத்தல் காணலாம். அன்றியும் கவிஞர் திரு. சுப்பிரமணிய பாரதியார் அவர்கள், நம் இந்தியப் பெருநாடு சுதந்திரம் அடைவதற்கு நெடுநாட்கு முன்னரே 'ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்' என்று பாடியிருத்தலும் பிறவும் ஈண்டுக் கருதி யுணர்தற்குரியன. ''மலர்மிசை ஏகினன்'' என்னும் திருக்குறளின் தொடர்க்கு ஆசிரியர் பரிமேலழகர் எழுதியிருக்கும் விளக்கமும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

எனவே இத்திருப்பதிகம் பாடிய போது அப்பர் சமண நெறியினின்று மீண்டு சிவநெறி

சேர்தற்குரிய மனநிலையினை எய்தியிருந்தார் எனக் கோடலே வாய்வதாகுமன்றி, அவர் இதற்கு முன்னரே சைவராக மாறிவிட்டிருந்தார்; சைவராக மாறிய பிறகே சூலைநோய் ஏற்பட்டது என்று துணிதல் அமையாது

என்போலிகள் :

(8) ''இறுதியாக மேற்சொன்னவைகளை யெல்லாம் உறுதிப்படுத்த அச்சாணி அன்னதோர் வரி, ஒன்பதாவது செய்யுளிற் காணப்படுகின்றது. அது யாதெனில் 'என் போலிகள் உம்மை இனித் தெளியார் அடியார் படுவதிதுவே யாகில்' என்பது. இங்கே நாவுக்கரசரின் கருத்து என்ன? 'என் போன்று பிற சமயத்தில் இருந்து சைவ சமயத்தைத் தழுவியவர்கள் படும்பாடு இதுவேயானல், இனி ஒருபோதும் எவரும்'நீரே உண்மைக் கடவுள்;சைவ சமயமே சமயம்' என்னும் கூற்றுக்களை ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்பது அல்லவோ? இதில் இருந்து அவருக்குச் சூலைநோய் வந்தது சமண சமயத்தை விட்டுச் சைவரானபின்னரே என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்குகின்றதன்ருே?'' என என ஆய்வுரையாளர் 'முடிந்தது முடித்தல்' ஆகத் துணிந்து கூறிவிடுகின்ருர்.

'என்போலிகள்' என்பதற்கு 'என்னைப் போன்று பிற சமயத்தில் இருந்து சைவ சமயத்தைத் தழுவியவர்கள்' என ஆய்வுரையாளர் பொருள் கொள்ளுகின்ருர். 'என்னைப் போன்ற தெளிவில்லாதவர்கள்' என்பதே நேரிய இயல்பான பொருளாகும். 'தெளியார்' எனப் பின் வருவதனுல் 'என்போலிகள்' என்று சுட்டியது தெளிவில்லாதவர்களையே என்பது பெறப்படும்.

தெளிவில்லாதவர்களோடு தம்மையும் ஒருவராகச்சேர்த்துக் கொண்டு'என்போலிகள்' என்றருளிச் செய்தமை, அப்பர் பெருமானின் 'தாழ்வெனும் தன்மை' ஆகிய சான்ருண்மைப் பண்பினையே அறிவிப்பதாகும். இவ்வாறன்றிஇச் சொற்கிடக்கை முறையில் ஒரு சமயஞ் சார்ந்ததும், பிறிதொரு சமயத்தை விடுத்ததுமாகிய குறிப்பெதுவும் பெறப்படவில்லை.

''தெளியார்'' என்றதன் செம்பொருள் :

(9) அறிவுடையவர்கள் தாம் அனுபவிக்க நேரும் துன்பங்களுக்கு, முன்னர்த்தாம் செய்த தீவினையே காரணம், அவற்றிற்கு இறைவன் பொறுப்புடையவன் ஆகான் என உணர்ந்து, அத் துன்பங்களை அனுபவியா நின்று கொண்டே, இறைவனுக்கு அடிமை செய்து கொண்டொழுகுவர். ஆனல்,

> தீதும் நன்றும் பிறர்தர வாரா
> நோதலும் தணிதலும் அவற்ருே ரன்ன

என்னும் தெளிவுணர்வைப் பெருதவர்கள், அவ்வாறு ஒழுகாமல் தம் துன்பங்களுக்கெல்லாம் காரணமாக இறைவனையே எண்ணிக் கொண்டு இழித்துப் பழித்துக் கூறுவார்கள். ஆதலின், அடியேனுகிய யான் படும் சூலை நோயின் கொடுமை இத்தகையதாயின், இதனையே எடுத்துக் காட்டி 'இறைவழிபாட்டாற் பயனில்லை எனத் தெளிவில்லாதவர்கள் இறைவனுகிய நின்னைப் பழித்துரைப்பார்கள்' என்னும் கருத்திலேயே, அப்பர் பெருமான் 'என்போலிகள் உம்மை இனித்தெளியார் அடியார் படுவது இதுவே யாகில்' என்று அருளிச் செய்தார் எனப் பொருள் கொள்ளுதலே, ஈண்டைக்கு ஏற்புடையதாகும்.

ஆய்வுரையின் குறை பாடுகள் :

ஆய்வுரையாளர் கருத்தின்படி 'அப்பர் சைவராக மாறிய காலத்தில் தான் அவருக்குச் சூலை நோய் உண்டாயிற்று' எனத் துணிந்து கூற முற்படுவது, சைவ சமயத்திற்குக் களங்கம் கற்பிப்பதாகவே முடியும்.

அன்றியும் சமணராக இருந்த அப்பர் சைவராக மீண்டதற்குரிய காரணமும் சூழ்நிலையும் அதனுல் விளங்காமற் போகும். 'பிணி காட்டி ஆட்கொண்டு பிணி தீர்த்த ஆரூரர்' 'ஆமயந் தீர்த்து அடியேனை ஆளாக் கொண்டார்' 'பொல்லா என் நோய் தீர்த்த புனிதன் தன்னை' என்பனபோன்று, அப்பர் பாடல்களில் ஆங்காங்குப் போதரும் அகச் சான்றுகள் புறக்கணிக்கப் பட்டுப் பொருளிழந்து பொலிவழியும்.

ஆய்வுரையாளர் கூற்றின்படி, அப்பர்க்குச் சூலை நோய் இருமுறை வந்ததெனின், அஃது அருளாற் போந்தநோய் எனப்படா தொழியும். அப்பர் முதன் முறைச் சூலை நோயால் சைவராக மாறியிருந்த காலத்தில்தான், இரண்டாம் முறைச் சூலைநோய் வந்ததெனக் கொள்ளின், அப்பர் முதன்முறைச் சூலை நோயால் சைவராக மாறியமை, பயனில்லாச் செயலாக மதிக்கப்படும்.

அப்பருக்குச் சூலை நோய் ஏற்பட்டமை, இறையருட் செயல் என்பதனையும், அப்பர் சைவராக மாறியமை தமிழக வரலாற்றில் ஒரு மாபெருஞ் சிறப்பு நிகழ்ச்சி (Historic incident)

என்பதனையும், நேர்முகமாக இல்லையாயினும், மறைமுகமாக மறுத்துரைக்கும் குறிப்பு, ஆய்வுரையாளரின் கட்டுரைப் போக்கில் அமைந்துள்ளது.

இவ்விரு பேருண்மைகளையும் குறிப்பாக வேனும் மறுத்துரையாடுதல், முறையே இறையுணர்வும் வரலாற்றுணர்வும் இல்லாதவர்கட்கே ஏற்புடைத்தாகுமின்றி, சமயவுணர்வுடைய மிகச் சிறந்த நல்ல பேரறிஞராகிய ஆய்வுரையாளர் அவர்கட்கு ஏற்புடைத்தாகாது.

மனமாற்றம்

அப்பரின் சூலைநோய் ஒருபுறம் இருப்ப, அவர் தம் சமயமீட்சி குறித்து வேறு சிலவும் கூறுதல் இக்கால நிலையில் ஈண்டு மிகவும் இன்றியமையாததாகும். சமயம் அல்லது மதம் எனப்படுவது தனித்ததொரு பொருளன்று. அஃது ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கை-மொழி-நாகரிகம்-பண்பாடு-அரசியல் முதலிய பலவற்றோடும் பிரிவற விரவிப் பிணைந்து கலந்து நிற்பது. எனவே, அப்பர் பெருமான் தாம் இடையிற் புகுந்த வேற்றுச் சமயத்தினின்று மீட்டும் சிவநெறிக்குத் திரும்பியமை, தமிழ் நாடு-தமிழ்மொழி-தமிழினம் - தமிழ்ப்பண்பாடு-தமிழ்க் கொள்கை-தமிழ் நாகரிகம்-தமிழ்க்கலைகள் முதலியவற்றின் நலங்களுக்குத் தாம் புதிது புகுந்த சமயச் சூழ்நிலை மாறுபட்டதாதலை நன்கினிது கண்டுணர்ந்த அனுபவத்தின் விளைவே யாகும்.

மனச்சான்று :

ஆதலின் அப்பர் மீண்டும் சிவநெறி சேர்ந்தமை மனமாற்றமே யன்றி, மதமாற்றம் அன்று எனத் தெளிதல் வேண்டும். மனமாற்றம் பெரியோர் செயல். மதமாற்றம் சிறியோர் செயல். இரண்டிற்கும் இடையீடு மிகமிகப் பெரிது.

> " புந்திவட் டத்திடைப் புக்குநின்
> றுனையும் பொய் என்பனே ?

என இரண்டிடங்களில் அப்பர் அருளிச் செய்திருத்தலால், அவர்தம் மனச் சான்றுடைய பண்பின் மாண்பு இனையதென நாம் எண்ணியுணரலாம்.

> " கூவலாமை குரைகடல் ஆமையைக்
> கூவலோ டொக்குமோ கடல் என்றல்போல் "

என்பது போன்று வரும் திருமொழிகளாலும், அப்பர் பெருமான் சமயங்களுள் உயர்வு தாழ்வு கருதும் தன்மையர் அல்லர் என்பதும் தெளிவாம்.

அப்பரின் தமிழியற்பற்று :

தமிழ்நாட்டுப் பற்று, தமிழ்மொழிப்பற்று, தமிழினப் பற்று, தமிழ் நாகரிகப் பண்பாட்டுப் பற்று முதலியனவே, அப்பரின் மனமாற்றத்துக்குக் காரணம் என்பதனை நாம் ஆராய்ந்துணர்தல் வேண்டும்.

> " பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து
> பாழுக்கே நீர் இறைத்தேன்
> உற்றலாற் கயவர் தேறுா்
> என்னும் கட்டுரையோ டொத்தேன்."
>
> " தமிழோடு இசைபாடல் மறந்தறியேன் "

என்பன போன்று வரும் அப்பரின் அருள் மொழிகள், அவர்தம் தமிழியற் பற்றினை விளக்கப் போதிய சான்றாகும். ஆகவே, அப்பர் சமணராக இருந்து சைவராக மாறினர் என்று கூறுதலைவிடத் தமிழராக மாறினர் எனக் கூறுதலே மிகவும் பொருந்துவதாகும் எனலாம்.

பிற்காலத்தில் தமிழ்நாட்டில் வாழ்ந்து விளங்கிய சமண பௌத்தச் சான்றோர்கள் பலரும், தாம் மதத்தால் வேறுபடினும், இனத்தால் தமிழர் எனத் தம்மை உணர்ந்து கொண்டு, தமிழ்த் தொண்டுகள் பலவும் ஆற்றுதற்கு வழிகோலிய பெருமை, இவ்வாற்றல் அப்பரடிகளுக்கே யுரியதாகும்.

அப்பர் : தமிழ் நாட்டுத் தந்தை :

இற்றை நாளில் நாம் காந்தியடிகளை நம் தேசபிதா - நாட்டின் தந்தை - பாபுஜி - (The Father of the Nation) என்றெல்லாம் எவ்வெச் சிறப்புகள் குறித்துப் பாராட்டுகின்றோமோ, அவ்வச் சிறப்புகள் குறித்தே, திருஞான சம்பந்தப் பெருமான் திருநாவுக்கரசரை 'அப்பர்' (தமிழ்நாட்டுத் தந்தை) எனப் பாராட்டிப் போற்றியருளினர் போலும்! "தேசம் உய்ய வந்தவர் " (31—21) "தமிழ்மொழித் தலைவர்" (34—594) எனச் சேக்கிழார் சுவாமிகள் திருநாவுக்கரசரைப் பாராட்டிக் குறிப்பிடும் கழுரைகளும் ஈண்டுக் கருயுணர்தற்குரியன.

முடிப்புத் தொகுப்புரை :

இதுகாறும் கூறியவாற்றால், அப்பர் சமண சமயம் சார்ந்து இருந்தபோதுதான் அவருக்குச் சூலைநோய் தோன்றியது என்றும்; கொல்லாது சூலைநோய் குடர்முடக்கத் தீராது என்று சமணர் எல்லாம் கைவிட்டதனால்தான், 'ஒவ்வா இப் புன்சமயத்து ஒழியாத இத்துயர் ஒழியச் செவ்வாறு சேர் திலகவதியார் தாள் சேர்வேன்' என்று அப்பர் திருவதிகை வீரட்டானம் அடைந்து, 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' என நீடிய கோதில் திருப்பதிகம் பாடியருளினார் என்றும்; அத்திருப்பதிகம் பாடிய பின்னரே அவருக்குச் சூலைநோய் தீர்ந்தது என்றும்; அச்சூலைநோய் அப்பருக்கு இறையருளால் விளைந்ததே என்றும்; அஃது அவருக்கு இருமுறை வந்தது என்பதற்குச் சான்றில்லை என்றும்; அப்பரை இறைவன் சூலை மடுத்துச் சிவநெறி மீளச்செய்த திருவருட் செயல், தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் பல்லாற்றானும் நன்மை விளைத்தது என்றும், அப்பர் பெருமான் தமிழர் அனைவராலும் ''தமிழ்நாட்டுத் தந்தை'' எனப் போற்றிப் புகழத் தகுந்த சிறப்புடையவர் என்றும் இனிது தெளியலாம்.

—ஆசிரியர்



திருத்துறைப் பூண்டி வட்டம், துளசியா பட்டினம், திரு. சீநிவாசப் பெருமாள் கோயிலில் குடமுழுக்கு விழா நடைபெற்ற போது நாகை உதவியாணையரும், கோட்டாட்சியரும் கலந்து கொண்டு சிறப்பித்தல், (10—4—72).

அப்பர்: "தமிழ்நாட்டுத் தந்தை"

மன்னர்மன்னன் எனத்திகழ்ந்த **மகேந்திரனின்** வன்கண்மை மாற்றி ஆட்கொண்(டு),
அன்னவனுல் தமிழகத்தில் அருங்கருங்கற் றளிகள்பல அழகின் ஓங்கி,
முன்னம்இலாப் பெருநிலையில் முதன்முதலா முகிழ்க்கவைத்த, **முனிவர் அப்பர்**
என்னின், அவர் **பெருந்தகைமை, பேருதவி** நலங்களுக்கோர் எல்லை யுண்டோ ? (1)

நமைஅரசன் செய்வதெவன் ? "**நாம்ஆர்க்கும் குடியல்லோம்**" என நவின்றே,
இமயமுதற் குமரிவரை எண்ணிலபல் தலங்கள்சென்று, இறைவற் போற்றித்
தமிழ்மொழியும் தமிழ்க்கலையும் தமிழ்ப்பண்பும் எலாம்தழைக்கச் செய்த, சைவ
சமயநெறி **மெய்யுணர்வின் தலைவர் அப்பர்** எனின், அவர்தம் சால்பென் சொல்கேம்? (2)

உண்ணு நோன்பு கடைப்பிடித்தும், **உண்மை** அறப்போர் உஞற்றிநின்றும்,
விண்ணேர் தாமும் வியந்துவப்பப் புலன்கள் செற்று வெற்றிகொண்டும்,
மண்ணேர் வாழச் சிறந்தநல்ல **மக்கட் பணிகள்** பலபுரிந்தும்,
தண்ணுர் அருளால் **உலகஒளி** தானுர், அப்பர் தாள்பணிவாம் ! (3)

இந்நாளில் நாம்காண இனியநல்ல **காந்தியண்ணல்** உலகம் எல்லாம்
என்னேமற் றிவர்பெருமை எனவியப்ப வாழ்ந்திருந்தார் ! இனிதி வர்போல்,
அந்நாளில் **ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளின்முன்** அப்பர் என்னும்
நம்நாவுக் கரசர்பிரான் நனிவாழ்ந்தார் ! இவர்களைநாம் நயந்து வாழ்வாம் ! (4)

இலக்கியத்தில் "**தமிழன்**"எனும் இனியசொல்லை முதன்முதலா இணைய வைத்துக்
கலக்கமறத் "**தமிழன்**"எனக் கடவுளையும் தான்கண்டு, கனிவிற் போற்றி,
நிலைத்தகைய **திருவிருத்தம், நேரிசை,**தாண் டகம்முதலா நெஞ்சு ருக்கும்
நலத்தகைய கவிதைபொழி **நாவரசாம் அப்பர்பிரான்** நற்ருள் போற்றி ! (5)

சூலைநோய் தலைக்கீ டாகத் தொல்சிவ நெறிக்கு மீண்டு,
மூலையும் முடுக்கர் தோறும் **முத்தமிழ்** முழங்கும் வண்ணம்,
சாலநற் **புரட்சி** செய்த **தமிழ்நாட்டுத் தந்தை** யாகும்
சீலமார் **அப்பர் பெம்மான்** சிறப்பெலாம் போற்றி யுய்வாம் ! (6)

—ந. ரா. முருகவேள்.

திருநாவுக்கரசரின் திருப்பாடல்கள்

திரு. கே. எஸ். நரசிம்மன், B.A.B.L., I.A.S.,

ஆணையர்,

அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

திருநாவுக்கரசர் தமிழ் நாட்டின் தலை சிறந்த ஒரு பெருஞ் சான்றோர். சிறந்த பக்தர். ஒப்புயர்வற்ற சமயப் பெரியார். இணையற்ற பெரும் அருளாளர். சிறந்த சிவஞானச் செல்வர். சைவசமய ஆசிரியர்கள் நால்வருள் ஒருவர். தேவாரம் என்னும் சிறந்த தெய்விகத் திருப்பாடல்களை அருளிச் செய்த அருட்பெருங் கவிஞர். தமிழ்நாட்டுச் சமய வளர்ச்சி பற்றிய சரித்திரத்தில், அவர் மிகவும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றார். "ஞானத்தவமுனிவர்" என்றும், 'தமிழ்மொழித்தலைவர்' என்றும், 'தாண்டகவேந்தர்' என்றும், பிறவாறும் சேக்கிழார் பெருமான் அவரை மிகவும் புகழ்ந்து போற்றுகின்றார்.

திருநாவுக்கரசர், திருவிருத்தம் திருநேரிசை திருக்குறுந்தொகை திருத்தாண்டகம் என்னும் அரிய இனிய பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளார். அவைகள் அனைத்தும் எளிமையும் இனிமையும் உருக்கமும் உணர்ச்சிப் பெருக்கமும் வாய்ந்து, அன்புடன் ஓதுபவர்தம் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொள்ள வல்லனவாகத் திகழ்கின்றன.

இறைவனின் திருவடியின்பத்தை அவர் விளக்கியிருக்கும்முறை பெரிதும் வியக்கத்தக்கதாக உள்ளது. நல்லஇளவேனிற் காலம்-இனியமாலை நேரம்-மென்மையான தென்றற் காற்று-குளிர்ச்சிமிக்க தாமரைப்பூந் தாடகம்-முழுநிலாவின் தண்ணொளி என்பன பலவும் ஒருங்கியைந்த நிலையில், ஓர் ஒப்புயர்வற்ற கலைஞன் குற்றமற்ற வீணையை எடுத்துமீட்டி இசை மழை பொழிந்து இன்புறுகின்றான். அவ் இசைக் கலையின் வெள்ளத்தில் மிதக்கும் போது அவன் உள்ளம், எத்தகைய குளிர்ச்சியும் இன்பமும் அமைதியுமுற்றுச் சிறந்து திகழுமோ, அத்தகைய நிலையில் இன்பமும் குளிர்ச்சியும் அமைதியும் மிக்கதாக இறைவனின் திருவடிநிழல் விளங்கும் எனத் திருநாவுக்கரசர் அழகுறப் பாடுகின்றார்.

"மாசில்வீணையும் மாலை மதியமும்,
வீசுதென்றலும் வீங்கிளவேனிலும்,
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே,
ஈசன் எந்தை இணையடி நிழலே"

எனவரும் திருநாவுக்கரசர் பாடல், எவ்வளவு இனிமை மிக்கதாக விளங்குகின்றது! எளிய இனிய சொற்களில், மிகவும் சிறியதொரு செய்யுளில், இறையருள் இன்ப நலத்தினை எவ்வளவு அழகாகத் திருநாவுக்கரசர் விளக்கியிருக்கின்றார். பாடல் சிறியதேயாயினும், அதன் அனுபவப் பயன் மிகமிக உயர்ந்ததாக விளங்குகின்றது.

உடம்பை ஒரு வீடாகவும் அதன்கண் உள்ளத்தை ஒரு தகளியாகவும் உருவகம் செய்து, உள்ளமாகிய அத்தகளியில் உணர்வு என்னும் நெய்யை வார்த்து, உயிர்ப்பு என்னும் திரியினைச் செவ்விதின் அமைத்து, ஞானம் என்ற சுடரை ஏற்றி, அந்த ஞானவிளக்கின் ஒளியைக்கொண்டு நோக்கினால், நாம் இறைவனின் திருவடிகளைக் காணும்பேறு பெறலாம். இதனை,

உடம்பெனும் மனை அகத்துள்
உள்ளமே தகளி யாக;

மடம்படும் உணர்நெய் அட்டி,
உயிர்எனும் திரி மயக்கி,

இடம்படு ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கில்;
கடம்பமர் காளை தாதை
கழலடி காண லாமே

எனவரும் செய்யுளில் திருநாவுக்கரசர் அழகுற விளக்கிக் காட்டி அருள்கின்றார். காணமுடியாத கடவுளின் கழல்களைக் காண்பதற்குத் திருநாவுக்கரசர் கூறியிருக்கும் இந்தச் செவ்விய இனிய நல்ல நெறிமுறை நாம் பெரிதும் உணர்ந்து போற்றுதற்குரியதாகும்.

வாழ்க்கை அல்லது பிறவி என்பது, ஒரு பெரும் கடல். அந்தக் கடலில் வீழ்ந்து நாம் தத்தளித்துக் கொண்டிருக்கின்றோம். அக்கடலைக் கடப்பதற்கு மனம் ஒரு தோணியாக அமைகின்றது. அத்தோணியை இயக்குவதற்கு மதி என்னும் கோலை ஊன்றுகின்றோம். அதன் உதவியால் அத்தோணி ஒரு சிறிது செல்லத் தலைப்படுகின்றது. ஆனால் அத்தோணியில் நாம் நல்ல சரக்கை ஏற்றிக் கொள்ள வில்லை. காம வெகுளி மயக்கங்கள் முதலிய தீய சரக்குகளையே மிகுதியாக அடுக்கி ஏற்றிக் கொண்டிருக்கின்றோம். தாங்க முடியாத அத்தீய சரக்குகளை ஏற்றிக் கொண்டு மனமெனும் தோணி, கொந்தளிப்பான அலைகள் மிக்க வாழ்க்கைப் பெருங்கடலில் சென்று கொண்டுள்ளது. ஆனால் அந்தோ! அது, காமம் (அறியாமை) என்னும் பாறையின் மீது மோதிக் கவிழ்ந்து விடுமோ என்னும் நிலையில் இடர்ப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கவிழ்ந்து விடுமாயின், யான் உன்னை அறிந்து கொள்ளுதல் இயலாது. ஆதலின் இப்போதே உன்னை யான் நினைத்து வழிபடும் நல்லுணர்வை எனக்குக் கொடுத்து அருள்வாயாக! எனத் திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைத் திருநாவுக்கரசர் வேண்டிக் கொள்ளுகின்றார்.

"மனம்எனும் தோணி பற்றி
மதிஎனும் கோலை ஊன்றிச்
சினம்எனும் சரக்கை ஏற்றிச்
செறிகடல் ஓடும் போது,
மதன்எனும் பாறை தாக்கி,
மறியும்போது அறிய ஒண்ணாது;
உனையுனும் உணர்வை நல்காய்
ஒற்றியூர் உடைய கோவே".

திருநாவுக்கரசர்திருவொற்றியூருக்கு எழுந்தருளிச் சிவபிரானை வழிபட்ட போது அங்குள்ள கடற்கரையில் மக்கள் பலர் தோணிகளில் சரக்கேற்றிக் கொண்டு திரைகடல் ஓடித் திரவியம் தேடச் செல்லும் காட்சிகளைக் கண்டு, இத் திருப்பாடலை அருளிச் செய்தனர் போலும்!

திரைகடல் ஓடிப் புரியும் வணிகத்தை மட்டுமோ, தமிழகத்திற்குரிய விழுமிய தொழிலாகிய உழவுத் தொழிலையுங்கூட, நம் திருநாவுக்கரசர் நயம் சிறக்க உருவகமாக்கிப் பாடுகின்றார். உள்ளமாகிய வயலில், மெய்ம்மை அல்லது சத்தியம் என்னும் உழவைச் செய்து, விருப்பம் அல்லது அன்பு என்னும் வித்தை விதைத்தல் வேண்டும். அதில் பொய்ம்மை முதலிய குற்றங்கள் தோன்றுதபடி, களை எடுத்தல் வேண்டும். பொறுமை என்னும் நீரைப் பாய்ச்சுதல் வேண்டும். புறப்பொருள்களை நோக்காமல் தம்மைத் தாமே அகமுக நாட்டத்தால் உள்நோக்கிக் காணுதல் வேண்டும். உள்ளமாகிய வயலில், அன்பாகிய விதை விதைத்து வளர்த்த ஞானமாகிய பயிருக்குத் தகவு அல்லது தருமம் என்னும் வேலியிடுதல் வேண்டும். இத்தகைய செம்மையான நெறியில் நின்று ஒழுகினால், சிவகதி என்னும் மேலான பயன் விளைந்து நலம் பயக்கும். இதனை,

"மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறைஎனும் நீரைப் பாய்ச்சித்
தம்மைஉள் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்பர் ஆகிற்
சிவகதி விளையும் அன்றே".

எனவரும் திருப்பாடலில் திருநாவுக்கரசர் சுவை கெழுமி, இன்பம் பெருக அருளிச் செய்திருக்கின்றார்.

இத்தகைய எத்தனையோ பல, அருமை பெருமை மிக்க சிறந்த அருளுபதேசங்கள் பலவற்றைத் திருநாவுக்கரசர் பாடிய தேவாரத் திருப்பதிகங்களில் நாம் கண்டு பயின்று பயன் பெற்று மகிழலாம். கவிதை நயம் காண்போர்க்கும், இலக்கிய இன்பம் விரும்புவோர்க்கும், திருநாவுக்கரசர் முதலிய நம் அருட்பெருஞ் சான்றோர்கள் அருளிச் செய்துள்ள பாடல்கள் அனைத்தும், ஓர் அரும்பெரும் ஞானப் புதையலும், கலைக்களஞ்சியமுமாகும். அவற்றைப் போற்றிப் பயின்றுநாம் இன்புறுவோமாக!

திருப்பணி செய்வதன் சிறப்பு

மாண்புமிகு
திரு. மு. கண்ணப்பர் அவர்கள்,

அறநிலைய அமைச்சர்

தமிழ்நாடு கோயில்கள் நிறைந்த, சிறந்த தெய்விக நாடு. வேறு எந்த நாட்டிலும், தமிழ் நாட்டிற் போலச் சுமார் 1500 ஆண்டுகட்கும் மிக முற்பட்ட, பற்பல பெருங் கோயில்கள் நூற்றுக்கணக்காக இருப்பதாகத் தெரியவில்லை. சுமார் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்ற தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியம் என்னும் தமிழ்ப் பெரும் இலக்கண நூலில், 'கோயில்' என்னும் சொல்லுக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அக்கோயில்களில் படிமைகள் வைத்து வணங்கப் பெற்றமை பற்றிய குறிப்பும் காணப்படுகின்றது. தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வதற்குரிய காரணங்களுள் ஒன்றாக அறப்புறங்காவல்-அதாவது அறங்களையும் அறநிலையங்களையும் சரியாக நடைபெறுகின்றனவா என்று பார்த்துப் பாதுகாப்பதற்காக நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று வருதல், ஒரு காரணமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

இக் குறிப்புக்களினால், 5000 ஆண்டுகளுக்கு முன்னரேயே, தமிழ் நாட்டில் கோயில்களும், அவற்றில் இறைவனின் திருவுருவப் படிமைகளும், அவற்றிற்காகச் செய்யப்படும் வழிபாடுகளும், அவ்வழிபாட்டை யொட்டிச் செய்யப்படும் பலவகை அறங்களும் இருந்து வந்தன என்று, நாம் ஓரளவு ஊகித்து அறிந்து கொள்ள முடிகின்றது.

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளிலேயே, கோயில்களில் நாடோறும் நடைபெறும் நித்திய பூசைகளும், பருவம் மாதம் ஆண்டு முதலிய காலங்களில் பெரிய அளவில் நடைபெறும் நைமித்திகங்கள் என்னும் சிறப்பு விழாக்களும் செய்யப்பெற்று வந்தன என்பது, "சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு" என்னும் திருக்குறளால் ஊகித்து உணரக் கிடக்கின்றது.

சுமார் 1800 ஆண்டுகளுக்கும் முற்பட்ட சிலப்பதிகாரத்தில், புகார்க் காண்டத்தில், புகார் நகரில், அமரர்தருக்கோட்டம்—வெள்யானைக் கோட்டம்—புகர்வெள்ளை நாகர் தம் கோட்டம்-பகல்வாயில் உச்சிக்கிழான் கோட்டம்—ஊர்க்

கோட்டம்—வேற் கோட்டம்—வச்சிரக் கோட்டம்—புறம்பணையான்வாழ் கோட்டம்—நிக்கந்தக் கோட்டம்—நிலாக் கோட்டம்—என்று எத்தனையோ பற்பல கோயில்கள் இருந்தன என்று, இளங்கோவடிகள் கூறுகின்றார்.

பண்டைக் காலத்தில் பல்லவப் பேரரசர்களும், அவர்களுக்கும் பின்வந்த தமிழகத்தின் முடியுடை மூவேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர்களும், எண்ணில்லாத பல எழில் மிக்க கோயில்களை எடுப்பித்துள்ளனர். சுமார் 1300 ஆண்டுகளுக்கு முற்பட்ட கோச்செங்கட் சோழன் என்னும் அரசன் ஒருவன் மட்டும் தன் வாழ்நாளில் சிவபெருமானுக்கு 70 மாடக் கோயில்களை எடுப்பித்தான் என்று திருமங்கையாழ்வார், தமது திருப்பதிகத்தில்,

"இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோ
ளீசற்கு
எழில்மாடம் எழுபதுசெய் துலகம்
ஆண்ட,
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த
கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்
களே"

என்று புகழ்ந்து பாடிப் போற்றியுள்ளார்.

கோச்செங்கட் சோழனைப் போலவே, தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய இராசராச சோழன், (கி. பி. 985-1014), கங்கை கொண்ட சோழபுரம் கோயிலைக் கட்டிய இராசேந்திர சோழன் (கி. பி. 1052-1064), மன்னார்குடி இராச கோபால சுவாமி கோயிலைக் கட்டிய முதற் குலோத்துங்கச் சோழன் (கி. பி. 1070-1120), திரிபுவனம் கம்பகரேசுவரர் கோயிலைக் கட்டிய மூன்றாம் குலோததுங்கச் சோழன் முதலிய அரசர்கள் பலரும் கட்டுவித்த கோயில்களின் சிறப்பும் பெருமையும் அளவற்றனவாகும். இவ்வாறே பிற்காலத்தில் விசயநகர அரசர்கள், மதுரை நாயக்கமன்னர்கள் முதலியவர்கள் கட்டுவித்த கோயில்களும் மிகப் பலவாகும்.

இக்கோயில்களெல்லாம் தமிழ் நாட்டிற்குப் பல்லாற்னுலும் பெருஞ்சிறப்பை அளித்து வருகின்றன. இவற்றின் அருமையும் பெருமையும் அழகும் கண்டு வெளிநாட்டவரும் வியந்து புகழ்ந்து பாராட்டுகின்றனர். தமிழ் மக்களின் நாகரிகம் பண்பாடு ஆகியவற்றிற்கு, இக் கோயில்கள் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்ந்து வருகின்றன.

சிற்பம் ஓவியம் இசை நடனம் நாடகம் முதலிய எல்லாக் கலைகளுக்கும், கோயில்களே நிலைக்களமாகவும் உறைவிடமாகவும் விளங்கி வருகின்றன. கோயில்களை மையமாகக் கொண்டே தமிழ் மக்களின் சமுதாய வாழ்க்கை, பல்லாற்னும் பின்னிப் பிணைந்து நிலைபெற்றுச் சிறந்து விளங்கி வருகின்றது.

பழமையும் பெருமையும் மிக்க, இத்தகைய சிறந்த கலைஞான ஆன்மீகச் செல்வங்கள் ஆகிய கோயில்கள்; காலப்போக்கில் நாளடைவில் சிதைந்து போகாமல், என்றும் நின்று நிலவி நிலைபெற்று விளங்கும்படி செய்ய வேண்டுவது, தமிழ் மக்களாகிய நம் எல்லோருடைய கடமையுமாகும். இக் கடமையை அவ்வப்போது நாம் கண்ணும் கருத்துமாக இருந்து செய்து வருதல் வேண்டும் என்னும் கருத்தினாலேயே, நம் புண்டைப் பெரியோர்கள் திருப்பணி செய்தலையும், திருக்குடமுழுக்குவிழாப் புரிதலையும், பெரிதும் வற்புறுத்தி வந்துள்ளனர்.

நம் முன்னோர்கள் நம்பொருட்டு எவ்வளவு அரும்பாடுபட்டு நம் தமிழகத்திலுள்ள எண்ணில்லாத பல கோயில்களை எடுப்பித்துள்ளனர் என்று நாம் கருதியுணர்வோமாயின், கோயில்களுக்குத் திருப்பணி செய்வதன் சிறப்பும் இன்றியமையாமையும் பிறவும் புலனாகும்.

திருவெங்கைத் தலத்தில் அண்ணாமலை ரெட்டியார் என்னும் வள்ளல் ஒருவர் அரிதின் முயன்று கட்டுவித்த திருக்கோயிலின் சிறப்பை விளக்க முற்படும் துறைமங்கலம் சிவப்பிரகாசர், அத்திருக்கோயிலுக்கு நல்லிசைப் புலவர் ஒருவர் நயமுற இயற்றிய செய்யுளை உவமைகூறி மகிழ்கின்றார். திருக்கோயிலின் அமைப்பும் சிறப்பும் கவிஞருக்கு வேறு எதனை நினைவூட்டும்? செய்யுட்கள் பாடிப்பாடிக் கைவந்து தேர்ந்த கவிஞருக்குச் செய்யுளைப் பற்றிய நினைவே மிக்கு எழும் என்று சொல்லுதலும் வேண்டுமோ?

கோயில் கட்டுவோர் இடைவெளி ஏற்படாத வாறு கற்களை வைத்துச் சந்தி பொருத்துவர்; சீர் கொடாமல் அடுக்கி ஒழுங்கு படுத்துவர்; அற்புதமும் அழகும் மிக்க அரிய பல சிற்ப வேலைப்பாடுகளைச் செய்வர். அவ்வாறே செய்

யுள் இயற்றும் கவிஞர்களும் சொற்களைச் சந்தி பிழையாது பொருத்தமுற அமைப்பர்; செய்யுளியலுக்கு ஏற்பச் சீர்கள் கெடாது அடுக்குவர்; அச்செய்யுட்களில் தமது கற்பனைத் திறனுற் புலவர்கள் புகழ்ந்து போற்றும் வண்ணம் உவமை உருவகம் முதலிய அற்புத அணிகள் பலவற்றைப் பொருந்தச் செய்வர். இன்னோரன்ன ஒப்புமைத் தன்மைகள் பலவற்றையும் எண்ணித் துறைமங்கலம் சிவப்பிரகாசர் அருளிச்செய்த,

''சந்தி பொருத்தித் தகுஞ்சீர் கெடாதடுக்கிப்
புந்தி மகிழ்அற் புதஅணித்தாய்-முந்தையோர்
செய்யுள்போற் செய்த திருக்கோயில்........''

எனவரும் திருவெங்கை யுலா வரிகள், எத்துணைக் கற்பனை நயம் மிக்குச் சிறப்பும் பொருத்தமும் வாய்ந்து திகழ்கின்றன.

இவ்வாற்றால் நம் முன்னோர்கள் எவ்வளவு அரும்பாடுபட்டு அழகிய பற்பல கோயில்களை அமைத்துள்ளனர் என்பதையும், அவற்றை அழியவிடாமல் திருப்பணி செய்து போற்றிக் காப்பாற்ற வேண்டுவது நம்முடைய தலையாய கடமை என்பதையும், நாம் நன்கினிது உணரலாம்.

திருப்பணி செய்வதன் சிறப்பையும் கடமையையும் விளக்கும் முறையில், தென்காசிக் கோயிலைக் கட்டுவித்த அரிகேசரி பராக்கிரம பாண்டியன் என்பவன் (கி. பி. 1411—1463), தான் 17 ஆண்டுகள் அரிதின் முயன்று சிற்பக் கலைநலம் பெரிதும் சிறக்கக் கட்டிய கோயிலைப் பற்றி, தனது மரணப் படுக்கையில் இருந்து பாடியுள்ள பாடல்கள், கருங்கல் மனத்தையும் கரைக்க வல்லனவாகும்:

(1) ''காசி விசுவநாதப் பெருமானின் அருளின்படி, மனத்தால் நினைக்கவும் எட்டாத நிலையில், இக்கோயில் ஒருவாறு கட்டப்பெற்றது. இதனை எமக்குப் பின்னர் ஆதரித்துக் காப்பாற்ற இருக்கின்ற அரசர்களின் திருவடிகளை வணங்கி, அவற்றை யான் என் தலைமேல் தரித்துக் கொள்ளுகிறேன்''.

(2) ''இந்தத் தென்காசியில் அமைக்கப்பெற்ற பொன்மயமான இக்கோயிலில், வரக்கூடாத குற்றம் ஏதேனும் வருமானல் அதனை நீக்கி, இக்கோயிலைப் போற்றிப் பாதுகாப்பவர்களைப் பராக்கிரம பாண்டியனுகிய யான், உலகத்தில் உள்ளவர்களெல்லாம் அறியும்படி பணிந்து வணங்குகின்றேன்.''

(3) ''அரிகேசரி பராக்கிரம பாண்டியனுகிய யான், சிவபெருமானின் திருவருளால், இந்தத் தென்காசிக் கோயிலைக் கட்டி, அது நன்கு நிலைபெறுவதற்காகவேண்டியஎல்லா அறங்களையும் செல்வங்களையும் ஏற்பாடு செய்துள்ளேன். இதனை அன்புகொண்டு திரிசேர்ந்த தீபம் போலக் கண்ணும் கருத்துமாகப் போற்றிக் காப்பாற்றி வருபவர்களுடைய பொற்பாத கமலங்களை. யான் என் தலைமேல் சூடிக்கொள்ளுகின்றேன்''.

(4) ''சாத்திரங்களை ஆராய்ந்து, அவற்றின்படி யான் ஏபபாடு செய்துள்ள, பூசைகளை நடைபெறும்படி செய்து, இந்தக் கோயிலைப் பாதுகாக்கும்படி, எனக்குப் பின்னுல் என்னுடைய குடும்பத்தில் வருகின்ற அரசர்களிடம், பராக்கிரம பாண்டியனுகிய யான், அடைக்கலமாக ஒப்படைக்கின்றேன்''.

என்று கருங்கல் மனமும் கரைந்து உருகும்படி தன் மரணப் படுக்கையிலிருந்து பராக்கிரம பாண்டியன் எழுதியுள்ள இப்பாடல்களின் கருத்தை நினைக்குந்தோறும், கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்ய வேண்டுவதின் சிறந்த கடமை, நமக்கு நன்கு புலனுகும். அப்பாடல்கள் பின்வருவன ஆகும்.

'' மனத்தால்,வகுக்கவும் எட்டாத
கோயில் வகுக்க முன்னின்று
எனைத்தான் பணிகொண்ட நாதன்
தென்காசியை, என்றும்மண்மேல்
நினைத்தாதரஞ் செய்து தங்காவல்
பூண்ட நிருபர் பதந்
தனைத்தாழ்ந் திறைஞ்சித் தலைமீதில்
யானும் தரித்தனனே ''.

'' ஆராயினும் இந்தத் தென்காசி மேவும்
பொன் ஆலயத்து
வாராததோர் குற்றம் வந்தால்
அப்போது அங்கு வந்ததனை
நேராகவே யொழித்துப் புரப்
பார்களை நீதியுடன்
பாரார் அறியப் பணிந்தேன்
பராக்கிரம பாண்டியனே ''.

"அரிகேசரிமன் பராக்கிரம
மாறன் அரனருளால்
வரிசேர் பொழிலணி தென்காசிக்
கோயில் வகுத்துவலம்
புரிசேர் கடற்புவி போற்றவைத் தேன்;
அன்பு பூண்டிதனைத்
திரிசேர் விளக்கெனக் காப்பார்
பொற்பாதம் என் சென்னியதே".

"சாத்திரம் பார்த்திங்குயான் கண்ட
பூசைகள் தாம் நடாத்தி
ஏத்தி அன்பால் விசுவநாதன்
பொற்கோயில்
என்றும் புரக்கப்
பார்த்திபன் கொற்கைப் பராக்கிரம
மாறன், பரிவுடன் நம்
கோத்திரந் தன்னிலுள் ளார்க்கும்
அடைக்கலங் கூறினனே".

இப்பாண்டிய மன்னன் போலவே, கோயில் கட்டிய மற்றைய எல்லா அரசர்களும், பெரியோர்களும்கூட நினைத்திருப்பர். அம் முன்னோர்களுடைய விருப்பத்தையும் உருக்கத்தையும் உணர்ந்து, நாம் தமிழகத்திலுள்ள எல்லாக் கோயில்களுக்கும் சிறப்பாகத் திருப்பணி புரியக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இது நமது தலையாய கடமை. இம்மைக்கும் மறுமைக்கும் பயன் விளைவிக்கக்கூடிய சிறந்த செயல். நாட்டுக்கும் உலகுக்கும் நலம் விளைவிக்கக்கூடிய அரும் பெரும் தொண்டு. திருப்பணி புரிவதன் மூலமாக, நாம் அடையும் நலங்களுக்கு அளவேயில்லை. ★

அறிவிப்பு

திரு. இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசுவரம்.

இராமேசுவரம் டவுன், வடக்கு ரத வீதியில் 10-வது வார்டு, கதவு எண் முப்பது (30) உள்ள "யாழ்ப்பாண மடம்" எனப்படும் கட்டிடம், அதன் உரிமையாளரால் இராமேசுவரம் திருக்கோயிலுக்கு முறைப்படி ஒப்படைக்கப்பட இருப்பதால், ஷெ சொத்தை எந்தவிதமான பந்தக, பராதீனமும் செய்ய வேறு யாருக்கும் உரிமையில்லை என்றும், திருக்கோயிலுக்குப் பாத்தியமாகும் ஷெ சொத்தின் பேரில் வேறு யாராவது பந்தக பராதீனங்கள் செய்துகொண்டால், அது செல்லத்தக்கதல்ல என்றும், இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

திரு. வி. முனுசாமி, B.A.,
நிர்வாக அதிகாரி,
திரு. இராமநாதசுவாமி திருக்கோயில்,
இராமேசுவரம்.

இராமேசுவரம்,
26—4—1972.

உண்ணாமுலை அம்மை

(திருவண்ணாமலை)

ஞானப் பெருந் தொண்டர்

திரு. டாக்டர் மு. வரதராசனார், M.A., M.O.L., Ph. D.,

துணைவேந்தர், மதுரைப் பல்கலைக் கழகம்.

காந்தியடிகளால் உலகறியச் செய்யப்பட்டது, 'சத்தியாக்கிரகம்' என்னும் அன்புவழிப் போராட்டம். காந்தியடிகளால் அதன் பெருமை தெளிவாக்கப்பட்டது; அதன் முறை நன்கு பயன்படுத்தப்பட்டது; அரசியல் துறைக்கும் உரியது அது எனப் புலப்படுத்தப்பட்டது. ஆனால் அந்த அன்புவழிப் போராட்டம் முன்னமே நம் நாட்டில்இருந்து வந்த ஒன்று. திருநாவுக்கரசு நாயனார் நம் நாட்டில் முதல் சத்தியாக்கிரகியாக விளங்கிய சான்றோர் என்று திரு. வி. க. கூறுவது உண்டு. பழையாறை வடதளியில் சிவபெருமான் திருவுருவம் மறைக்கப்பட்டதை உணர்ந்து உண்ணாநோன்பு இருந்து, அங்குப் பண்டைய நிலைமை நிலவுமாறு செய்த பெருமை அவர்க்கு உரியதாகும். அவருடைய சத்தியாக்கிரக உண்ணாநோன்பால், அரசன் மனமாற்றம் அடைந்து ஆவன செய்தான் என்று வரலாறு கூறுகின்றது.

கல்வி கேள்வியறிவில் சிறந்த அறிவாளிகள், உடலுழைப்பும் செய்ய வேண்டும் என்பது இந்த நூற்றாண்டில் சான்றோர் சிலர் அறிவுறுத்தி வரும் கொள்கையாகும். டால்ஸ்டாய், காந்தியடிகள் முதலான பலர் அந்தக் கொள்கையின் படியே வாழ்வு நடத்தி வழிகாட்டினார்கள். அறிவால் உணர்வால் தொண்டு செய்தல் மட்டும் போதாது. உடலுழைப்பாலும் தொண்டு செய்தல் வேண்டும் என்பதே, பழங்காலக் கோயில் வழிபாட்டில் அமைந்திருந்தது. அவ்வாறு பழங்காலத்திலேயே கோயில் வழிபாட்டில் உடலுழைப்பின் பெருமை விளங்க வாழ்ந்து காட்டிய சிறப்பும், அப்பர் பெருமானுக்குஉண்டு. கையிலே உழவாரம் ஏந்தி ஊர் ஊராகச் சென்று, ஆங்காங்கே கோயில் தோறும் கல்லும் புல்லும் ஒதுக்கித் தூய்மைப்படுத்தியவர் அவர். 'தருமசேனர்' என்ற உயர்பட்டம் பெற்றுச் சைன அறிஞர் கூட்டத்தின் தலைவராக விளங்கிய அறிஞர்—கற்றறிந்தவர்க்குத் தாம் வரம்பாய்த் திகழ்ந்த தெளிவினர்—இனிய செந்தமிழ்ப் பாக்களை இசையுடன் ஆயிரக் கணக்கில் பாடிய கலைஞர்-அந்த உழவாரத்தை விடாமல் ஏந்திச் சென்று கோயில் தோறும் கையால் தொண்டு செய்த புதுமை, இந்த நாட்டில் பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்தது என்பதை உணரும் போது உள்ளம் வியப்பில் ஆழ்கிறது. காந்தியடிகளுக்கு நூல் நூற்கும் இராட்டினம் போல், அப்பர் பெருமானுக்கு உழவாரப்படை கைத்தொண்டின் அறிகுறியாக விளங்கியது என்பதை உணர்ந்து போற்றல் வேண்டும்.

இன்னொருவகையிலும் திருநாவுக்கரசரின் பெருவாழ்வு, இக்காலத்துக் காந்தியடிகளின் பெருவாழ்வுக்கு முன்னோடியாக விளங்கியது. கடவுளையும் கடவுளாட்சியையுமே போற்றி வாழும் உறுதியான நெஞ்சம் பெற்றுவிட்டவர்கள், இவ்வுலகத்து இன்ப துன்பங்களையும், ஆட்சியின் அதிகாரப்பெருமைகளையும் பொருட்படுத்துவது இல்லை. அத்தகைய உத்தமர்கள் இறைவன் ஒருவனுக்கே தாம் ஆட்பட்டவர்கள் என்றும், வேறு எந்த மண்ணுலக வேந்தனுக்கும் தாம் கடமைப்பட்டவர்கள் அல்லர் என்றும் தெளிவு கொண்டு, பெருமிதத்துடன் வாழ்பவர்கள். ஆதலின் அவர்கள் அரசாட்சியின் அடக்குமுறையைக் கண்டோ, வேறு இன்னலைக் கண்டோ, சிறிதும் அஞ்சுவதில்லை. அப்பர் பெருமானின் வாழ்க்கையில் நேர்ந்த மாறுதலை எண்ணி வெறுப்பும் பகையும்

கொண்டு அவரைத் துன்புறுத்த முனைந்தான் அக்காலத்து அரசன். அந்நிலையில் அரசனுடைய ஆட்களைப் பார்த்து அவர் பாடிய பாடல், பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்க திருப்பாடல் ஆகும்.

நாமார்க்கும் குடிஅல்லோம்
நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்
நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணிஅறியோம்
பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும்
துன்பம் இல்லை
தாமார்க்கும் குடி அல்லாத்
தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண்
குழைஓர் காதிற்
கோமாற்கே நாம் என்றும்
மீளா ஆளாய்க்
கொய்ம் மலர்ச்சே வடியிணையே
குறுகி னோமே.

எல்லாம் வல்ல இறைவன் ஒருவனே இந்த உலகை எக்காலத்திலும் ஆண்டுவரும் தலைவன் என்றும், அவனுடைய ஆட்சிக்கே தாம் கட்டுப்பட்டவர் என்றும் உணர்ந்துவிட்ட சான்றோர் 'நாம் ஆர்க்கும் குடி அல்லோம்' என்று அஞ்சாமையுடன் எடுத்துரைத்தார். தனிமனிதனின் உரிமையைச் சாய்க்கும் சக்தி தோன்றக்கூடாது என்றும், மனச்சான்றின் படி நடக்க ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை இருக்க வேண்டும் என்றும் தெளிவாக எடுத்துரைத்து, அதற்காகப் போராடியவர் காந்தியடிகள். அவ்வாறு போராடுவதால் நேரும் துன்பங்களை எல்லாம் துன்பமாகவே கருதாதவர் அவர். பல ஆண்டுகள் சிறையில் கிடக்க நேர்ந்த காலங்களிலும் மனம் கலங்காதவர் அவர். அவர் பெற்ற தெளிவிலும், போராடிய போராட்டத்திலும் அடிப்படையாக விளங்கியது எது? உண்மை என்னும் தெய்வம் தவிர,வேறு எந்த மண்ணுலகச் சக்திக்கும் தாம் கட்டுப்படக் கூடாது என்று பூண்ட உறுதியே ஆகும். அதனாலேயே வரலாறு காணாத வல்லரசாக விளங்கிய ஆங்கில அரசாங்கத்தைச் சிறிதும் பொருட்படுத்தாமல் எதிர்க்க அவரால் முடிந்தது. 'நாம் ஆர்க்கும் குடி அல்லோம்' என்ற பொன் மொழியில் புலப்படும் அப்பர் பெருமானின் அஞ்சா நெஞ்சம் அத்தகைய கடவுளாட்சியில் உறுதியான பற்றுக் கொண்டது. மண்ணுலகத்துப் பதவியும் பரிசும் அத்தகைய நெஞ்சத்தைக் கவர முடியாது; அடக்குமுறையும் அதிகாரமும் அச்சுறுத்தவும் முடியாது. 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற வீர முழக்கத்தில், அந்த உறுதியும் அஞ்சாமையும் தெளிவாக விளங்குகின்றன.

கடவுள் நெறியில் உணர்ந்து வாழ்க்கை நடத்திப் பயின்றவர்களுக்கு மரணம் பற்றிய அச்சமும் இல்லை. 'சாதலை முன்னம் அஞ்சேன்' என்று எடுத்துரைக்கும் வீரம் அவர்களுக்கு இயல்பானது. 'நமனை அஞ்சோம்' என்று நாவுக்கரசர் கூறுவதில் அந்தப் பெருமிதமும் காண்கின்றோம். 'உடல் நான் அன்று' என்று வாயால் பேசுதல் எளிது, ஆனால் உடலுக்கு ஊறுவிளைக்கும் நோய் வந்து உற்றபோது, 'உடல் நான் அன்று' என்று உணர்வோர் எத்தனை பேர்? மரணம் என்னை என்ன செய்யும் என்று, அதனைப் பொருட்படுத்தாமல் புறக்கணிக்கும், பெருமிதம் வெறுங்கல்வியாலும் கேள்வியாலும் மட்டும் வராது. கடவுள் நெறியில் உறுதியான உணர்வு பெற்றுத் தெளிந்து வாழ்வோர்க்கு மட்டுமே அது கைகூடுவதாகும். நாவுக்கரசர் 'உறவுகோல் நட்டு' உணர்வுகயிற்றினால் முறுக வாங்கிக் கடைந்து ஞானப்பேறு பெற்றவர். ஆகையால், அவர்க்கு அது எளியது ஆயிற்று.

மரணத்துக்குப் பிறகு மறுமையில் என்ன நேருமோ என்ற கவலையும் நாவுக்கரசர்க்கு இல்லை. நரகமே வாய்ப்பதானாலும் அங்கும் இடர்ப்படுதல் இல்லை என்ற நம்பிக்கை அவர்க்கு இருந்தது. 'எள்ளேன் நரகம் புகினும்' என்ற மாணிக்க வாசகரின் தெளிவும் அத்தகையதே ஆகும். எங்கும் உள்ள இறைவன் நரகத்திலும் உள்ளான்; அவனுடைய அருளாட்சி இல்லாத இடமில்லை என்றால் நரகத்தை நினைத்துக் கவலையுறுதற்குக் காரணமே இல்லை. இறைவனுடைய அருளை நம்பி வாழும் பேறு பெற்றமையால் 'நரகத்தில் இடர்ப்படோம்' என்றார். எது கிடைக்கும் என்று பெறுவதைப் பற்றிக் கருதாமல், எப்படி வாழ்வது என்று நெறியைப் பற்றியே கருதும் உள்ளம் பெற்ற சான்றோர் அவர் என்பதை இதனால் தெளியலாம்.

அவ்வாறு நெறியைப் போற்றுதலே தம் கடமை என்பதை அடுத்து அறிவுறுத்துகின்றார். நரகத்தில் இடர்ப்படாமல் வாழ முடியும் என்ற நம்பிக்கைக்குக் காரணம், இடர்ப்பாட்டுக்கு வித்தான பொய்ம்மை, தம் வாழ்வில் இல்லை என்பதைத் தெளிவாக்குகிறார். 'நடலை இல்லோம்' என்கிறார். நடலையான பொய்ம்மை இல்லாத வாழ்வு எம் வாழ்வு, என்ற கூறவல்ல தூய்மை வாழ்வில் ஒளிரும்போது, அவர் எந்த இடர்ப்பாட்டுக்கு ஏன் அஞ்ச வேண்டும்? ஆகவே தலைகுனிவு இல்லாத பெருமிதமான வாழ்வு எம் வாழ்வு. இடர்ப்பாடு இல்லாத காப்பு அமைந்த வாழ்வு எம் வாழ்வு என முழங்குகின்றார். 'ஏமாப்போம்' என்கிறார்.

பொய்ம்மையும் இடர்ப்பாடும் இல்லாத வாழ்வில், மனத்தின் கவலை காரணமாக உடலில் விளையும் நோய்களுக்கு இடம் இல்லை. மனத்தின் மெலிவும் அலைவும் நாடி நரம்புகளை அரித்து இரத்தத்தைக் கெடுத்துப் பல நோய்களை ஏற்படுத்துகின்றன என்பதை இக்காலத்து மருத்துவ நூலார் உடன்பட்டு வருகின்றார்கள். நெறியில் நிலைத்துவிட்ட சான்றோர்களின் தூய வாழ்வில் அத்தகைய நோய்கள் தோன்றுவதற்கு இடமில்லை. அதனால் தான் 'நடலை இல்லோம் ஏமாப்போம்' என்ற திருநாவுக்கரசர் தயங்காமல் 'பிணி அறியோம்' என்றும் முழங்கினார்.

தூய்மையும் வீரமும் இணைந்த அந்தப் பெருவாழ்வு இறைவன் ஒருவனைத் தவிர வேறு யாரையும் பணியாத சிறப்பு உடையது. 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று தம் உரிமையை முழக்கிய அவர், ஆட்சிக்கு மட்டும் இல்லாமல் வேறு எதற்கும் பணிவதில்லை என்பதைத் தெளிவுபடுத்த, 'பணிவோம் அல்லோம்' என்கிறார். கணவன் ஒருவன் தவிர வேறு எந்த ஆடவனின் ஆண்மையையும் பொருட்படுத்தாத கற்புடைமை போன்ற திட்பம், கடவுளடியார்களுக்கு உண்டு. அந்தத் திட்பத்தையே 'பணிவோம் அல்லோம்' என்ற தொடர் புலப்படுத்துகின்றது.

இறுதியாக, நாவுக்கரசர் தம் கொள்கைத் தெளிவாகக் கூறிய கருத்து, 'இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை' என்பது ஆகும். உலகை ஒரு குடைக் கீழ் ஆளுகின்றோம் என்ற அரச செல்வம் பெற்றவர்களும், எமக்கு நிகரான செல்வம் பெற்றவர்களும், கல்வியறிவில் எம்மை வெல்லவல்லார் எவரும் இல்லையென்று செருக்குக் கொள்ளும் கல்விச் செல்வம் பெற்றவர்களும், ஆகிய பலர் வாழ்க்கையை வரலாறு கண்டிருக்கிறது. 'ஆனால் அவர்களுள் யாரும் 'இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை' என்று முழங்க முடியாது. சேரன் செங்குட்டுவன் போன்ற வீர மன்னர்களும் ''துன்பம் அல்லது தொழுதகவு இல்லை'' என்றே தம் முடியாட்சியின் அனுபவத்தைப் பற்றிக் கூறியுள்ளனர். 'கிரீடம் சூடும் தலையில்தான் கவலை குடிகொள்கின்றது'என்று, ஆங்கில நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியர் விளக்குகிறார், பெருஞ் செல்வர்களே பெருங் கவலையாளர்கள் என்பதை இன்றைய சூழ்நிலையிலும் காணலாம். கல்வியில் தேர்ந்த அறிஞர் பலர் வாழத் தெரியாதவர்களாய்க் கலங்குவதை இன்றும் காணலாம். இந்நிலையில் நாவரசர் போன்ற அருள் நெஞ்சச் சான்றோர்களே துன்பமற்ற அமைதியான வாழ்வு வாழ்கின்றவர்கள் என்பதை ஐயமின்றி உணரலாம். அதை அவர் கூறும் போது எவ்வளவு தெளிவாக, அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார். ஒரு சில காலம் மட்டும் உள்ள நிலை அன்று, எந்நாளும் உள்ள நிலை என்கிறார். ''இன்பமே எந்நாளும்'' என்றும், ''எந்நாளுமே துன்பம் இல்லை'' என்றும், உடன்பாடு எதிர்மறை ஆகிய இரு வகையாலும் கூறி வற்புறுத்துகிறார்.

இந்த உயர்நிலை, பெறுவதற்கு அரிய பெரும்பேறு. இதற்கு அடிப்படை தாம் பெற்ற கடவுளுணர்வும் அதற்கு ஏற்றவாறு தாம் நடத்தும் நெறியான—உறுதியான–வாழ்வுமே என்பதைக் கூறி அந்தப் பாடலை முடிக்கின்றார்.

கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே.

இப்பாடலில் புலனாகும் தூய்மையும் தெளிவும் பெருமிதமும், உலகில் பல நாடுகளில் வாழ்ந்த கடவுளடியார்களின் வாழ்வில் விளங்கியவைகளே. ஆயினும் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் இவ்வளவு தெளிவாகத் தம் சொற்களாலேயே ஒருவர்உணர்த்தியுள்ளார்—பாட்டாக வடித்துள்ளார் என்றால், அவர் ஞானப் பெருந்தொண்டர் ஆகிய திருநாவுக்கரசரே என்பது இங்கு உணரத்தக்கதாகும். ★

தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய

திருமாலை

(மூலமும் உரையும் ; முற்றொடர்ச்சி)

மனத்தில் ஓர் தூய்மை இல்லை ;
வாயில்ஓர் இன்சொல் இல்லை ;
சினத்தினால் செற்றம் நோக்கித்
தீவிளி விளிவன் வாளா ;
புனத்துழாய் மாலை யானே ;
பொன்னிசூழ் திருவ ரங்கா !
எனக்குஇனிக் கதிஎன் சொல்லாய் !
என்னைஆள் உடைய கோவே !

(பொழிப்புரை). புனத்திலே வளர்ந்து செவ்விதான திருத்துழாயை மாலையாக அணிந்துள்ளவனே ! காவிரியாற்றால் சூழப்பெற்ற திருவரங்கத்தில் எழுந்தருளி இருப்பவனே ! என்னையும் அடிமையாகக் கொண்டருளிய தலைவனே ; என்னுடைய உள்ளத்தில் ஒரு தூய்மையும் இல்லை. வாயில் ஓர் இனிய சொல்லும் இல்லை. காரணம் இல்லாமலே எழும் சீற்றத்தினாலே பகைமை தோன்றப் பார்த்து, யான் மிகக் கொடுமையான சொற்களைச் சொல்லாநிற்பேன். இத்தகைய தீய இயல்புகள், நிறைந்த எனக்கு, இனிமேல் என்ன நிலைமை நேருமோ ? அதனைச் சொல்லியருளுதல் வேண்டும்.

(குறிப்புரை): தாம் குற்றமிலராகியும், தம்பால் குற்றமே நிறைந்துளதாக நினைந்து, தம் சிறுமைகளை வெளியிட்டுக் கொள்ளுதல், உலகெங்கும் உள்ள அடியவர்கள் அனைவருக்கும் உரிய சிறந்த பண்பாகக் காணப்படுகின்றது. அம்முறைமைக்கு ஏற்ப ஆழ்வாரும், தம்மைக்குறையுடையவர் போல இகழ்ந்து கூறிக் கொள்ளுகின்றார். மனத்தில் தூய்மையும், வாயில் இன்சொல்லும் உடையவராக அனைவரும் விளங்குதல் வேண்டும் என்பது ''மனத்தில் ஓர் தூய்மையில்லை ; வாயில்ஓர் இன்சொல் இல்லை' என்பதனால் புலப்படுத்தப் பெற்றுள்ளது மனத்தில் தூய்மைமட்டும் இல்லாமையன்றித் தீமையும் நிறைந்துள்ளது என்பார் ''சினத்தினால் செற்றம் நோக்கி'' என்றும், வாய் இன்சொல் இல்லாமை மட்டுமேயன்றித் தீய கொடிய சொற்களையே சொல்லிக்கொண்டிருக்கும் என்பார் ''தீவிளி விளிவன்'' என்றும் குறிப்பிட்டருளினார். வாளா-காரணம் இன்றி. அது, காரணமில்லாமலே சினந்தோன்றுதலையும், காரணமில்லாமலே கொடுஞ்சொற் கூறுதலையும் உணர்த்தி, இரண்டற்கும் பொதுப்பட நின்றது. காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியம் என்னும் அறுவகைத் தீக்குணங்கள் அனைத்தும் நீங்காவிடினும், அவற்றுள் ஒன்றேனும் குறைந்திலது என்பார் ''மனத்தில் ஓர் தூய்மை இல்லை'' என்றார். தீய சொற்கள் பலவற்றைக் கூறும் தமது வாயில் ஓர் இன்சொல்லும் வருவதில்லை என்பார், ''வாயில் ஓர் இன்சொல் இல்லை'' என்றார். தீய வழுக்கியும் வாயாற் சொலல், ஒழுக்கமுடையார்க்கு ஒல்லாமை போல; வழுக்கியும் இன்சொற் கூறுதல் தமக்கு வாய்த்திலது'' என்று ஆழ்வார் தம்மைத் தாமே நொந்து கொள்ளுகின்றார். இத்தகைய குற்றம் பல நிறைந்திருப்பினும், தம்மைக் கைவிடாது காத்தருளுதல் இறைவனின் கடமை என்பார் ''புனத்துழாய் மாலையானே'' என்று போற்றிப் புகழ்ந்து சிறப்பித்ததனால் குறிப்பிட்டார். துழாய் - துளசி. ''பொன்னிசூழ் திருவரங்கா'' என்பது, யானும் நின்னை விடாது சூழ்ந்துகொண்டு நின்திருவடிகளில் அடைக்கலம் புகுந்தேன் என்னும் குறிப்பைப் புலப்படுத்துகின்றது. பொன்னி - காவிரியாறு. ''எனக்கு இனிக் கதி என் சொல்லாய்?',

என விண்ணப்பித்துக் கொள்ளும் ஆழ்வார், அங்ஙனம் இறைவன் தமக்குச் சொல்லக் கடமைப்பட்டுள்ள உறவுரிமை தோன்ற "என்னை ஆளுடைய கோவே" என விளித் தருளினர். கோ - தலைவன். (30)

தவத்துளார் தம்மில் அல்லேன் ;
தனம்படைத் தாரில் அல்லேன் ;
உவர்த்தநீர் போல என்றன்
உற்றவர்க்கு ஒன்றும் அல்லேன் ;
துவர்த்தசெவ் வாயி னர்க்கே
துவக்கறத் துரிசன் ஆனேன் :
அவத்தமே பிறவி தந்தாய் !
அரங்கமா நகர் உளானே !

(பொழிப்புரை) : அரங்கமா நகருளானே, யான் தவவொழுக்கத்தைக் கடைப்பிடித்திருப் பவர்களில் ஒருவனல்லன். நினக்கும் நின் அடியார்க்கும் உரிய திருத்தொண்டுகளுக் காகப் பொருட் செல்வத்தைச் சேர்த்து வைத் திருப்பவர்களிலும் ஒருவனல்லன், என்னைச் சேர்ந்தவர்களுக்கும், உப்புத் தண்ணீர் போல ஒன்றுக்கும் உதவாதவனாக இருக்கின்றேன். பழுப்பேறிய சிவந்த இதழ்களையுடைய விலை மகளிர்க்கே முழுதும் தொடர்புடையவனாய், பிறவற்றில் தொடர்பு அற்றுப் போகும்படி கள்ளனாயினேன், இத்தகைய எனக்கு, அரிய மனிதப்பிறவியை நீ வீணாகவே கொடுத் தருளினாய்.

(குறிப்புரை) : பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்றது, இறையருளைப் பெறுதற் குரிய தவவொழுக்கங்களைக் கடைப்பிடித் தற்கே யாயினும், யான் அதனை ஒரு சிறிதும் செய்திலேன் என்பார், "தவத்துளார் தம்மில் அல்லேன்" என்றார். தவம் புரியாவிடினும் இல்லற ஒழுக்கத்தில் நின்று பொருள்தேடிப் பல அறச்செயல்களைச் செய்து அருட் பேறு அடைதல் கூடும். அதனையும் யான் கடைப் பிடித்திலேன் என்பார் "தனம் படைத்தாரில் அல்லேன்" என்றார். மறுமையில் இறையருட் பேற்றை அடைவதற்கு முயலாவிடினும், இம் மையில் தம்முடைய உற்றார் உறவினர்க்கும் நண்பர்களுக்கும் பயன்படும்படியாவது வாழ்க்கை நடத்தலாம். அங்ஙனமும் யான் வாழ்ந்திலேன் என்பார் "உற்றவர்க்கும் ஒன்று அல்லேன்" என்றார். உப்புநீர் குடிப்பதற்கோ, குளிப்பதற்கோ பயன்படாமைபோல, யானும் எதற்கும் பயன்பட்டிலேன் என்பார். "உவர்த்த நீர்போல ஒன்றுமல்லேன்" என்றார். இறைவ னுக்கு ஆட் செய்ய ஒருப்படாத தாம், விலைமக ளிர்க்கு அடிமை செய்ய விரும்பி முனைந்து பாழ்பட்டமையை நினைந்து "துவர்த்த செவ் வாயினர்க்கே துவக்கறத் துரிசன் ஆனேன்" என இரங்குகின்றார். இவ்வாறு பிறவிப் பய னைப் பெறுமல், இழந்தொழிந்த தம் இழி தகை மைக்கு மிகவும் நொந்து வருந்தும் ஆழ்வார், அக்குற்றத்தைத் தம்பால் ஏறட்டுக் கொள் ளாமல், ஒருவகையில் இறைவன் மீதே இட்டு, "அவத்தமே பிறவி தந்தாய்" என்று நைந்து அரற்றுகின்றார் உவர்த்தநீர் – உப்புத்தன்மை வாய்ந்த நீர். அவத்தம் - வீண். 'அவத்யம்' என்னும் வடசொல்லின் விகாரம் என்பர். (31)

ஆர்த்துவண் டலம்பும் சோலை
அணிதிரு வரங்கம் தன்னுள்,
கார்த்திரள் அனைய மேனிக்
கண்ணனே ! உன்னைக் காணும்
மார்க்கம்ஒன் றறிய மாட்டா
மனிசரில் துரிசன் ஆய
மூர்க்கனேன் வந்து நின்றேன்
மூர்க்கனேன் மூர்க்க னேனே !

(பொழிப்புரை) : வண்டுகள், ஆரவாரம் செய்து அலைந்து கொண்டிருக்கும் சோலை களால் அழகுபெற்றுள்ள திருவரங்கத்தின்கண், பள்ளிகொண்டருள்கின்ற, மேகங்களின் கூட் டத்தை ஒத்த திருமேனியை யுடைய பெரு மானே ! உன்னைக் காணும்நெறி ஒன்றையும் அறியமாட்டாத மூடனாகிய யான், மனிதர் களுக்குள் குற்றமே நிறைந்தவனாய், வேறு புகல் அற்று நின் திருமுன்பே வந்து நின்றேன் ; கொடிய மூர்க்கனாகிய என்னைப் பொறுத்துக் காப்பாற்றி அருளுதல் வேண்டும்.

(குறிப்புரை) : இறைவனை அடைவதற் குரியனவாகக் கருமயோகம், ஞானயோகம், பக்தியோகம், திவ்வியதேசவாசம், திருநாம சங்கீர்த்தனம், முதலிய பலவகை நெறிகள் உண்டு. எனினும் அவைகளில் ஒன்றை யேனும் யான் அறிந்து பின்பற்றகில்லேன் என்பார், "மார்க்கமொன்று அறியமாட்டா மூர்க்கனேன்" என்றார். தம்முடைய பல குற் றங்களையும் நினைந்து வருந்தி "மனிசரில் துரிச னாய மூர்க்கனேன்" என்றார். முன்னே தீமை யைப் பற்றிக்கொண்டு விடாதிருந்தாற்போலே,

இப்போது நின் திருவடிகளைப் பற்றிக்கொண்டு அடைக்கலம் புகுந்து விடாது நிற்கின்றேன். என் குற்றங்களுக்காக என்னை வெறுத்து ஒதுக்காமல், ஏற்றுக் காத்தருளுதல் வேண்டும் என்னும் குறிப்பில், ''மூர்க்கனேன் மூர்க்க னேனே'' என்று மீண்டும் அடுக்கி மொழிந் தருளினர். 'கார்த்திரள் அனைய மேனி' என்பது, இறைவனின் அருட்சிறப்பையும் வள் ளன்மையையும் குறித்தது. 'கண்ணனே' என்று விளித்தது, தன் பிழைகளுக்காக வெறுக்காமல் அப்பெருமான் காட்டும் கழிபெருங் கருணை யாகிய கண்ணோட்டத்தினைப் புலப்படுத்திற்று. (32)

மெய்எலாம் போக விட்டு
விரிகுழ லாரிற் பட்டுப்,
பொய்எலாம் பொதிந்து கொண்ட
போழ்க்கனேன் வந்து நின்றேன் ;
ஐயனே அரங்கனே உன்
அருள்என்னும் ஆசை தன்னால்
பொய்யனேன் வந்து நின்றேன் ;
பொய்யனேன் பொய்ய னேனே ;

(பொழிப்புரை) : தலைவனே! திருவரங்கத் தில் எழுந்தருளியிருப்பவனே! உண்மையான நினைவு சொல் செயலாகிய எல்லாவற்றையும் என்னைவிட்டு நீங்கிப்போகும்படி செய்துவிட்டு, விரிந்த கூந்தலையுடைய விலைமாதர்களின் திறத்தில் அகப்பட்டுக்கொண்டு, எல்லாவகை யான பொய்களையும் என்பால் நிறைத்துக் கொண்டிருக்கின்ற முறைகேடனாகிய நான், உன்னுடைய அருளைப்பெற வேண்டும் என்னும் பெருவிருப்பத்தினால், நின்பால் நாணத்தை விட்டு வந்து பணிந்து நிற்கின்றேன். மனம் மொழி மெய் என்னும் மூன்று கரணங்களாலும் யான் பொய்யனே என்றாலும், என்னை விலக்கி விடாமல் ஏற்றுக் காப்பாற்றியருள்க!

(குறிப்புரை): தம்முடைய குற்றங்களை யெல்லாம் வாய்விட்டுச் சொல்லிக் கதறி அழுது வருந்துதல், கடவுள் அடியார்கள் அனைவருக்கும் உரிய ஒரு பெருஞ் சிறப்பியல் பாகும். ஆதலின் ''மெய்யெல்லாம் போக விட்டேன் ; விரிகுழலாரில் பட்டேன் ; பொய் யெலாம் பொதிந்து கொண்டேன் ; போழ்க்க னேன் பொய்யனேன்'' என்று ஆழ்வார் அருளிச் செய்தருளினர். 'பொய்யனேன்' என்று மும்முறை கூறியது, மனமொழி மெய் என்னும் மூன்றினாலும் தாம் பொய்யனாதலைக் குறித் தற்கு. ''ஆசை வெட்கமறியாது'' என்பது பழமொழி யாதலின், என் குற்றங்களுக்காக நாணப்படாமல், உன் அருளைப் பெறவேண்டு மென்னும் ஆசையால், நின்முன் வந்து சரண் புகுந்து நின்றேன் என்பார், ''உன் அருளென் னும் ஆசைதன்னால் வந்து நின்றேன்'' என்றார். ஐயன் - தலைவன், வியக்கத்தக்க சிறந்த நல்ல குணங்களை யுடையவன். போழ்க்கன் - முறை கேடன், வழிதப்பினவன். (33)

உள்ளத்தே உறையும் மாலை
உள்ளுவான் உணர்வொன் றில்லாக்
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த்
தொண்டுக்கே கோலம் பூண்டு ;
உள்ளுவார் உள்ளிற் றெல்லாம்
உடன் இருந்து அறிதி என்றே
வெள்கிப்போய் என்னுள் ளேநான்
விலஇறச் சிரித்திட் டேனே.

(பொழிப்புரை). என் உள்ளத்தினுள்ளே தங்கி வதிந்து வருகின்ற திருமால் ஆகிய உன்னை, சிந்தித்து உணர்வதற்கு உரிய அறிவு சிறிதும் இல்லாத கள்ளனாகிய அடியேனும், உனக்குத் தொண்டு செய்பவன் போல, அத் தொண்டுகட்கேயுரிய கோலங்களை அணிந்து கொண்டு உழல்கின்றேன். ஆயினும் நினைப் பவர்கள் நினைக்கின்ற நினைவுகள் எல்லாவற்றை யும், அவர்களோடு அவர்களின் உள்ளத்தில் உடனாகக் கலந்திருந்து நீ அறிந்து கொள்ளு கின்றாய் என்பதனை உணர்ந்து, நான் எனக் குள்ளே மிகவும் வெட்கமடைந்து, அவ்வெட் கத்தின் மிகுதியால், செய்வது இன்னதென்று தெரியாமல், அவ்வெட்கத்தினை ஒருவகையில் மூடிமறைத்தற் பொருட்டு, என்னுடைய விலாப்பக்கத்தின் எலும்பு முறியும்படி, போலி யாகப் பெருஞ் சிரிப்புச் சிரித்தலைச் செய்தேன்.

(குறிப்புரை) : இறைவன் எல்லோருடைய உள்ளங்களிலும் கலந்து பரவிக்கரந்து உறைந்து வருகின்றான். அதனால் அவன், நாம் பிறர் எவரும் அறிந்துகொள்ள இயலாது என்று எண்ணிக் கள்ளமாகச் செய்துவருகின்ற செயல் களை எல்லாம், திண்ணமாக அறிந்துகொண்டு வருகின்றான். ஆனால் நாமோ பிறர் யாரும் அறியவில்லை என்று, தீய செயல்களைச் செய்து கொண்டு, அவற்றை உலகத்தவர் அறிந்து கொள்ளாதிருத்தற் பொருட்டு, இறைவனின் தொண்டர்கள்போல நடித்து, அத் தொண்ட

களுக்குரிய கோலங்களையும் புறத்தே பூண்டு கொண்டு, ஏமாற்றி வருகின்றோம். இறைவனை ஏமாற்றிவிட்டதாக நாம் எண்ணிக்கொண்டிருக்க, அவனோ நம்மை ஏமாற்றிவிட்டு, நாம் அறியாமல், நம் கள்ளச் செயல்களை எல்லாம் கண்டு கொண்டிருக்கிறான். இவ்வுண்மையை அறியாதவரையில், நாம் அச்சமும் நாணமும் கொள்வதில்லை. அறிந்த பிறகோ, அச்சமும் நாணமும் ஒருங்கே வந்து நம்மை அடர்கின்றன. அப்பொழுது அளப்பரிய அச்சத்தாலும் நாணத்தாலும் தாக்குண்டு செய்வதறியாது நாம் திகைக்கின்றோம். இவ்வனுபவத்தினை ஆழ்வாரின் இவ்வரிய அழகிய இனிய பாடல் செவ்விதின் உணர்த்துகின்றது.

''பெரிய உள்ளங்கள் ஒரே வகையில் நினைக்கும்'' (Great minds think alike) என்னும் உண்மைக்கேற்ப, தொண்டரடிப் பொடியாழ்வார் இப்பாடலில் குறிப்பிட்டருளிய, சொல்லும் பொருளும் உணர்வும் சுவையும் ஒருங்கே பொருந்தும்படி, ''கள்ளனேன் கள்ளத்தொண்டாய்க் காலத்தைக் கழித்துப் போக்கித் தெள்ளியேனாகிநின்று தேடினேன் நாடிக் கண்டேன்; உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந்து அறிதி என்று வெள்கினேன் வெள்கி நானும் விலாவிறச் சிரித்திட்டேனே'' என்று சைவசமய குரவராகிய திருநாவுக்கரசரும் அருளிச் செய்திருத்தல், இயைபுடைமை பற்றி, இங்கு நாம் அறிந்து இன்புறுதற்குரியது. (34)

தாவிஅன்று உலகம் எல்லாம்!
தலைவிளாக் கொண்ட எந்தாய்
சேவியேன் உன்னை அல்லால்
சிக்கெனச் செங்கண் மாலே!
ஆவியே! அமுதே! என்றன்
ஆருயிர் அனைய எந்தாய்!
பாவியேன் உன்னை அல்லால்
பாவியேன் பாவி யேனே!

(பொழிப்புரை) : முற்காலத்தில் திரிவிக்கிரம அவதாரம் எடுத்தபோது, எல்லா உலகங்களையும் கடந்து, திருவடியை எல்லோருடைய தலைகளிலும் வைத்து ஆட்கொண்டருளிய என் தந்தையே! சிவந்த திருக்கண்களையுடைய திருமாலே! என் உயிர் நிலைத்திருப்பதற்குக் காரணமானவனே! அமிர்தத்தைப் போல இனிமை தருபவனே! என்னுடைய அரிய உயிரைப் போன்ற எனது தந்தையே! பாவியாகிய நான், எப்போதும் விடாமல் உறுதியாகப்பற்றி நின்று உன்னையே சேவிப்பேன்; உன்னைத் தவிர மற்றையோரை ஒருபோதும் சேவிக்க மாட்டேன். பாவியாகிய நான், உன்னையல்லாது வேறு ஒருவரை மனத்தால் நினைக்கவும் மாட்டேன்.

(குறிப்புரை) : திருமாலின் திருவவதாரங்களில் திரிவிக்கிரம அவதாரம் மிகச் சிறப்பும் பெருமையும் உடையதாதலானும், எல்லார் தலையிலும் திருவடி வைத்து யாவரையும் ஆட்கொண்டருளிய பெருமையுடையதாதலானும், உலக மக்களின் குறைகளை உள்ளத்திற் கொள்ளாமல், அவர்களின் சிறு குணத்தையும் பெரிதாகப் பாராட்டி ஆட்கொள்ளும் பரிவுடையதாகலானும், ஆழ்வார் இப்பாடலின் தொடக்கத்தில் ''தாவி அன்று உலகமெல்லாம் தலைவிளாக் கொண்ட எந்தாய்'' என்று திரிவிக்கிரம அவதாரத்தினைச் சிறப்பாகக் குறிப்பிட்டருளினார். 'பாவியேன்' என்னும் சொல் பாவத்தையுடைய நான் என்றும்; பாவிக்க (நினைக்க) மாட்டேன் என்றும், இருபொருள் குறிக்கும் நிலையில் வந்தது. 'ஆவி' என்பது உயிர்வாழ்தற்குத் துணைபுரியும் பிராண வாயுவைக் குறித்தது. 'எந்தாய்' என்னும் சொல் இறைவன் ஞானச் செல்வத்தைத் தந்தருளியதனையும், தம்மை நல்வழியிற் செலுத்திச் சான்றோனாக்கிய தண்ணளியினையும் குறிக்கும் நிலையில், இருமுறை வந்தது. (35)

மழைக்கு அன்று வரைமுன் ஏந்தும்
மைந்தனே! மதுர ஆறே!
உழைக்கன்றே போல நோக்கம்
உடையவர் வலையுள் பட்டு,
உழைக்கின்றேற்கு என்னை நோக்காது
ஒழிவதே? உன்னை அன்றே
அழைக்கின்றேன்? ஆதி மூர்த்தி!
அரங்கமா நகர் உளானே!

(பொழிப்புரை) : முன்னொரு காலத்தில், இந்திரன் சினங்கொண்டு மேகங்களை ஏவி ஏழு நாட்கள் விடாமழை பெய்வித்தபோது, அம்மழையால் பசு முதலியன துன்பமடைவதற்கு முன்பாகவே, மழையைத் தடுப்பதற்காகக் கோவர்த்தன மலையை ஏந்திய பேராற்றல் மிக்கவனே! அன்பர்களின் விடாயைத் தீர்ப்பதில் இனிய ஆறு போன்றவனே! மான் கன்று

போன்ற விழியையுடைய மாதர்களின் பார்வை யாகிய வலையினுள்ளே அகப்பட்டுக்கொண்டு, துடிக்கின்ற என்னைக் கடைக்கண்ணால் நோக்கிக் காவாமற் கைவிடுதலும் தகுதியோ? முழு முதற் கடவுளே! திருவரங்கநாதனே! யான் உம்மை நோக்கியன்றோ, கதறி அழைக்கின்றேன்.

(குறிப்புரை) : இறைவனின் எல்லையற்ற கருணையினையும், ஆற்றலினையும் குறிக்க ''வரைமுன் ஏந்தும் மைந்தனே'' என்றார். இறைவன், தன் அடியார்கள் இருக்குமிடங்களிலெல்லாம், தானே வலிந்து சென்று காட்சியளித்து இன்புறுத்தும் எளிமைத் தன்மையை ''மதுர ஆறே'' என்பதனால் புலப்படுத்தினர். இவ்வுலகம் உருமாய்ந்து கிடந்த காலத்து ஒருவருடைய வேண்டுகோளையும் எதிர்பாராமல் தானே இதனைச் செவ்விதிற் படைத்தருளிய இறைவனின் எல்லையற்ற பரிவினை 'ஆதி மூர்த்தி' என்பதனால் ஆழ்வார் புலப்படுத்தினர். நிலைகுலைந்து கிடக்கும் தம்மையும் நன்னெறியில் நிலைபெறுவித்துக் காத்தருளல் வேண்டும் என்பது குறிப்பு. (36)

தெளிவிலாக் கலங்கல் நீர்சூழ்
திருவரங் கத்துள் ஓங்கும்
ஒளியுளார் தாமே யன்றே
தந்தையும் தாயும் ஆவார்;
எளியதோர் அருளும் அன்றே;
என்திறத்து எம்பி ரானார்,
அளியன்நம் பையல் என்னார்;
அம்மவோ கொடிய வாறே!

(பொழிப்புரை): தெளிவில்லாமல் கலங்கிய நீரையுடைய காவிரியாறு சூழ்ந்த, திருவரங்கம் பெரிய கோயிலில் இணையற்று ஓங்கி இருக்கின்ற, ஒளியை உடையவராகிய அழகிய மணவாளன் ஆகிய பெருமாள் அன்றோ, நமக்குத் தந்தையும் தாயுமாக இருப்பவர்! அவர் என்பால் செய்தருள வேண்டுவது, எளியதாகிய ஓர் அருட்செயல் மட்டுமேயன்றோ! எனக்குப் பேருதவியாளராகிய அவர் ''நம்முடைய பையனை இவன் நமது கருணைக்கு உரியவன்'' என்று திருவுள்ளம் பற்றிலர்; அந்தோ! இவருடைய இயல்பு மிகவும் கொடுமையாக இரா நின்றது.

(குறிப்புரை) : காவிரியாறு மேன்மேலும் வெள்ளம் பெருகி ஓடி வருதலின் கலங்கித் தெளிவில்லாமல் இருக்கின்றது. இங்ஙனம் காவிரியாறு கலங்கித் தெளிவில்லாமல் இருப்பதற்குப் பட்டர் என்னும் வைணவப் பெரியார் தாம் இயற்றிய ஸ்ரீரங்கராஜஸ்தவம் என்னும் துதிநூலில், ஓர் அழகிய கருத்தினைக் கற்பனை நயம் தோன்றக் கூறுகின்றார்.

''பாற்கடல் தகப்பனார் : பொன்னி என்னும் காவிரியாகிய நான் தாய்; திருவரங்க நாயகி எங்கள் இருவரின் மகள்; திருவரங்க நாதர், எங்களது பெண்ணை மணந்த கணவர். ஆதலின் எங்களுக்கு மருகர். எனவே மருகராகிய பெரிய பெருமாளுக்கும், மகளாகிய பெரிய பிராட்டியார்க்கும், ஏற்ற தகுதியான நிலையில்; நான் என்ன சீதனம் தரவல்லேன்'' என்று, காவிரித்தாய் கலங்குகின்றாள். ''மருகனுக்கும் மகளுக்கும் ஏற்பப் பெரிய அளவில் எதுவும் தர இயலாவிடினும், தன்னால் இயன்ற அளவுதரும் முறையில், பொன்னும் மணியும் முத்தும் மலரும் அகிலும் சந்தனமும் பிறவுமாகிய பொருள்களைக்கொணர்ந்து, தன் அலைகளாகிய கைகளால் காவிரித்தாய் குவிக்கின்றாள், அப்பொருள்களாலும் காவிரியாறு கலங்கித் தெளிவின்றிக் கிடக்கின்றது'' என்பது, பட்டர் பாடிய அழகிய கற்பனை மிக்க சுலோகத்தின் பொருளாகும். அஃது இங்கு நினைந்து இன்புறுதற்குரியது.

பரமபதம் முதலிய இடங்களில் எழுந்தருளியிருக்கும் இருப்பைக் காட்டிலும், பெருமாள் திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியிருக்கும் நிலையின் சிறப்பும் அதிசயமும் தோன்ற, 'ஓங்கும் ஒளியுளார்' என்றார். சுக்கிரீவன் விபீடணன் முதலியவர்களை வில்லும் கோலும் எடுத்துக் காத்தருளினாற் போலேயன்றி, வறிதே ஒரு சிறிது ஒருகாற் குளிர நோக்கியருளினாலும் எனது துயரம் தீரும் என்னும் கருத்தில், ''என்திறத்து எளியதோர் அருளும் அன்றே'' என்றார். 'அருளும் அன்றே' என்பது, அருள்மட்டுமே யன்றோ என்னும் பொருளில் வந்தது. இறைவன் தம்மைப் புகழ்ந்து சிறப்பிக்கும் முறையில்'ஆழ்வீர்' என்று அழைக்காமல் போயினும் 'அடே பையா' என்று அழைப்பினும் போதும் என்று விரும்புகின்றார் ஆழ்வார். ''ஒறுத்தால் ஒன்றும் போதுமே'' என மணிவாசகர் குறிப்பிடுவது போன்றது இது. ஆதலின் ''அளியன் நம்பையல் என்னார்'' என்று மனம் வருந்துகின்றார். இந்தச் சிறிய பரிவினையும் காட்டாமையினால், இறைவன் பால் மனம் வெதும்பி 'அம்மவோ கொடிய வாறே' என ஆழ்வார் மனம் பதறிக் கதறுகின்றார். (37)

—ஆசிரியர்

JL
Q2m 2n, NS9TK
N72.14.9.

சிவப் பயிர் செய்வோம்

வித்துவான் திரு. அ. மா. பரிமணம் M.A., M.Litt.,
பழநி ஆண்டவர் இந்தியப் பண்பாட்டுக்கல்லூரி, பழநி.

148698

உடம்பைப் பேணிக் காப்பதில் மட்டுமே மனித வாழ்வு முழுமை அடைந்து விடுவதில்லை. உயிரைப் பேணும் வாழ்க்கையில்தான் அது முழுமை அடைகின்றது. விலங்கு பறவை முதலான எண்ணற்ற அஃறிணைச் சிற்றுயிர்களின் வாழ்வு இறப்போடு முடிவடைந்து விடுகின்றது. மானிட வாழ்வோ உடலினைப் பேணி வாழ்ந்து இறக்கும் இறப்போடு முடிந்து விடாமல், அதற்கு மேலும் உயிர்த் தொடர்புடையதாய், மேனிலை எய்துதற்காம் குறிக்கோளைக் கொண்டதாகும். இதனால் "அரிது அரிது மானிடராதல் அரிது" என்று இம் மானிடப் பிறப்பு சிறப்பிக்கப்படுகிறது. இதன் சிறப்பினை உணர்ந்த அப்பரடிகள் போன்ற அருட்சான்றோர்கள் "வாய்த்தது நம் தமக்கு ஈதோர் பிறவி" என்றும், "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்றும் இதனைப் பேணிப் பயன்கொள்வாராயினர்.

ஊன் ஓம்பும் வாழ்க்கைக்கு உணவு இன்றியமையாததாகும். 'உண்டி முதற்றே உணவின் பிண்டம்' என்பது சங்கப் பெருமக்கள் அறிந்து காட்டிய உண்மையாகும். உணவுப் பொருள்கள், உழுது பயிர் செய்வதால் கிடைப்பன அன்றோ! அதனால், உலக மக்கட்கு இன்றியமையாத உணவுப் பொருள்களை நல்கும் உழவர்களை 'உலகத்தார்க்கு ஆணி' என்று கூறினர் வள்ளுவப் பெருந்தகை!

உடலைக் காக்கத் தேவையான உணவிற்கு வேண்டிய உழவுத்தொழில் - பயிர்த்தொழில் நடைபெறுகிறது. பயிர் செய்வதற்கான தரை நன்றாக உழவு செய்யப்படுகிறது. ஒருமுறை இருமுறை மும்முறை என மேலும் மேலும் உழப்படுகிறது. இதனால் அத்தரை கட்டிகள் இன்றிப் பொடிபட்டு விளங்குவதோடு, நிலச் சத்து மிக்கதாகவும் ஆகிவிடுகின்றது. பயிர் செய்யப்படவேண்டிய தரை இவ்வாறு உழப்பட வேண்டும் என்பதை "தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும் வேண்டாது சாலப் படும்" என்னும் குறளில் வள்ளுவர் கூறியுள்ளதோடு, அதன் பயனையும் விளக்கியுள்ளார்.

உழுது பண்படுத்தப்பட்ட நிலத்திலே விதைகள் விதைக்கப்படுகின்றன. விதைகள் தாமும் உயிர்த்தன்மை உள்ளனவாய்ச் சத்து மிக்கனவாய் இருக்கின்றன. அவை முளை விட்டு வளரத் தொடங்குகின்றன. நமக்கு வேண்டிய பயனை நல்க வல்ல பயிர்களுக்கு இடையில் பயனில்லாத, நமக்கு வேண்டிய பயிரின் வளர்ச்சிக்கு ஊறு செய்யும் களைகளும் உடன் தோன்றி வளரக் காண்கிறோம். இரக்கமின்றி அக்களைகள் பறித்து எறியப்பட்டால்தான், பயிர்கள் செழிப்பாக வளர்ந்து நல்ல பயனைத் தரமுடியும். மக்களிடையே தோன்றித் தம் கொடுமையால் சமுதாயப் பகைவராய்த் திகழ்பவரைக் கொலைத் தண்டனையால் தண்டிப்பது அரசியலார் நீதியாகும். பயிர்களிடையே தோன்றிப் பயனற்ற தன்மையால் களையாய் வளர்வனவற்றைப் பறித்து அகற்றல் உழவர் நியதியாகும். இந்த இரண்டு உண்மைகளையும் இயைத்து உவமையும் பொருளுமாக்கி,

> "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
> களைகட் டதனொடு நேர்"

என்ற அழகிய குறளில் காட்டியுள்ளார் வள்ளுவர்.

பயிருக்குத் தேவையான தண்ணீர் உரிய காலங்களில், தேவையான அளவிற்குத்

தொடர்ந்து பாய்ச்சி வரப்படுகின்றது. பயிர் செய்கின்றவன் நாளும் சென்று பயிரைக் கவனித்து வரவேண்டும். உரம் நீர் பாய்ச்சல் முதலியவற்றில் குறையில்லாவிட்டாலும், பூச்சி புழு முதலியவற்ருல் எளிதில் புலப்படாத தீங்குகள் உண்டாகின்றனவா என்று கூர்ந்து கவனித்து வரவேண்டும். சாகுபடி செய்யப் படும் நிலத்திற்கு அதன் தலைவன் நாள்தோறும் சென்று அதனைக் கண்டு வராவிட்டால், அந்த நிலமென்னும் நல்லாள் மாறுபட்டுப் பயன் சுருங்க, அத்தலைவன் போகம் இழந்து நிற்பான். இந்த உண்மையை நாளும் தன் மனைவியைப் பேணுத குடும்பத் தலைவன் தன் இல்லறப்பயன் இழக்கும் செயலோடு ஒப்பிட்டு,

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடிவிடும்"

என்று வள்ளுவர் காட்டியுள்ளார். பயிர்கள் செழித்துள்ள வயலில், புறத்தே இருந்து ஆடு மாடுகள் முதலியன புகுந்து நாசமாக்காவாறு வயலைச்சுற்றி வேலி அமைக்கப்பட வேண்டும். இவ்வாறு, உழவு செய்தல் விதைவிதைத்தல், களை பறித்தல், நீர்பாய்ச்சல், கண்டு காவல் அமைத்தல் ஆகிய உழவுத் தொழிலுக்குரிய ஐந்து தொழில்களையும் அயராது புரிந்து செம்மையாக இருக்கும் உழவன், தான் நினைத்த பயனை-விளைச்சலைப் பெற்று இன்பமடைகின்ருன்.

உணவுக்கு அடிப்படையான உழவுத் தொழிலுக்கு இன்றியமையாத இந்த ஐந்து தொழில்களும் தவருது செய்யப்பட்டால்தான் நல்ல விளைவு கிடைக்கும்.

"ஏரினும் நன்ருல் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு"

என்று வள்ளுவர் காட்டுகின்ருர்.

உடம்பைக் காத்தற்குரிய உணவைப் பெற உழவுத் தொழிலை நாளும் முயன்று செய்து பயனடைகின்ருேம். அரசும்கூட அதனைப் பெருக்கிப் பயன்கொள்ளத் தூண்டுகிறது. அது போல உயிரைக் காத்தற்குரிய உணவைப் பற்றிப் பலரும் கவலை கொள்வதாகத் தெரியவில்லை. உடலினைப் பேணி வளர்ப்பதன் மூலம் உயிரை வளர்த்து உய்தி பெறவேண்டும் என்னும் பிறவிக் குறிக்கோளைப் பலரும் மறந்து விடுகின்றனர். இதனை நினைவூட்டி,

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

என்று திருமூலரும் அறிவுறுத்தியுள்ளார்.

உயிருணவைப் பெறுவதற்கு ஓர் உழவுத் தொழிலைச் செய்தல் வேண்டும், அகத்தே செய்தல் வேண்டும். புறத்தே செய்யவேண்டிய பயிர்த்தொழிலைப்போல, அகத்தே செய்யப்பட இருக்கும் இப்பயிர்த் தொழிலின் கண்ணும் முன் கூறப்பெற்ற ஐந்தொழில்களும் செவ்வனே மேற்கொள்ளப்படவேண்டும்.

மனித மனம் என்னும் நிலத்தில் இவ்வுழவு செய்யப்படவேண்டும், மெய்த்தன்மை (உண்மை - வாய்மை - மெய்ம்மை) - சத்தியம் பேணுதலாகிய உழவு செய்யப்பட வேண்டும். மனத்தின்கண் பலமுறை மெய்ம்மை உழவு செய்வதன் பயனுக வாயின் தன்மையும்-மெய்யின் தன்மையும் பண்பட்டு நிற்கின்றது.

மெய்ம்மை உழவால் பண்பட்டு நிற்கும் மனநிலத்தில் விருப்பம் என்னும் வித்து விதைக்கப்படவேண்டும். வித்து சத்துடையதாக இருக்கவேண்டியதுபோல விருப்பமும் நல்விருப்பமாக - இறையன்பாக இருத்தல் வேண்டும். விதை முளை விட்டுச் செழித்து வளரத் தலைப்படுகின்றது.

பயிர் வளரும் வயலில், பொய்யென்னும் களை தோன்றக் கண்டவுடன் அதனைக் களைந் தெறியவேண்டும். உள்ளத்தில் மட்டுமேயன்றி உரையிலும் உடலிலும் தோன்றும் பொய்ம்மைகளும் களைந்தெறியப்படவேண்டும். பொய்ம்மைக்களை நீங்கிய நிலத்தில் பொறுமைஎன்னும் நன்னீரைப் பாய்ச்சுதல் வேண்டும், பயிருக்கு எப்போதாவது நீர் பாய்ச்சினுல் போதாது, அது போலப் பொறுமைப் பண்பையும் எப்போதாவது மேற்கொண்டால் போதாது. பொறுமையை மேற்கொள்ளவேண்டிய போதெல்லாம் வேண்டிய அளவில் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

பயிர் செய்வோன் வளவயலைப் பார்த்து வருவது போல, தவப்பயிர் தழைத்து வளர்ந்து வரும்போது தன்னையும் நோக்கிக்கண்டு வர வேண்டும். ஐம்புல வேடர்கட்கு ஆட்பட்டு அடிமையாகாமல், தன் தலைமை உணர்ந்து

வயலையும் பேணி வருதல் வேண்டும். விலங்கு பறவை முதலிய பகைகளினின்றும் பயிரைப் பாதுகாக்க வேலியிடுமாறுபோல, தவப் பயிரை அழிக்கவரும் பகைகளைத் தடுப்பதற்குத் தக்க தோர் வேலி அமைத்திடவேண்டும். குறுக்கும் நெடுக்குமாகக் கம்பும் கழியும் வைத்துக் கட்டி அமைப்பதன்றோ வேலி! அருள், நடுவுநிலைமை, அறிவு, தெளிவு பெருமை முதலிய அரும் பண்பு களையெல்லாம் உள்ளடக்கி விளங்கும் தகுதி என்னும் வேலி கட்டப்பெறல் வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் மேலாகத் தவப்பயிர் உழவன்,சிவமெனும் செந்நெறிக்கண் நின்றெழு கும் மாட்சி உடையவனுதல் வேண்டும். இப் போது தவப்பயிர்-சிவப்பயிர்-சிவகதி விளைந்து விடுகிறது. செம்மையேயாய சிவகதியாம் நல்லுணவை உண்ணும் உயிர் திருவருளில்- சிவனருளில் திளைத்துப் பேரின்பமடைகின்றது. ஆண்டவன் அந்த உயிருக்குஉதவிய மனித்தப் பிறவியின் குறிக்கோளும் நிறைவேறுகின்றது.

பிறவிப் பிணி நீக்கிப் பேரின்பமளிக்கும் இந்தத் தவ உழவினை அப்பர் பெருமான் அழகுமிக்கதொரு திருவிருத்தத்தால் நமக்குக் காட்டுகின்றார். அவ்வரிய பாடல் வருமாறு:

"மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகில்
சிவகதி விளையு மன்றே"

இந்தத் திருவிருத்தத்தில் அப்பரடிகள் மனித்தப் பிறவியின் மேன்மையினைக் குறிப் பால் உணர்த்தி, அப்பிறவிப் பயனை அடைதற் காம் நல்வழியினை, அழகு மிக்க உழவு என்னும் ஓர் உருவகத்தால் காட்டியுள்ளார். இந்தப் பயிர்த்தொழில் விலங்குகள் பறவைகள் முத லான அஃறிணை உயிர்கட்கு ஆகமாட்டாது. எனவே, மானிடராய்ப் பிறந்த நாம், ஊனோம் பும் வாழ்க்கையோடு, உடலோம்பும் வாழ்விற் கான தவப் பயிர் விளைக்கும் உழவினைச் செய்து உய்தி பெற வேண்டுவது நம் கடமையாகும். ★

மதிப்புரை

பிள்ளைத்தமிழ் என்னும் பிரபந்தம், முருகனுக்குரிய ஆறுபடைவீடுகளில் பழமுதிர்சோலை ஒன்று தவிர, மற்றுள்ள ஐந்து தலங்களுக்கும் முன்னரே பாடப் பெற்றுள்ளது. பழமுதிர்சோலைக்கு மட்டும் இத்தகைய பிரபந்தம் ஒன்று இயற்றப் பெறுமல் இருந்து வந்தது. அக்குறையினை நிறைவு செய்யும் வகையில் காஞ்சிபுரம் **திரு. ரா. குப்புசாமி பிள்ளை, B.A.**, அவர்கள் '**பழமுதிர்சோலைமலை முருகன் பிள்ளைத்தமிழ்**' என்னும் இந்நூலைப் பாடியிருப்பது நம்மனோர்க்குப் பெரிதும் மகிழ்ச்சியளிக்கிறது.

இந்நூலாசிரியர் சிறந்த முருகன் அடியார். செந்தமிழ்ப் புலமை கைவந்தவர். முன்பே பல தோத்திர நூல்களை இயற்றியிருப்பவர். நல்ல கவித்துவ சக்தி வாய்ந் தவர். இவர்தம் பாடல்கள் சொற்சுவையும் பொருட்சுவையும் மிக்கு விளங்குகின்றன. உயரிய கற்பனை உணர்வும் வளமும் இவர்தம் பாடல்களில் காணப்படுகின்றன.

"புலவர்க்கு அம்புலி புலி" எனச் சிறப்பித்து ஓதப்பெறும் அம்புலிப் பருவப் பாடல்கள் (61. 63), செந்தமிழ்ப் புலமை நலனும், சிறந்த கற்பனைத் திறனும் நிறைந்து காணப்படுகின்றன.

மேலும், இவம்தம் இனிய சமரச உள்ளத்தின் இயல்பு, இந்நூலில் 92-ஆம் பாடலில் **பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார், ஆண்டாள், திருமங்கை ஆழ்வார், இராமானுசர்** ஆகிய வைணவப் பெரியோர்களையும், அவர்தம் அருளிச் செயல்களையும் நினைவுகூர்ந்து போற்றிப் பாராட்டியிருக்கும் முறையாற் புலனுகின்றது.

இத்தகைய பற்பல சிறப்புகளை உடைய இந்நூலையும், இதன் ஆசிரியரையும், நாம் அனைவரும் பெரிதும் போற்றக் கடமைப்பட்டுள்ளோம். இந்நூலை முருகன் அடியார்களும், தமிழன்பர்களும் ஆகிய அனைவரும் போற்றிப் பயன்கொள்வர் என்பதில் ஐயமில்லை.

—ஆசிரியர்

படிமக் கலை

திரு. வி. கணபதி ஸ்தபதி. B.A..

கண்காணிப்பாளர்,

அரசினர் சிற்பக் கலைப் பயிற்சி நிலையம், மாமல்லபுரம்.

முன்னுரை :

தமிழ்ப் பெருமக்கள் பேணிவளர்த்த கலைகளில் நாட்டியம், ஓவியம், சிற்பம், இசை, கவிதை ஆகிய ஐந்தும் அழகுக் கலைகளாகும். முன்னைய மூன்றும் கண்வழிச் சென்று உள்ளத்தை இன்புறச் செய்வன; பின்னைய இரண்டும் செவிவழிச் சென்று உள்ளத்திற்கு உவகையூட்டுவன.

கண்ணையும் கருத்தையும் கவரக்கூடிய ஒரு காட்சியை ஒருவன் காண்கிறான். அக் காட்சி புலன் வழிச் சென்று உள்ளம் என்ற திரையில் நிழலிடுகிறது; இன்ப உணர்ச்சி தோன்றுகிறது. இஃது உள்ளத்தை நிரப்பிப் பொங்கிவழிகிறது. இவ்வுணர்வை, தான் பெற்ற இன்பத்தை, பிறர் உள்ளத்தில் படைக்கும் ஆற்றலே கலை எனப்படும். உள்ளத்தில் பொங்கி வழியும் உணர்ச்சிப் பெருக்கைச் சுவை குன்ருது முறைப்படுத்தி எடுத்துரைப்பதால் கவிதை பிறக்கிறது; வரைவதால் ஓவியம் தோன்றுகிறது; வடிப்பதால் சிற்பம் உருவாகிறது.

படிமம் :

ஒன்றுக்கு ஈடாக அவ்வொன்றைப் போலவே அமையும் மற்ருென்றுக்குப் 'படி' என்று பெயர். அதாவது மூலத்தின் பிரதி, 'படி' யெனப்படுகிறது. இதனையே 'படிமம்' என்றும் 'படிவம்' என்றும் அறிஞர் கூறுவராயினர். ஆனால் கலைத்துறையில் இச்சொல் மிக ஆழ்ந்த கருத்தில் கையாளப்படுகிறது.

இயற்கை வடிவங்களையும் பிற காட்சிகளையும் உள்ளதை உள்ளவாறு உரைத்தலோ, உருவாக்குதலோ கலைப்படைப்பு என்று நாம் கருதுவதில்லை. உள்ளதை உணர்ந்தவண்ணம் எடுத்துரைப்பதும் உருவகிப்பதும் கலைத்திறம் என்று கொள்கிருேம். எனவே உணர்வின் பிரதிபலிப்பே கலையென்பதாகிறது. விரித்துக்கூறின், மனத்திரையில் நிழலிட்ட உணர்வு மயமான காட்சியின் பிரதிபிம்பத்தையே படிவம் என்றும், படிமம் என்றும் நம் தமிழ் மக்கள் கொண்டனர். இதே பொருள்பற்றி, வடமொழி நூல்களும் 'பிரதிமா' என்றே இக்காட்சியை அழைக்கின்றன.

பொதுவாகப் படிமம் என்ற சொல்லைத் தெய்வத் திருமேனிகளைக் குறிப்பதற்கே தொன்றுதொட்டு வழங்கி வருகிருேம். எடுத்துக் காட்டாக, தொல் இலக்கியமான சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் தெய்வ வடிவைப் படிமம் என்றே இளங்கோவடிகள் குறிப்பிடுவதைக் காண்கிருேம்.

"மேலோர் விழையும் நூனெறி மாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து
இமையவர் உறையும் இமையச் செவ் வரைச்
சிமையச் சென்னித் தெய்வம் பரசிக்
கைவினை முற்றிய தெய்வப் படிமத்து"

என்று சிலப்பதிகாரத்திலும்; மேலும் கடைச் சங்கப் புலவர்களில் ஒருவராகிய சீத்தலைச் சாத்தனுர் என்பார் தனது மணிமேகலை என்ற காப்பியத்தில்,

"அணியிழை யந்தரம் ஆரு எழுந்து

தணியாக் காதற் றாய்கண்ண கியையும்
கொடைகெழு தாதை கோவலன் றன்னையும்
கடவு ளெழுதிய படிமங் காணிய ''

என்ற பாட்டிலும்,

'' சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா''

என்ற அடியிலும்,

தெய்வ வடிவத்தைக் குறிக்கப் ''படிமம்'' 'படிவம்' என்ற சொற்களைக் கையாளுவதைக் காண்கின்றோம்.

கண்ணுக்கும் கருத்திற்கும் அகப்படாமல் அவற்றைக் கடந்து நிற்கும் பேரின்பப் பொருளின் பேரழகை அகக்கண்களால் கண்டு, அவ்வுணர்வின் பிரதியாகக் கடவுட் படிமங்கள் அமைக்கப்படுகின்றன. கண்ணகியின் புற அழகை விடுத்து அக அழகையே மனத்திரையில் கண்டு, அவளது இனிய வடிவத்தைப் படிமம் என்றழைத்து; தெய்வத் தன்மையை இளங்கோவடிகள் அதில் ஏற்றிக் காட்டுகிறார். இன்று நாம்காணும் புத்த படிமத்தின் வடிவழகு புத்தரின் இயற்கையான புற அழகு அல்ல. அஃது யாதெனில், புத்தர்தம் 'அகவழகின் புறத்தோற்றமே'. எனவே உருவமான பொருளின் புற அழகைவிடுத்து அதன் அக அழகையும் அருவமான பொருளின் தன்மையைப் புறத்தோற்றத்தாலும் சித்தரித்துக் காட்டுவது படிமக்கலையின் சீரிய பணியாகும். இது, தமிழகக் கலைகளின் பொதுவான — சிறப்பான மரபாகும் என்றால் மிகையாகாது.

சிற்பக்கலை மரபு :

தமிழகச் சிற்பக்கலை மரபின் சிறப்பியல்புகள் பலப்பல. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒரு சிலவற்றை இங்கு நினைவு கூர்வோம்.

உணர்வின் பிரதி பிம்பமே உண்மைக் கலையாகும் என்ற கருத்து, சிற்பிகளின் உள்ளத்தில் நிலையாகப் பதிந்துவிட்டதனால், இயற்கைக் காட்சிகளையும் இயற்கை வடிவங்களையும் 'பிரதி' செய்வதை விடுத்து முற்றிலும் உணர்வு மயமான மனக்காட்சிகளையும், கருத்துக்களையும், உண்மைகளையும், ஆராய்ச்சி முடிவுகளையும் சித்தரித்துக் காட்டுவதிலேயே தொன்று தொட்டுத் தமிழகச் சிற்பிகள் நாட்டம் கொள்வாராயினர். ஆனால், அதேநேரத்தில் இயற்கையை அறவே புறக்கணித்து முற்றிலும் புதுமையான வடிவங்களையும் காட்சிகளையும் அவர்கள் படைக்கவில்லை. அதற்கு மாறாக, இயற்கையோடு நெருங்கி உறவாடி, அதோடு இசைந்து, அதன் இயக்கங்களையும், சிறப்பியல்புகளையும் நன்கு ஆராய்ந்து, உணர்ந்து, அவற்றைத் துணைக் கருவிகளாகக் கொண்டு, அகத்தே தோன்றிய உணர்ச்சிகளை அழகு மிளிரப் படைத்துக் காட்டியுள்ளார்கள், நமது தமிழகச் சிற்பிகள் என்றால் மிகையான கூற்றாகாது.

வேறெந்த நாட்டுச் சிற்பக்கலை மரபிலும் காணமுடியாத ஒரு சிறப்பியல்பு நமது மரபிற்கு உண்டு. சிற்ப வடிவங்கள் எதுவாயினும் சரி. இயற்கை அமைதியில் காணப்படுவதில்லை. சிற்ப வடிவங்கள் நின்றாலும், அமர்ந்தாலும் கிடந்தாலும், எக்கருத்தை உணர்த்துவதானாலும் அவை ஆடற்கலைப் பாணியிலேயே அமைக்கப்படுகின்றன. ஆடற்கலை ஒரு பண்பட்ட கலை, உள்ளத்தில் தோன்றும் இயல்பான உணர்ச்சிகளை மிகத் தெளிவாகவும், சுவையோடும், நெஞ்சிலே நிலைத்து நிற்கும் வகையிலும் ஆடிக்காட்டும் கலை. இதனை முக பாவனைகளாலும், உடல் ஒடிவு, வளைவு, குழைவு, சுளிப்பு முதலிய அமைதிகளாலும் பிற வகை அபிநயங்களினாலும் சித்தரிக்கிறது. ஆடற்கலை வாயிலாகக் கருத்துக்கள் சுவையோடும் முறையோடும் உணர்த்தப்படுவதை உற்று நோக்கித் தனது வடிவத்திலும் இது இடம் பெற வேண்டுமென்று முதன் முதலில் எச்சிற்பி உணர்ந்து சிற்பக்கலையில் இதனை ஏற்றினானோ அவன் உலகக் கலைமேதைகளில் ஒருவனாகக் கருதப்பட வேண்டுமென்றால், கலை உள்ளம் பெற்றோர் இதனை மறுக்கமாட்டார்கள். நமது சிற்ப வடிவங்கள் ஆடற்கலைப் பண்பினைப் பெற்றிருப்பதால் இவை தோற்றுவிக்கும் கலையின்பத்திற்கு எல்லையே இல்லை.

சிற்பங்கள் :

நாட்டிய இலக்கணத்திற் கேற்றவாறு சிற்பங்கள் இயற்றப்பட்டிருப்பதாகத் தோற்றத்தளவில் தெரிவதாயிருப்பினும், நாட்டிய இலக்கணத்தின் ஜீவனை உணர்ந்து கொண்ட சிற்பி, தனது தேவைக்கேற்றவாறும், இடத்திற் கேற்றவாறும், செய்யப்படும் பொருளுக்கேற்றவாறும், உணர்த்தப்படும் கருத்துக்கேற்றவாறும், சிறுசிறு மாற்றங்களைக் கற்பித்துத் தனது படைப்புக்களை உணர்ச்சி மயமாக்குகிறான். சிற்பியின் மனம் எவ்வெவ்வாறு வளை

கிறதோ, சுளிகிறதோ, நெளிகிறதோ, குழை கிறதோ அவ்வாறெல்லாம் அவனது வடிவங் கள் உருவெடுக்கின்றன. ஆடற்கலை வல்லுநர் கள் காட்ட முடியாத முகபாவங்களையும் உள் ளுணர்வுகளையும் அபிநயச் சிறப்புக்களையும் மிகத் தேர்ந்த முறையில் சிற்பி அமைத்துவிட முடிகிறது. அவன் கருத்தழகையே வலியுறுத் துவதால் மனித உடலுக்குரிய உடற்கூறுகளி னால் விளையும் இடையூறுகளை வெல்ல வேண் டிய நிலை அவனுக்கு ஏற்படுகிறது.

எடுத்துக்காட்டாக, இறைவன் இப்பூவுல கைப் படைத்து, அதில் கோடி இன்பங்களை வைத்து நம்மிடம் வழங்கி யிருக்கிறான். இஃது எக்காரணம் பற்றியென்று ஆராய்ந்த அறிஞர், இதனை நம்மீது இறைவன்கொண்ட கருணை யினாலும் அன்பினாலும் என்று கூறுவர். எனவே சிற்பியானவன் இறைவனைக் கருணை வடிவ மாகவும் அன்பின் உருவமாகவும் உணர்கிறான். கருணைக்கும் அன்பிற்கும் வடிவம் தரவேண் டிய பணி அவனைச் சாருகிறது. கருணை, அன்பு ஆகிய குணங்களே உருத்தரிக்கு மானால், இவ்வுரு எங்ஙனம் இருத்தல் வேண்டும் என்பதை உள்ளூர ஆராய்ந்து, சிந்தித்து வடி வம் அமைக்கும்பொழுது மனித உடற்கூறுகள் பல இடையூறுகளைத் தோற்றுவிப்பதைக் காணுகிறான். கருணையும் அன்பும் மலர் போன்ற மென்மையான குணங்கள், நெஞ்சை உருக்கும் தன்மையன, ஆன்மாவின் இன்ப வடிவத்தை உணர்த்துவன. இவற்றை வடிவத்திலே தெளி வாகக் காட்டுதற்கு மனித உடலின் நரம்பு களும் எலும்புகளும் தசைகளின் மேடு பள்ளங் களும் தடைகளாக நிற்கின்றன. இவை உட லின் விலங்குத் தன்மையைக் காட்டும் விறைப்பையுடையன. ஆகவே இவற்றைக் கட்டுப்படுத்தி, மறைத்து, அளவோடு உருண்டு திரண்ட, சதைப்பற்றோடே கூடிய, உடலமைப்பில் வைத்துக் காட்டினால்தான் தன் கருத்து விளக்கம் பெறும் என்ற முடிவுக் குச் சிற்பி வருகிறான். முகத்திலே மட்டும் கருணை அன்பு ஆகிய பண்புகள் தடையின்றி உடலெல்லாம் வழிந்தோடுமாறு காட்ட விழை கிறான். எனவே இயற்கை உடலமைப்பை, உடற் கூறுகளைத் தன் வயமாக்கி இன்னும் சொல்லப் போனால்—அடிமைப்படுத்திக் கருணை, அன்பு, சாந்தம், சிருங்காரம், மென்மை முழுமை ஆகிய பண்புகள் பொருந்தியதாக வடிவத்தை இயற்றி விடுகிறான். இதற்குச் சான்றாகப் புத்தர் படிமங்களும், திருமாலின் வடிவங்களும், சிவமூர்த்தங்களும், தேவியா ரின் இனிய வடிவங்களும். அமையப் பெற்றிருப்பதைக் கூறலாம். படிம உடற்கூறு களும் படிம அமைதிகளும் இதுபோன்ற கார ணங்களைப்பற்றி இயற்கை உடற்கூறுகளி னின்றும் இயற்கை நாட்டிய அமைதியினின் றும் வேறுபடுகின்றன என்பதை உணர்தல் வேண்டும்.

சிற்பக் கலையில் மனித வடிவங்களை விடுத் துப் பல்வேறு விலங்குகளின் வடிவங்களையும் காணுகிறோம். வீரவுணர்ச்சிக்கு உவமையாக நாம் எடுத்துக் காட்டுவது சிங்கம் அல்லது புலியேயாகும். அசோகனின் சிம்மத்தூண் களும், சோழனின் புலிக்கொடியும், பல்லவரின் சிம்மக் கால்களும் இதை நினைப்பூட்டுகின்றன. விலங்கினங்களில் சிற்பக் கலைஞர்களின் கவ னத்தையும் ஆர்வத்தையும் ஈர்த்தது சிம்ம வடிவமே,

சிற்ப உலகிலே நடமாடும் சிம்மவடிவம் இயற்கைச் சிம்மவடிவத்தை ஏதோ ஓரளவு ஒத்திருப்பினும் பெருமளவு மாறுபட்டிருப்ப தையே காண்கிறோம். இவ்வடிவத்தைப் பார்த் துச் சிம்மம் என்று உறுதியாகக் கூறுவோர் மிகக் குறைவு. இதனைக் கற்பனை வடிவம் என்று புறக்கணிப்போர் பலர் உண்டு. உண்மை யாதெனில், சிற்பியானவன் இவ்வடிவத்தில் உடற் சாயலைக் காட்டி அதற்கேயுரிய சிறப் பியல்புகளை வலியுறுத்திக் காட்டியுள்ளான், சிம்மம், உடலுறுதி மிக்கது; வல்லமை வாய்ந் தது; வேகமாய்ப் பாய்வது; பார்ப்போர் உள் ளத்தில் பய உணர்ச்சியைக் கிளறுவது; வீரம் மிக்கது. எனவே, வீரத்திற்குச் சின்னமான சிம்மத்தின் முழுவடிவத்தை அகத்திலே கொண்டு அதன் சிறப்பியல்புகளைத் துலக்க மாகவும், நாட்டிய அமைதியிலும் காட்டுகிறான். இயற்றிய வடிவம் சிம்மத்தையும் நினைப்பூட்ட வேண்டும்; சிம்மத்தின் தன்மைகளையும் பிரதி பலிக்க வேண்டும். எனவே முறிந்த புருவமும், உருண்டு மிரட்டும் கண்களும். இளித்தவாயும், கோரைப் பற்களும், மடித்த உதடும், சுருக்கிய நுதலும் முகத்திலே முறைபட அமைத்து உடல் உறுதிப்பாட்டினைத் திரண்டு பருத்த சதைப் பற்றினாலும், புடைத்த நரம்புகளினாலும் வீரச் சுவைமிளிர இயற்றுகிறான். வீரத்தையும் பய உணர்ச்சியையும் வலியுறுத்த வேண்டியிருப்ப

தால் "சிம்மத்தின் கால்களில் புலி நகங்களை வைத்துக் காட்டுக" என ஒரு சிற்ப நூல் சுட்டிக் காட்டுகிறது. இத்தகைய வீர வடிவத்தில் எத்தனை அழகுதான் காட்டப்பட்டுள்ளது? சோகத்திலும், கோபத்திலும், பயத்திலும் இன்னும் பல்வேறு உணர்ச்சிகளிலும் புற அழகையும் சுவைபட அமைத்துக் காட்டிய நமது சிற்ப மரபை என்னென்று புகழ்வது?

சிற்ப வேலைப்பாடுகள் :

சிற்ப அலங்கார வேலைப்பாடுகளில் பல விதமான இலைகள், காய்கள், பூக்கள், கொடிகள், ஆகியவற்றைக் காண்கிறோம். இயற்கையில் காணப்படும் செடிகொடிகளைக்கூட உள்ளதை உள்ளபடியே நம்மரபில் காட்டுவதில்லை. அதற்கு மாறாகச் செடி கொடிகளின் நெளிவு, சுளிவு, மடிப்பு, விரிப்பு, கோவை, அடுக்கு, மினுமினுப்பு, மென்மை, இயல்பான தன்மை, அதன் இயக்கங்கள் இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து உணர்ந்து அவற்றை மனங்கவர் பாவனைகளில் சித்தரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இத்துறையில் சிற்பியின் கற்பனை எவ்வளவு வளமாக இருந்தது என்பதை இவ்வடிவங்களை நேரில் பார்த்தே சுவைக்க முடியும். இவ்வடிவங்களைக் 'கருக்குகள்' என்றும் "பாளை" என்றும் தமிழகச் சிற்பிகள் குறிப்பிடுவார்கள். தமிழகச் சிற்ப மரபின் போற்றுதற்குரிய சிறப்பியல்புகளில் இதுவும் ஒன்றாகும். இது மட்டுமன்று, இயற்கையில் காணும், பறவை இனங்களில் சிற்ப வடிவங்கள், சிற்பியின் கரங்களிலே தனித்தன்மை வாய்ந்தனவாக வடிவெடுக்கின்றன.

நமது சிற்பிகள் தங்கள் சிற்பவடிவங்களில் உடல் அழகைக் காட்டிய பாங்கே தனி. ஆடைகளை உடலோடு ஒட்டியவாறு அமைத்து, ஆடையின் எல்லையை மட்டும் உருட்டிக்காட்டி, உடல் திரட்சியை, அதன் கவர்ச்சியை நன்கு வெளிப்படுத்துகிறார்கள். கலைத்துறையில் இது ஒரு மகத்தான சாதனை. அதுமட்டுமல்ல, உடலுறுப்புகளுக்கேற்றவாறு பொருத்தமான இடங்களில் கண்கவர் அணிகளைப் பூட்டி அழகு சேர்த்த முறையும் பாராட்டுதற்குரியதாகும். இவற்றுக்கெல்லாம் மேலாக, சிற்ப வடிவங்களின் தலைக் கோலங்களிற்றான் எத்தனை எத்தனை மனங்கவர் வகைகள்?

நம் நாட்டு—மேலைநாட்டுச் சிற்பங்கள் :

நமது நாட்டுச் சிற்ப வடிவங்களுக்கும், மேலை நாட்டுச் சிற்பவடிவங்களுக்கும் நிரம்ப வேறுபாடு உண்டு. நமது சிற்ப வடிவத்தை ஒரு சிலர் தவறாகக் கருதுகிறார்கள். மனித உடலின் வெவ்வேறு உறுப்புக்களின் அழகை வெவ்வேறு மனித வடிவங்களில் பார்த்து அவ்வாறு தனித்தனியே கண்டு சுவைத்த உறுப்புக்களையெல்லாம் ஒன்று சேர்த்துக் கற்பனையாக ஒரு முழு வடிவத்தை உருவாக்குவதாக நினைக்கிறார்கள். இஃது ஒரு தவறான கருத்தாகும், மேலை நாட்டுச் சிற்ப வடிவங்கள் மனித உடற் கூறுகளை நூற்றுக்கு நூறு செம்மையாகக் காட்டி மனித அழகின் புறத்தோற்றத்தையே வலியுறுத்துகின்றன. பெண் தெய்வம் ஒன்றின் வடிவத்தை மிக அழகிய ஒரு பெண்ணின் வடிவமாகவே காட்டியுள்ளார்கள். இவ்வழகில் கூடுதல் குறைவு காணப்படின் அவர்களின் கண்களை அவை உறுத்துகின்றன. எனவே புற அழகையே காட்ட முயலும்பொழுது அதற்கு ஓர் எல்லையும் தோன்றி விடுகின்றது.

கலைத்திறன் :

நமது சிற்ப மரபு காவிய மரபை ஒட்டியது. ஒவ்வோர் ஆண், பெண் வடிவத்தையும் ஒவ்வொரு காவியம் என்றே கலா ரசிகர்கள் கூறுவார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு கவிஞன் பெண் ஒருத்தியின் இனிய வடிவத்தைக் காணும்பொழுது அத்தோற்றம் அவனது உள்ளத்தில் இன்ப உணர்வைத் தோற்றுவிக்கிறது. அதனைப் பிறர் உள்ளத்தில் ஏற்றிக் காட்டுவதற்குப் பொருத்தமான சொற்களைக் கொண்டும், உவமை அணிகளைக் கொண்டும், இசைத்துக் காட்டுகிறான். இதே முறையில் சிற்பியும் தன் உணர்வில் நிற்கும் வடிவத்தைக் கல்லிலே ஏற்றி அதே உவமை அணிகளை அவர் வடிக்கும் வடிவத்திலும் பொருத்தி, தான் அருவமாக உள்ளத்தில் கண்ட வடிவத்திற்கு உருவம் அளிக்கிறான். கவிஞனின் உள்ளத்தில் தோன்றியது "அருவம்", இதற்கு அவன் கொடுப்பது "சொல் வடிவம்". சிற்பியின் உள்ளத்தில் தோன்றியது "அருவம்". இதற்கு அவன் கொடுப்பது "கல் வடிவம்" இவ்விருவரும் தங்கள் உள்ளத்திலே கண்டு இன்புற்ற பெண் வடிவத்தின் முகத்தை முழு மதியிலும், நெற்றியைப் பிறையிலும், புருவத்தை. கண்களை மலர்களிலும், கூந்தலை மயில் தோகையிலும், இடையைத் துடியிலும், தொடையை யானையின் துதிக்கையிலும், இங்ஙனம் ஒவ்வோர் உறுப்பையும் ஒவ்வோர் இயற்கை வடிவத்

திலே காணுகிருர்கள். இவற்றைச் சிற்ப வடிவத்தில் சிறப்பாக அமைத்துக் காட்டுவதே நம் நாட்டுச் சிற்பக்கலை மரபின் ஒப்பற்ற செயலாகும். இங்ஙனம் ஒவ்வொருவனும் வெவ்வேறு விதமான இயற்கைப் பொருள்களிலும் காணவும் கூடும். இதனுல் வடிவங்களும் வெவ்வேருக மாறும் தன்மை பெறுகின்றன. எனவே நமது கலைமரபிற்கு எல்லையென்பது இல்லை. கற்பனை விரியும் தன்மையுடையது. மேலும் தத்துவக் கருத்துக்களுக்கும், சமய உணர்வுகளுக்கும் வடிவம் காண்பதில் சிற்பக்கலை சிறந்த பணி செய்கிறது. இக்கருத்துக்கள் எல்லையின்றி விரிந்து உயர்ந்து செல்லத்தக்கவை. இத்துறையைச் சிற்பக்கலை பற்றிக் கொண்டதால் இத்துறை விரிவும் உயர்வும் பெறுவதாயிற்று. பல நூற்ருண்டுகளையும் கடந்து நமது சிற்பக்கலை வளர்ந்து ஓங்கியதின் இரகசியம் இஃதே.

முடிவுரை :

இத்தகைய அரும்பெரும் சிறப்பியல்புகள் வாய்ந்த நமது சிற்பக்கலை, மக்கள் கலையாகும். எவ்வாறெனில் சமுதாயத்தின் வாழ்க்கை நெறிகளையும், உயர்ந்த நோக்கங்களையும், பண்பாட்டின் சிறப்பையும். இக்கலை பிரதிபலிக்கிறது, தெய்விக வடிவங்களிலும், அவற்றின் திருவிளையாடற் காட்சிகளிலும் இப்பூவுலகின் இலட்சிய நாயக, நாயகிகளையே சிற்பிகள் சித்திரிக்கிருர்கள். தனிப்பட்ட தங்கள் உணர்ச்சிகளை மட்டுமல்லாது, சமுதாயத்தின் உணர்ச்சிகளையும், உள்ளக்கிடக்கைகளையும் சிற்பிகள் சமைப்பதால் பண்டைப் பெருமக்கள் சிற்பக் கலையைத்தங்கள் கலையாகவே கருதி ஆர்வத்தோடு பேணி வளர்த்தனர். ★



திருத்துறைப்பூண்டி வட்டம், கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் தோன்றியருளிய தலமாகிய மணக்குடி, திரு. தான்தோன்றீசுவரர் கோயிலில் நிகழ்ந்த குடமுழுக்கு விழாவில், நாஷக உதவியாணையர் திரு. பெ. புலியூருடையான். கோட்டாட்சியர் திரு. எம். கிருஷ்ணன், திருத்துறைப்பூண்டி சப்மாஜிஸ்டிரேட் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தல். (10—4—72)

சிற்றம்பலத்தின் சிறப்பு

பேராசிரியர் திரு. சி. கோவிந்தராசனர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

கோயில் என்றால் அது தில்லைச் சிற்றம் பலத்தையே குறிக்கும் வழக்கைப் போல, அந்தணர் என்றால் தில்லைவாழ் அந்தணர் களையே குறிக்கும் பெருவழக்கு தமிழகத்தில் என்றும் நிலவி வருகின்றது. இது குறித்தன்றே தமிழ் மறையாகிய தேவாரப்பாடல்களில் சிற்றம் பலத்திற்குரிய பாடல்கள் "கோயில் திருப்பதி கம்", "கோயில் திருவிருத்தம்" என்ற பெயர்களால் குறிக்கப்பட்டிருப்பதுடன், சுந்தரரும் திருத்தொண்டத்தொகையுள் தில்லைவாழ் அந்தணரை முதற்கண் வைத்துப் பாடுவாராயினர். நாவுக்கரசரும் "திருவுடை அந்தணர் வாழ்கின்ற தில்லை" என்று சிறப்பித் துள்ளார். இத்தகைய சிறப்பியல்புகட்குரிய சான்றுகள் இக்கோயிலிலுள்ள கல்வெட்டு களிலும் உள்ளன.

இத்தலத்தின் மிகப் பழம்பெயர், 'சிற்றம் பலம்' என்பதேயாகும். புராணங்கள், தில்லை வனம் என்று குறிக்கின்றன. கல்வெட்டுக் களில், புலியூர், பெரும்பற்றப்புலியூர், பொற் புலியூர், தில்லையூர், தில்லைச்சுடலை, கோயில் என்றெல்லாம் கூறப்பட்டுள்ளன.

தலத்தின் பெயர் ஊருக்கும் ஆகியிருக்கும் பெருமைகளுள் தலைமை உடையது தில்லைநகர். இந்நகர், சோழர்களின் ஆட்சியில் அரசர்களின் சிறப்புக் கண்காணிப்புக்குரிய தனியூராக இருந்ததென்பதைக் கல்வெட்டுக்களால் அறிய முடிகின்றது. முதல் இராசராசன் காலத்தில், "வடகரை ராஜராஜவளநாட்டு வெண்ணையூர் நாட்டுத் தனியூர்ப் பெரும்பற்றப்புலியூர்" என்று கூறப்பட்டுள்ளது. நாயக்க மன்னரின் ஆட்சியில் "வடகரை ராசாதிராசன் வளநாட்டு வெண்ணையூர்நாட்டு வெளுதலம் பட்டுச்சாவடி தனியூர் பெரும்பற்றப்புலியூர்" என்று குறிக்கப் பட்டுள்ளது.

சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனை, திருப்புலியீசுவரமுடையார், ஆளுடையநாயனர், தில்லைவனநாதர், ஆடவல்லான், ஆனந்தத்தாண்டவப்பெரு மான், நடராசர், நட்டமாடும் பெருமான்; சிதம் பரநாதன் என்றெல்லாம் கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளது.

சிற்றம்பலத்திற்கு, சோழமன்னர்கள் பாண்டிய மன்னர்கள் பல்லவர் குலத்தலைவர்கள் நாயக்க மன்னர்கள் அரசியர்கள் அரசியல் தலைவர்கள் ஆகியோர் செய்துள்ள திருப்பணி களும் அறக்கட்டளைகளும் மிகப்பலவாகும். அவற்றுள், சோழர் காலத்தில் முதல் இராச ராசன் திருத்தமக்கையார் குந்தவை. குலோத் துங்க சோழதேவர் திருத்தமக்கையார் மதுராந்தகியாழ்வார், குலோத்துங்கசோழ தேவர் மகளார் அம்மங்கையாழ்வாரான பெரிய நாச்சியார், இராசேந்திரசோழ தேவரான சுங்கந்தவிர்த்தருளின குலோத்துங்கசோழ தேவர் மகளார் அம்மங்கை, இராசகேசரி இராசேந்திர சோழதேவர் அணுக்கி நக்கன் பாவை, ஆகிய அரசமகளிர் செய்துள்ள அறச் செயல்கள் வரலாற்றுச் சிறப்புடையனவாகும்.

சிற்றம்பலத்துப்பெருமான், திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியார்; தில்லைவன முடைய பரமேசுவரி ஆகிய திருமேனிகட்கு

அக்காலத்தில் செய்யப்பட்டுள்ள நாள் வழி பாட்டுக்குரிய நிபந்தங்களும், திருவிழாக் கட்டளைகளும் பலவாகும். அவற்றுள் கி. பி. 1160-ல் இரண்டாம் இராசராசன் ஆட்சி யாண்டு 14, நாள் 107-ல் செய்யப்பட்டுள்ள முக்கனி வினியோக அறக்கட்டளையின் சிறப்பு சிந்தனைக்கு விருந்தாகும்.

மகாசபா விநியோகம் :

இரண்டாம் இராசராசன் ஆட்சியில் சோழ நாட்டின் மேற்குப்பகுதியாகிய, உய்யக்கொண்டார் வளநாட்டைக் காவல் செய்துவந்த அரையர் சவேதவனப் பெருமானுன காளிங்க ராயன் என்பவன், பொன்னம்பலமான திருச் சிற்றம்பலப் பெருமானுக்கு, பலா, மா, வாழை ஆகிய முக்கனிகொண்டு நிவேதனம் நிகழ்த்த விரும்பினுன். அவ்வரையனுக்கு உரியதாக, காவிரியின் வடகரை இராசாதிராச வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டு மாற்படுகையான அழகிய சோழ சதுர்வேதிமங்கலத்தின் உட்பிரிவான திருநீற்றுச் சோழமங்கலத்தில், ஒருவேலி இரண்டுமா புன்செய் நிலம் இருந்தது. அந் நிலத்தில் பலா, மா, வாழை ஆகிய மூன்று வகைப் பயன் தரும் மரங்களை வைத்து வளர்த்து, அவைகள் பயன்தரும் பருவம் வந்தவுடன், சிற்றம்பலத்துச் சபையாரிடம் ஒப்படைத்து, தனது அவாவினை நிறைவேற்றிக் கொள்ளத் திட்டமிட்டான்.

தில்லைச் சிற்றம்பலத்துக் காரியங்கள் எதுவாயினும், அப்பொழுது ஆளுகின்ற அரசினுல் நியமிக்கப்பெறும் கோயில் நிர்வாகக் கண்காணிப்பு அதிகாரிகள், ஸ்ரீ காரியம் செய்வார்கள் (தெய்வ வழிபாட்டினை முறையாக நிகழ்த்தி வைப்பவர்கள்) சாமுதாயஞ்செய்வார் (முறைமைக்குரியார்) கோயில்நாயகம் செய்வார்

தஞ்சை வட்டம் நன்னிலம் நகரத்தில், கோச்செங்கட் சோழனுல் கட்டப்பெற்ற திரு. மதுவனேசுவர சுவாமி கோயிலின் திருமதில் திருப்பணித் துவக்க விழாவில், நாகை உதவி ஆணையர் திரு. பெ. புலியூருடையான் அவர்களும். நாகைக் கோட்டாட்சியர் திரு. எம். கிருஷ்ணன் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தல். (13—3—72)

கோயில் காரியங்களின் தலைமையாளர்) திருமாளிகைக் கூறுசெய்வார்கள் (திருச்சுற்று மாளிகையில், முறைமைக்குரியாருக்குரிய இடங்களை வகைப்படுத்துபவர்) தில்லைநாயகன் பெரும்பண்டாரத்தார் (கோயிலுக்குரிய மூல தனம், வருவாய் ஆகியவற்றைக்காக்கும் தலைமைப்பொருட்காப்பாளர்) திருமடைப் பள்ளிப் பண்டாரத்தார் (நிவேதனத்திற்குரிய பொருள்களைக் காப்பவர்) பண்டாரப்பொத்தக முடையார் (பண்டாரப் பொருள்களை அளவிட்டுக் கணித்துவைக்கும் குறிப்பேடுடையார்) கணக்கர் (நாள்வழிபாட்டுச் செலவினங்களைக்கணக்கிட்டுப் பெருங்கணக்கரிடம் ஒப்புக் கொடுப்பவர்) ஆகிய ஒன்பதுவகையினர் ஒன்று கூடி ஆராய்ந்து செயல்படுத்தும் கோயில் மகா சபையினரே அனுமதியளித்தல் வேண்டுமென்பது கோயில் வழக்காக இருந்தது.

காளிங்கராயன், அம்முறைப்படியே சபையோரிடத்தில் தன் விருப்பத்தினை விண்ணப்பித்துக் கொண்டான். ஆடவல்லானுக்கு முக்கனிகொண்டு நிவேதனம்செய்யக் காளிங்கராயன் விரும்பியளிக்கும் நிலத்தைச் சபையோர் ஏற்று நடத்த ஒப்புக் கொண்டனர். தில்லை மூவாயிரவருள், கூவத்து உதயதிவாகரபட்டன் என்பவரிடம் அந்நிலத்தை ஒப்படைத்து, அவ்வறம் நிகழ ஆவன செய்தார்கள். அத்திட்டப்படி, உதயதிவாகரபட்டர், பலா மா வாழை ஆகிய மரங்களுடன் உள்ள அந்நிலம் ஒருவேலி இரண்டுமாவினை உரிமையாக அனுபவித்துக் கொள்ளவேண்டியது. அதற்கு ஈடாக ஆண்டுதோறும் முக்கனிகளை அவ்வப் பருவங்களில் நாள்தோறும் ஆடவல்லான் நிவேதனத்திற்குரியதாக முறையாகவும் குறிப்பிட்டவாறும் மடைப்பள்ளிக் கணக்கரிடம் ஒப்படைக்கவேண்டியது. வழிபாட்டு முறைமைக்குரியார் அப்பழங்களை "மகாசபா விநியோகம்" என்ற பெயரால் இறைவனுக்கு நாளும் படைக்க வேண்டியது.

முறைமைச்சீட்டின் விளக்கம் :

பலாப்பழம்: பழுக்கும் பருவமாகிய தை மாதம் முதல் ஆவணி மாதம் வரையில், தலைமீட்டுப்பழம் நான்கு சாண் சுற்றிலே 200-ம், அடுத்து 3 1/2 சாண் சுற்றிலே 150-ம், தொடர்ந்து மூன்று சாண் சுற்றில் 150-ம், ஆக பலாப்பழங்கள் 500.

மாம்பழம்: பருவகாலமாகிய சித்திரை மாதம் முதல் ஆவணிமாதம் வரைக்கும், சுவடில்லாமல் பழுத்த நிலையில் மாம்பழங்கள் 500.

வாழைப்பழம்: அதற்குரிய பருவமாகிய புரட்டாசி மாதம் முதல் மாசிமாதம் வரைக்கும் பழுத்த தரத்தில் 5000 வாழைப்பழங்கள்.

ஆண்டுதோறும் இக்கணக்கில் குறைவு வராமல் பட்டர் முக்கனிகளையும் முறையாகச் செலுத்த வேண்டியது. இத்திட்டத்தினை திருமந்திர ஓலை நேரியுடைய சோழ மூவேந்த வேளான் என்பவன் ஓலையில் எழுதினான். திட்டச் சீட்டினை ஒப்புக்கொண்ட பட்டர், கையொப்பம் செய்து கொடுத்தார். அப்போது சபையின் உறுப்பினராக இருந்த, காளிங்கராயன், திருமஞ்சனமழகியான், தென்னவன் பிரமராயன் ஆகிய அரசியலதிகாரிகள் மூவரும் திட்டச் சீட்டினைச் சரிபார்த்துச் சான்று செய்தனர். அவ்வோலையின்படியாக திருமாளிகையிலே கல்வெட்டக்கடவதென்றும் ஆணையிட்டனர். அதன்படி, மகாசபை விநியோகக் கல்வெட்டு, முதல் திருச்சுற்றின் வடக்கு மதிலில் உள்ள கற்களில் வெட்டப்பட்டது.

அதிகாரிகளின் அநுமதிப்படி, முக்கனி விளையும் நிலமும் நாடுவகை செய்வார்களால் அளந்து எல்லையிடப்பட்டு உதய திவாகர பட்டரிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்நிலத்திற்குரிய எல்லைகள், இராசாதிராசன் கொளத்தூர் எல்லைக்கு மேற்கு, சீவந்த சேவடி உள்ளிட்டார் நிலத்துக்கு கிழக்கு, நாட்டுப் பெருவழிக்குத்தெற்கு, காவிரி நீரோடு காலுக்கு வடக்கு என்பனவாகும்.

இக்கல்வெட்டுச் செய்தியால், அக்காலத்தில் அறச்செயல்கள், திட்டவட்டமாகவும் முறையாகவும் சான்றோர்களால் செய்தமைக்கப் பட்டுள்ளன என்பதைக் காணலாகும். இவ்வறச்செயல் இன்று நிகழ்ந்தாலும், காலத்தின் கோலத்தால் நிகழா விட்டாலும் கல்சொல்லும் கதையாக என்றும் நிலைத்து நிற்கும்.

ஆதுலர்சாலை :

நட்டமாடும் பெருமானுக்கு முக்கனி விநியோகம் செய்தமைத்த காளிங்கராயனின் அறத்தினைத் தொடர்ந்து இரண்டாம் இராசராசன் அவன் வழியாகவே, நடமாடும் கோயிலாகிய மக்களில் அனாதைகட்கு "ஆதுலர் சாலை" (அனாதைவிடுதி) ஒன்று பெரும்பற்றப்

புலியூரில் அமைத்து, அவ்விடுதி தடையின்றி நிகழப் பொருள் வருவாயினையும் ஏற்படுத்தி, அவ்வறம் கோயில் சபையார் வழியாகவே நிகழச்செய்துள்ளான்.

கி. பி. 1163-ல் பெரும்பற்றப்புலியூரில், முடித்தலைக்கொண்டபெருமாள் வீதியென்று பெயர்பெற்ற மேலைத்திருவீதி கீழச்சரகில், இராசராசன் ஆதுலர்சாலை ஒன்று அமைத்து அதற்கு "அறப்பெருஞ்செல்வி ஆதுலர்சாலை என்றும் பெயரிடச் செய்தான். அச்சாலையில் உண்ணும் அனாதைகட்கு அரிசி, கறி விறகு உள்ளிட்ட செலவினங்கட்கும்; சமையற்காரர், தண்ணீர் நிறைப்பவர் கட்டிடம் பழுதுபார்ப்பவர் ஆகியோரின் ஊதியங்கட்கும் கூடிய வருவாயாக, இராசதிராச வளநாட்டுப் பாண்டூரான குலோத்துங்கசோழன் வல்லத்து நிலமாய் நாற்பத்து நாலேகால்வேலி நிலத்தினின்றும் ஆண்டுதோறும் பெறப்படும் அரசாங்க வரியாகிய இறைப்பொருளைக் கொடுத்துள்ளான்.

சுவேதவனப் பெருமானாகிய தொண்டைமான், அரசனுடைய உத்தரவுப்படி, கோயில் சபையாரிடம் நிபந்தத்தை ஒப்படைத்து சாசனமும் செய்தளித்தான். சபையோரும் அறப்பெருஞ்செல்வி ஆதுலர்சாலையினை, அவ்விறைப்பொருளைக் கொண்டு நிகழ்த்தி வந்தார்கள். இவ்வறச் செய்தி பற்றிய சாசனத்தின்படியாக, சிற்றம்பலத்தின் முதல் திருச்சுற்றாகிய குலோத்துங்கசோழன் திருமாளிகைக் கிழக்கு மதிலில் கல்வெட்டு எழுந்தது.

தில்லைக் கல்வெட்டுப்பாடல் :

முதற் குலோத்துங்கனுடைய ஆட்சியில் படைத்தலைவனாக இருந்த மணவிற்கூத்தன் காலிங்கராயன் என்பவன் மாமல்லபுரத்தில் பிறந்தவன். இவன் தில்லைச்சிற்றம்பலத்திற்குச் செய்துள்ள திருப்பணிகளையும், அறச்செயல்களையும் அறிவிக்கும் முப்பத்தாறு வெண்பாக்கள் கல்வெட்டுக்களாக முதல் திருமாளிகை மதிலில் உள்ளன. அவற்றைக் கொண்டு அப்பெருந்தகை செய்துள்ள அறப்பணிகள் பலவற்றை நன்கு அறியலாகும். அவற்றுள், ஒருசில கல்வெட்டுப்பாடல்களை எடுத்துக் காட்டுவது இன்றியமையாததாகும்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள், திருநெல்வேலி மாவட்டம் இடிந்தகரை கிராமத்தில், திருச்செந்தூர் தேவஸ்தானத்தின் சார்பில் பொருளுதவி செய்து நிறுவப்பெற்றுள்ள விநாயகர் கோயிலுக்கு எழுந்தருளி, அங்குக் குழுமியிருந்த மீனவர்குல மக்களுக்குப் பிரசாதம் வழங்கி அருளுரை நிகழ்த்தியருளினார்கள். (24—4—72)

கற்றளியாக்கிப் பொன் வேய்ந்தான் :

தில்லைச்சுடலையமர்ந்தார் எழுந்தருளியுள்ள அம்பலத்தின் அடிப்படை செங்கற் கட்டிடமாக அமைக்கப்பட்டிருந்ததை, கருங்கல் திருப்பணியாக மாற்றி அமைத்து, கூரைக்குப் பொன் வேய்ந்தவன் இவனென்பதனை,

"தொல்லோர்வாழ் தில்லைச் சுடலையமர்ந்
தார்கோயில்
கல்லால் எடுத்தமைத்தான் காசினியில்—
நல்லார்
மறைவளர்க்க வெங்கலியை மாற்றிவழு
வாமல்
அறம்வளர்க்கக் காலிங்க ணுய்ந்து"

"தென்வேந்தர் கூன்நிமிர்த்த செந்தமிழர்
தென்கோயில்
பொன்வேய்ந்து திக்கைப் புகழ்வேய்ந்தான்
—ஒன்னார்தம்
குற்றம் பல கண்டோன் கோலிழைக்கும்
வேல்கூத்தன்
சிற்றம் பலத்திலே சென்று"

எனவரும் பாடல்கள் விளக்குவனவாகும்.

மண்டபம் செய்தான் :

தெய்வத் தமிழ்மறையாகும் திருப்பதிகங்களைச் சிவபெருமானின் திருவருளால், ஞானப் பாலுண்டு, தெய்வநலத்தினைச் செந்தமிழிற் குழைத்தளித்த ஞானசம்பந்தப் பெருமானின் திருப்பதிகங்களை நாளும் பொதுமக்கள் கேட்டு இன்புற, அதற்கென்று நிலையாக மண்டபமொன்றினைக் கட்டி வைத்தான்.

"நட்டப் பெருமான்தன் ஞானங் குழைத்
தளித்த
சிட்டப் பெருமான் திருப்பதியம்—
முட்டாமல்
கேட்போர்க்கு மண்டபத்தைச் செய்தான்
தென் வேந்தரோட
வாட்டிக்கும் தொண்டையர்கோன் மன்"

செப்பேட்டில் எழுதினுன் :

மூவர்பாடிய தேவாரப்பதிகங்கள் தில்லை அம்பலத்தில் ஒருசேர வைத்துக் காக்கப் பட்டிருந்தன. அவை, பனை ஓலைகளில் எழுதப் பெற்றிருந்தமையால், காலத்தால் அழிதல் கூடும் என்று கருதிய காலிங்கன், பாடல்கள் முழுவதையும் செப்பேடுகளில் பிரதியாக எழுதிவைத்தான்.

"மூத்திறத்தார் ஈசன் முதற்றிறத்தைப்
பாடியவர்
ஒத்தமைத்த செப்பேட்டி னுள்ளெழுதி—
இத்தலக்கீ
மெல்லைக் கிரிவா யிசையெழுதினுன்
கூத்தன்
தில்லைச்சிற்றம்பலத்தே சென்று"

இவ்வாறு, மணவிற் கூத்தன் செய்தமைத்த திருவறங்கள் பலவாகும். தில்லைச் சிற்றம்பலத்தின் மேன்மை, சைவநலத்துடன் தமிழ்நலமும் பெற்று, அறச்செயல்களால் உயர்ந்து, தெய்வநலம் மிகுந்திருப்பதைக் கண்டு இன்புறலாகும்.

குளித்தலை திரு. நீலமேகப் பெருமாள் கோயில், குடமுழுக்கு விழா. 1—4—72.

உள்ளுணர்வு

சிவயோகி திரு. மா. இரத்தினசபாபதி பிள்ளை அவர்கள்.

திருவாரூர்.

சமயங்கள் :

சமயங்கள் சமுதாயம் சீர்கேடடையாமல் மக்கள் சிறப்புற ஒழுக்கத்துடன் வாழப் புற நிலையைக் கொண்டு அமைக்கப்பட்டவை. அதனுல் சமயத்தை வகுத்தவர்கள் எல்லாம் தூலத்தைத் திருத்தினுல் சூக்குமமும் அதற் கேற்ப மாறுபாடடையும் என்று கருதிக் கர்மம், பக்தி, ஞானம் என்பவைகளைப் புறமுகமாய் அமைத்தனர். அவ்விதம் அனுஷ்டானம் செய்பவர் அகமுகமாகாமல், தூலப் பிரபஞ்சத் தினை விடாதவராயினர். அதனுல் அவர் களுக்குப் பிறவியின் கருநிலை திருத்தப்படாமை யால், அவர்களைக் காரியமயமான பிரபஞ்சமும் விடாது பற்றிக் கொண்டுள்ளது.

வேதாந்தம், ''நாம ரூபமானவைகள் மனக் கற்பிதம்; மாயையின் தோற்றம்; உண்மையில் அவை நிலை பெற்றவை அல்ல; பிரம்மமே சத்தி யம்'' என்று, எல்லாத் தத்துவங்களையும் விட்டுப் பிரம்மாகாரமாய் நின்று உலகை மறந்து விடும்படிக் கூறியது. இது உலக நிலையில் உள்ளவர்களுக்குச் சாத்தியமற்றது. மேலும் தாம் மட்டுமே வீடுபேறு அடைய இயலும். அவர்களின் சுயநலம் மிக்குள்ள நோக்கமே, இவ்விதம் அவர்களை உலகை விட்டுப் பிரியத் தூண்டுகிறது. இதையேதான் புத்தமதமும் கூறியுள்ளது. ஆராய்ந்து பார்ப்பவருக்குப் புத்தமதத்தையே வேதாந்தம் ஒரு வகையில் சிறப்பித்ததாகும் என்பது விளங்கும்.

வேதாந்திகள் ஞானவிசார வகையால், அவித்தை நீங்கிவிடில் எஞ்சிபது பிரம்மமே என்பர். விசாரணைக்கும் வைராக்கியத்திற்கும் சிறப்பிடம் கொடுத்துள்ள படியால், யோக பக்ஷத்தை ஏற்றுக்கொள்ளுவதில்லை. பாசபந்தி யானவன் பிரம்மமாய் விடுவது என்பது, முட வன் தக்க ஒரு துணையின்றி நெடும்பயணம் மேற்கொள்ளுவது போன்றதுதான். அவ்விதம் சங்கற்பம் விட்டு உலகை மறந்து தேகதரு மத்தை மறந்து நிற்கும்த குதியுடைய பெருமை, மக்கள் சமுதாயத்தில் பல நூற்றுண்டுகளில் ஒரு தடவை பிறக்கும் அபூர்வப் பிறவிக்கே அமைவது.

பிராசாதநெறி :

சைவமும் சாக்தமும், பாசநிலையிலிருந்து பாசநீக்கம் பெற ஒரு நூலேணியை வகுத்துள் ளன. அதைப் ''பிராசாத நெறி'' என்று பெயரிட்டனர். பிராசாதம் என்ருல் சிவத்தை அடையும் நெறி அல்லது தேகத்தை இறைவன் வாழும் கோயிலாக்குதல் என்று பொருள். இதைச் சோடச கலாப் பிராசாதம், துவாதச கலாப்பிராசாதம், பஞ்சகலாப் பிராசாதம் என்று கூறுவர். இதுவும் கிரியைவழி நிற்போருக் கும் உண்டாயினும், பாவனையால் நிகழ்வது தான். யோகிகள் பாவனையின்றி இறைவனை நேரே அனுபவித்துக் காண்கின்றனர். இதனுல் சைவமும் சாக்தமும் கூறும் சிவ தத்துவம் சிறப் புற்று, அதன் கீழான ஆத்ம தத்துவம், வித்தியா தத்துவங்களைக் கடந்ததாய், மேலான விந்து நாத மண்டலங்கள் விளக்கம் பெறும்.

சோகம்பாவனை :

ஒளி உள்ள இடத்தில் இருள் இருப்பினும், இருளால் ஏற்படும் மயக்க உணர்வு கெடுவது

போல், கீழான உணர்வுகளின் வழி சீவன் செல்லாது மேலான உணர்வில் சீவன் நிலை பெறச் செய்யும். இதனை வேறு மொழியில் சோகம் பாவனை செய்தல் என்பர். இதன் பொருள் ‘‘அவன் நான்’’ என்றதேதான். இதற்குச் சூக்குமப் பொருள் வேறு. அதாவது தேகத்தின் தூண் போன்று நிற்பது வீணாதண்டமாகும். வீணாதண்டத்தின் அடிப்பாகம் மூலாதாரமாகும். அதற்குரிய எழுத்துக்கள் வ, ஸ, ஷ, ச என்பவைகளாகும். ஆகாயத்திற்கு உரிய பீஜம் ஹ ஆகும். ஓ என்ற உயிரெழுத்து ஸ வுடன் கூடி, ஆகாய பீஜம் உயிர் மெய்யாகும் போது, ஸோகம் ஆகும். ஓம் என்பதின் விரிவே ஸோஹம் ஆயிற்று.

எல்லா மதத்தினரும் கண்ட மகாமந்திரம் ஓம் ஆகும். அதுவே ஓரெழுத்து ஒருமொழி என்பர். தேகத்திலுள்ள மூலக்கனலைச் சிரசுக்குமேல் கொண்டு சென்றால், சந்திர மண்டலம் சிறப்புறும். அதனால் அதன் கீழான அக்கினி கண்டம் சூரிய கண்டங்களின் ஆற்றலைக் கடந்து தேகமும், தேகத்தைத் தாண்டிய பகுதியும், ஒரே சோதி மயமானதாகக் காணும் போது; பந்தித்துக் கொண்டிருந்த பாச இருள் அகன்று விடும். காண்பது ஒளியேதான். இந்த நூலேணியைத்தான் ஆகமம் சிறப்பித்தது. பிரமம் எல்லையற்ற அகண்டப் பொருள், பிரமத்தை நினைத்து நினைத்துச் சீவனும் ஓர் எல்லைக்குட்பட்ட கண்ட நிலையை விட்டு அகண்ட சொரூபமாகிறது. அகண்ட சொரூபம் பெற்ற ஜீவனைக் கண்ட உருவில் அடக்கிவைக்க முடியாது. ஒரு படி அரிசியை மாவாக அறைத்து விட்டபிறகு மீண்டும் அதனை அதே படிக்குள் வைக்க முடியாது. இதுவே வேதம் கூறிய உண்மை.

பிரமம் குணமற்றது என்பதை உணர்ந்தாலும், சில சிறப்புக் குணங்கள் வியாபகம் பெறுதல் சில மூர்த்தங்களில் உண்டு என்று, உருவமற்ற பிரமத்திற்கு ஞானிகள் ஓர் உருவைக் கொடுத்து வழிபடலாயினர். குணம் காணப்படாதது; காணப்படாத அதனை நாம்காணும் படி உணர்துவது உருவ அமைப்பு. வல்லோன் வகுத்த தத்துவம், அகண்டத்திற்கும் கண்டத்திற்கும் தொடர்பு காண்பித்தது, எல்லைக்குள் பட்ட மனிதன் எல்லையைக் கடக்கவேதான். ஆனால் நடந்தது, உருவத்தில் மறைந்துள்ள குணதர்மத்தைக் கண்டு உருவத்தைக் கடந்து செல்ல முடியாமல், இரும்பு விலங்கைக் கழற்றி விட்டுப் பொன் விலங்கு பூண்டு கொண்டு மகிழும் மனிதனானன்.

நடராச வடிவம் :

அத்தகைய நுட்பத்தில் சைவம் கண்ட திருவுருவங்கள், பலவாகும். அவற்றில் நடராசர் தியாகராசர் அர்த்தநாரி என்பவைகளைக் கொண்டு பார்க்கவிளங்கும். தூல உருவத்தில் மனம் பதிந்தால், அதன் சமிக்ஞா ஞானம் பதிந்து, தேக தர்மம் மாறி, மனோதர்மமும் மாறி விடும் என்பதேதான். மனோதர்மம் உலகை விட்டு ஆகாய மயமாய்க் கண்டால், காணும் உடம்பும் ஆகாயத்தில் கரையவல்லது என்பது கருத்து.

நடராச வித்தையின் திருவுருவில் மனம் திளைத்தால், முயலகனை இருள் அமுக்கப்பட்டு ஒளிபெருகும் என்று பொருள். இதற்கு வலது காலை ஊன்றி, இடது காலைத் தூக்கும் திருவுருவம் வேண்டும். அதன் பொருள் சூரியனை வலது காலில் நின்று, சந்திரனை இடது காலைத்தூக்கு என்று பொருள். மனிதர்களிடம் உணர்வு என்றும் அறிவென்றும் இரண்டு உள்ளன. உணர்வு என்பது தானல்லாத பிற பொருளுடன் பொருந்தி அதிலடையும் அறிவு (இன்பம்). அறிவென்பது மனதில் இயல்பாக உள்ளதே, நூலறிவால் திடம்பெற்ற புத்தி தர்மம் ஆகும்.

பிரமம் காணப்படாததாக உள்ளதைக் கண்டவரிடம் உள்ள நம்பிக்கை, அங்ஙனம் கண்டவர் கூறும் நூலில் நம்பிக்கை கொண்டு நில் என்பதே வலது காலாகும். அப்படியான நம்பிக்கையின் உணர்வை (இன்பத்தை) மேலேற்ற முயல் என்பது தூக்கிய திருவடியாகும். வீணாதண்டத்தின் கீழ்ப்பாகத்தில் தொடர்புடையன கால்கள். மேற் பாகத்தில் தொடர்புடையன கைகள். கை என்ற சொல் சுழுமுனா நாடிக்கு ஒரு குறியீட்டுச் சொல் ஆகும். அதனால் கை என்ற சொல் யானைத்துதிக் கையைக் குறிக்கும் சொல்லாயிற்று. இடது கையை நடராசர் உருவில் கஜஹஸ்தம் என்றனர். அது யானைத் துதிக்கையைப் போன்றுள்ளது. கீழான இன்பம்போல நிலைத்த இன்பமாகிய உணர்வு பெறுவதைக் குறிக்கோளாகக் கொள் என்று பொருள்.

இரண்டு வேறுபட்ட தன்மைகள் ஒரே இடத்தில் பிரகாசமடைய முடியாது. அதாவது ஒளிமிக்கிடில் இருள் கெடும். இருள்மிக்கிடில் ஒளி அங்கு இல்லை என்று பொருள். இவ்வுண்மையின்படி ஒளி உணர்வில் நின்றால் கீ

காக்கப்படுவாய் என்றது அபய அஸ்தத்தின் பொருள். இவைகள் நடந்தால் ஜீவன் ஒளிமயமாகும் என்பதை மழுவினுலும், சகல அறிவையும் பெறும் நாதம் கிட்டும் என்பதை உடுக்கினுலும் அறிக. சிரசில் சடைமுடி பரந்துள்ளது, தோளுக்குத்தோள்உள்ள சந்திரமண்டலத்தின் பிரபை திடம் பெறும் என்பதாகும்.

இது சைவருக்கு இல்லறம், துறவறம் என்ற வேறுபாடின்றி அனுசரிக்கக் கூடியது. சிந்து வெளி நாகரிகத்தில் அமைந்ததாகும். சங்கநூல்களிலும் ஆதிரையான் இடம் பெற்று, கொடு கொட்டி, பாண்டரங்கம், கபாலம் என்று கூறப்படுகிறது. திருவாசகம், திருமந்திரம் முதலியவற்றில் சிறப்பாகக் கூறப்பட்டு, தேவார ஆசிரியர்களால் பாராட்டப்பட்டுள்ளதாகும்.

அர்த்த நாரீசுவரர்:

இதுபோலவே சாக்தமதம் பரவி வளர்ந்த தன் பயனுகை அர்த்த நாரீசுவரர் (அம்மையப்பர்) திருவுருவம் அமைந்துள்ளது இது இல்வாழ்வார்கள் சிறப்பாக வழிபடத்தக்க திருவுருவமாகும். இந்தச் சாதனையால் மனிதனிடம் சிறப்பான காம இச்சை கெட்டு, பால் வேற்றுமை விடுபட்டு, ஆண்மை மாறி ஒளிமயமான புருடனுவன். திருவாசகத்தில் சிறப்பித்துக் கூறும் திருவுரு இதுதான்.

தோலும் துகிலும் குழையுஞ்
சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்
சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும்
உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய்
கோத்தும்பீ

இதற்குச் சிரசின்மேல் வெண்ணிற ஒளியையும் பச்சை ஒளியையும், நாதமும் சோம சூரியாக்கினிமண்டலங்களையும் காண்பர் என்றுபொருள்.



பழநி மூன்ருவது படைவீடு திருவாவினன்குடி திரு. குழந்தைவேலாயுத சுவாமி கும்பாபிஷேக வைரவிழா நிகழ்ச்சியில் தமிழவேள் திரு. பி. டி. ராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் S. P. இராமநாதன் செட்டியார் அவர்கள் பொள்ளாச்சி திரு. N. மகாலிங்கம் அவர்கள், தேவஸ்தான நிர்வாக அதிகாரி திரு. S. ரத்தினம் அவர்கள் உள்ளனர்.

இவைகள் சூழ வட்டம்வட்டமாக மண்டலமாக விளங்குவதில் சிவமும் சத்தியும் உள்ளது என்பர்.

பூதங்கள் ஐந்தாகிப்
புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப்
பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட
கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும்
விளங்குதில்லை கண்டேனே

இங்குத்தில்லை என்றது, தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரத்துத் தலமல்ல. மனிதர்களின் சிரசின் மேல் விளங்கும் சகஸ்ரதளமாகும். இது வெப்பமுடைய தில்லம்பால் போன்று உலகாசையினால் சூழப்பட்ட சித்தவிருத்தியைக் குறிப்பிடும் பரமாகாய மண்டலமாகும். இந்த ஒளியைத்தான், பூதாகாய நாயகனான பிரமனும், குணாகாய நாயகனான விஷ்ணுவும் காண முடியாது நின்ற திருவுருவம் என்று பெரியோர் உவமித்துள்ளனர். இந்தத் திருக்கூத்தை உடலுடன் உள்ளவர் அகஉணர்வில் காண்பதே பிறவியின் பயன்.

தியாகராசர் :

மற்றொன்று தியாகராச வித்தையாகும். தியாகராசர் உருவம் என்பது சோமாஸ்கந்த வடிவமாகும். இதில் சிவம் சக்தி இருவருக்கிடையில் ஸ்கந்தர் காணப்படுவார். இது காஷ்மீர் சைவம் படைத்த திருவுருவாகும். இதில் விளக்கப்படுவது ஆன்மா சிவசத்தியினிடையில் உள்ளது என்பதே. சிவம் அறிவாகவும், அதில் அபின்னமான ஆற்றலான சக்தியுடன், ஆன்மா இணைந்தே உள்ளது. பந்த நிலையிலும், வீட்டு நிலையிலும் ஆன்மா அறியாமலோ அறிந்தோ சார்ந்துள்ளது என்ற உண்மையை உணர்ந்து, அதைச் சார்ந்து சீவ போதத்தை விட்டவர்க்கு இறைவன் தன்னையே தந்தருளுவன் என்பது இதன் கருத்தாகும்.

"தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன்றில்லா ஆனந்தம்பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையேகோயில்கொண்ட எம்பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசாஉடலிடங் கொண்டாய்
யானிதற்கிலன் ஓர் கைம்மாறே"

—திருவாசகம்

இந்த வித்தைகளைப் பக்தி காண்டிகள், கிரியையின் வழி உருவமைத்துப் புறத்திலும் உள்ளும்வழிபடுவர். இவர்களுக்குத் தியானத்தானம் அநாகதமாகும். அநாகதம் என்பதையே முதலாகக் கொண்டு பஞ்சப்பிரம மந்திரம், ஷடங்க மந்திரம் தொடங்குகின்றன. யோகியர் புருவ மத்தியத்தை அடிப்படையாகக் கொண்டு வழிபடுவர். யோகியர் இறைவனைத் தம்மில் இருத்தி இறைவனுடன் ஒன்றாக விளங்குமாறு பிரபஞ்சத்தை விட்டுவிட முயல்பவர். கிரியை வழியிற்பக்தி செய்வோர், இறைவனைத் தங்கள் உலக வாழ்விற்குத் துணைபுரிய வேண்டுபவர்களாக உள்ளனர். வேதமானாலும் சரி, ஆகமமானாலும் சரி, மனனம் செய்துவிடின் பிரமத்தைப் பற்றிய அறிவுண்டாகுமே தவிர, பிரமத்தைப் பற்றிய உணர்வுண்டாகாது. சனகாதி நால்வரும் கடல்போன்ற வேதத்தை உணர்ந்தவர்களாகிலும், அவர்களுக்கும் பிரமலட்சணம் உணர்வில் பதியவில்லை. அதனை அவர்களும் இறைவன் காட்டவே அறிந்து உணர்ந்தனர்.

தட்சிணாமூர்த்தி :

இங்கு ஒருநுட்பம் உள்ளது. உலகில் தென்முகக் கடவுள் ஆகிய தட்சிணாமூர்த்தியைப் பல பேதங்களாகக் கொண்டுள்ளனர். சில தட்சிணாமூர்த்திக்குப் புத்தகமும், சிலதில் வீணையும் இருக்கும். மேதாதட்சிணாமூர்த்திக்கு இரண்டு கையுடன் ஒன்று முடக்கிய இடது முழங்காலில் நீட்டிய இடதுகையும், சின் முத்திரை விளக்கம் கொண்டதாயும் விளங்கும். இங்கு உள்ள குறி சின்முத்திரையே தான். சின் முத்திரை என்பது சுட்டுவிரலைப் பெருவிரலுடன் இணைத்துள்ள பாவனை. சுட்டுவிரலுக்கு வடமொழியில் 'தர்ஜனி' என்று பெயர். "தர்ஜன்" என்றால் பயமுறுத்துபவன் என்று பொருள். நீ ஆணவம், கன்மம் மாயைகளோடு கூடியவனாய் இருந்தால் இப்பிரபஞ்சம் பயமுறுத்திக் கொண்டேயிருப்பதைப் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும். அப்படியின்றி அகண்ட சொருபத்தில் இணைந்துவிடு என்று பொருள். அகண்ட சொரூபம் என்பது விந்து நாதம் உணர்த்தும்

ஒளி, ஒலியான ஆகாயமேயாகும். ஆகாயத்தை உணர்த்துவது பெருவிரலாகும்.

அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடு மாயினும்
அண்ணல் அறைந்த அறிவறியாவிடின்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே
—திருமந்திரம் 64

அத்தத்தில் உத்தரங் கேட்ட அருந்தவர்
அத்தத்தில் உத்தரமாகும் அருள்மேனி
அத்தத்தினலே அணையப் பிடித்தலும்
அத்தத்தில் தம்மையடைந்து நின்ருரே
—திருமந்திரம் 24 24

இது உணர்த்தப்பட்டவிதம், பிரமத்தை உணர்ந்தவன், உணராது வாசகஞானம் பெற்ற சீடனுக்கு லக்ஷிய ஞானத்தை விளக்கிய நிலையாகும். இது மந்திரமற்ற வித்தையான படியால் மௌன வித்தையாயிற்று. இதைப் பிரணவ உபதேசம் என்பர். இது ஓம் என்று வாயினல் சொல்வது அன்று. இதை ஒரு மொழி, ஒருசொல் என்றும் கூறுவர். இதை அறிவதையே ஆகமம், இராச வித்தை என்று முரசறைந்தது.

"பிரியாத தண்ணருட் சிவஞானியாய் வந்து பேசரிய வாசியாலே, பேரின்பவுண்மையை அளித்தனை; என் மனதறப் பேரம்பலக் கடவுளாய், அறிவாயிருந்திடு நாதவொலி காட்டியே அமிர்தப்பிரவாக சித்தி அருளினை;யலாது திருவம்பலமுமாகியெனை ஆண்டனை; பினெய்தி நெறியாகக் குறிதானளித்தனை; நன்மரவுரி கொளந்தணக் கோலமா யசபா நலங் கூறினை, பின் மௌனியாய்ச் சும்மா விருக்க நெறி கூட்டினை; யெலா மிருக்கச் சிறியேன் மயங்கி மிக வறிவின்மையாவனே? தேடரிய சத்தாகி யென், சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே தேசோ மயானந்தமே" என்று தாயுமான சுவாமிகள், இதனை விளக்கிப் பாடியிருத்தல் காணலாம்.

நின்மல சாக்கிரம் :

பிரமம் உருவற்றது. பேதத்தை உணர்த்தும் ரூபத்தை விட்டது என்று ஞானியர் கூறுவர். அதனுல் தொடர் மந்திரங்களோ, கருத்தை உணர்த்தும் வாக்கியங்களோ அங்கு இல்லை. இயல்பாகச் சீவனிடம் உள்ள நாதவோசையேதான் பிரணவம். அதுவே தான் சக்தி அதுவே தான் சிவம். அதுவே தான் ஆன்மா. இந்த நாதத்தைக் கடந்தால் தேகத்தின் உணர்வை விட்டு நிற்பர். ஆனல் பேரறிவுப் பொருளுடன் பிணைந்து அறிவுருவாக உலகெங்கும் செல்லவும், அறியவும் ஆற்றலைப் பெறுவர். இதைப் பஞ்சசாதாக்கியத்தில் சிவசாதாக்கியம் என்று சதாசிவ ரூபம் கூறும். இதுவே சிவப்பேறு. இதை அறிந்து அனுபவித்துத் தேகத்தை விட்டவர் சதாசிவ புவனத்தில் அணு சதாசிவர் பதத்தில் வாழ்வர் என்று சைவநூல் கூறும். விழிப்பு நிலையில் இந்த நாதோபாசகர்களைப் பாசம் பற்ருதபடியால் இந்த நிலைக்கு நின்மல சாக்கிரம் என்று பெயரிட்டனர். இந்த யோகத்தையே தான் திருவாசகமும் திருமந்திரமும் தெளிவாக முழக்குகின்றன.

(தொடரும்)

குளித்தலை திரு. நீலமேகப்பெருமாள் கோயில், குடமுழுக்கு விழா, (1—4—72)



குளித்தலை திரு. நீலமேகப்பெருமாள் கோயில், குடமுழுக்கு விழா, (1—4—72)

மணியும் நிழலும்

சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான்
திரு. சி. அருணைவடிவேல் முதலியார்,
தருமபுர ஆதீனம், மாயூரம்.

அழகு தரும் பொருள்களில் மணிகள் (இரத்தினங்கள்) சிறந்தனவாகும். அதனால் அணிகலன்களை (ஆபரணங்களை) அணிகின்றவர்களும், மணிகள் இழைத்த அணிகலன்களையே பெரிதும் விரும்பி அணிகின்றனர்; அணிவிக்கின்றனர். உண்மையான நன்மணிகளைப் பெற இயலாதவர்கள்கூடச் செயற்கையில் போலியாகவேனும் சில மணிகளைச் செய்து கொள்கின்றார்கள். ஆயினும், உண்மை மணிகள்கூட, நல்லிசைப் புலவர்கள் தங்கள் புலமையால் உருவாக்கும் சொன் மணிகளுக்கு ஈடாகா.

'நன்மணிகளுக்கு விலையில்லை' என்று சொல்வார்கள். ஆயினும், உண்மையில் விலை வரம்பில்லாத மணிகள், புலவர்கள் ஆக்கியளிக்கும் சொன்மணிகளே. இனி அச் சொன் மணிகள் அருட்புலவர்களால் ஆக்கப்பட்டனவாயின், அவை 'விலைமதிக்க ஒண்ணாதன வாதல் சொல்ல வேண்டா. இவ்வகையில் அருட் புலவராகிய குமரகுருபர அடிகள் தில்லைச் சிவகாமியம்மைக்கு ஆக்கியளித்துள்ள சில அரிய சொன்மணிகளின் சிறப்பை ஒரு சிறிது நோக்குதலைக் கருதியது இச் சிறு கட்டுரை :

மணிகளை அணிகலன்களில் பதித்து அணிதலிலும், அவற்றையே வடங்களாகக் கோத்து அணிதல் சிறப்பு. அத்தகைய மணி வடங்கள் ஒருவகை மணியினாலும், பலவகை மணிகளாலும் அமைவனவாம். அவ்வமைப்பு முறைகளை ஒட்டிப் புலவர்களும், இரட்டை மணிமாலை, இணைமணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணி மாலை என்று இத்தகைய சொன்மணி மாலைகளை ஆக்கித் தம் வழிபடு கடவுளர்க்கும், பெரியார்கட்கும் அணிவிப்பர். குமரகுருபர அடிகள் திருவாரூர்த் தியாகேசருக்கு நான்மணி மாலையும், தம் ஞானாசிரியர் மாசிலாமணி தேசிகர்க்கும், தில்லைக் கூத்தப்பிரானுக்கும் மும்மணிக் கோவைகள் செய்து அணிவித்து, மதுரை மீனாட்சியம்மைக்கும், தில்லைச் சிவகாமியம்மைக்கும் இரட்டை மணிமாலை யாத்து அணிவித்தார்.

மணிமாலைகளை அணிந்துகொள்ளும் பொழுது, மணிகளின் ஒளி அணிந்துள்ளவர் மேல் வீசுதலோடு, அவர்களது உருவம் அந்த மணிகளில் நிழலாடுவதும் அந்த நிழல், மணியின் தன்மைகளுக்கு ஏற்பச் சிறிது சிறிது வேறுபடுதலும் இயல்பே. ஆயினும், குமர குருபரர் தில்லைச் சிவகாமியம்மைக்கு ஆக்கி யணிந்த இரட்டை மணிமாலையில் உள்ள அணிகளில் அவ்வம்மையின் வடிவம் வேறுபட்ட பல நிலைகளில் நிழலாடுதல் வியக்கத்தக்கதாய் உள்ளது.

பூ வல்லி :

தில்லைச் சிவகாமியம்மையை, சிவகாம வல்லி என்பர். வல்லி-கொடி. தேவர் உலகத்தில் உள்ளதாகச் சொல்லப்படும் 'காம வல்லி' என்னும் கொடி, கற்பக தருவில் படர்ந்து அழகைத் தருவதோடு, கேட்டவற்றையும் கொடுக்கும் என்பர். இத் தில்லைச் சிவகாம வல்லி ஆனந்த நடராசரைப் பற்றிப் படர்ந்து, உயிர்கட்கு ஆனந்தத்தை விளைவிக்கின்றது. உயிர்கட்கு என்ன—அந்த இறைவனையே ஆனந்தமயமாகச் செய்கின்றது என்பதைக்

குமரகுருபரர் இவ்விரட்டை மணிமாலையிலே "மன்றுடையார்க்குப் பரமானந்தமே ஏகம் தரும் திருமேனியதாக்கி" என்கிறார். சிவனைப் பற்றிப் படர்ந்து சிவானந்தத்தைத் தருதல் பற்றியே தில்லைப் பிராட்டி, சிவகாமவல்லி எனப்படுகின்றாள். இதனை, "தன் ஆனந்தக் கொடி" என்று கூறிய பரஞ்சோதி முனிவர் வாக்கால் அறியலாம்.

சிவகாமியம்மையை 'வல்லி-கொடி' என்றால் எவ்வாறு பொருந்தும் என்பதற்கு அடிகள் தரும் விளக்கம்: அவளிடத்தினின்றும் தோன்றிய இவ்வுலகம் 'பூ' என்று சொல்லப் பெறுதல் யாவரும் அறிந்தது. 'கோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப்பூ நிலப்பூ' என்னும் நால்வகைப் பூக்களில் கொடிப்பூவே சிறப்புடையது என்பர். ஆகவே அனைவராலும் பூ எனப் பாராட்டப் படும் இவ்வுலகத்தைப் பூத்தவளை (தோற்று வித்தவளை) 'ஓர் அரிய கோடி' என்பதில் ஐயம் என்னை என்பது. அபிராமிபட்டரும் அம்பிகையை,

"பூத்தவளே புவனம் பதினான்கையும்"

என்று அழைக்கின்றார். அதனால் குமரகுருபரரது இரட்டைமணிமாலையில் ஒரு மணியில் சிவகாமி யம்மையின் திருவுருவம் அழகிய கொடியாக நிழலாடுகின்றது; ஒரு கொடியன்று; பல கொடி களாக-வல்லிகளாக நிழலாடுகின்றது.

ஒரு வல்லி; அல்லிக் கமலத்தில் ஊறு
பைந்தேறல் ஒத்த
திருவல்லி; தில்லைச் சிவகாம வல்லி;
என் சித்தத் துள்ளே
வருவல்லி; செம்பொன் வடமேரு வில்லியை
வாட்கண் அம்பால்
பொருவல்லி; பூத்தலின் அன்றோ இப்
பூமியைப் பூ என்பதே

வன மயில் :

சிவகாம சுந்தரி, ஒரு மணி நிழலில் சிவகாம வல்லியாய் விளங்குதலே அன்றி, மற்றொரு மணியில் வனமயிலாய்க் காட்சி யளிக்கின்றாள். சிவகாமக் கொடிக்குக் கொழுகொம்பாய் உள்ள தில்லைவனப் பெருமான் நஞ்சினை அஞ்சாது உண்டான்! அதுவன்றி நஞ்சுடைய பாம்புகள் பலவற்றை அணிகலங் களாக எடுத்து அணிந்து நிற்கின்றான். இதற் கெல்லாம் காரணம், தன்னிடத்தில் (தன் இடப் பாகத்தில்) தில்லை வனத்து மயில் ஒன்று நீங்கா திருக்கின்றது என்னும் துணிவேயாகும் என்கின்றார் குமரகுருபரர். எனவே, அவர் அணிவித்த மணிகளில் ஒன்றில் அம்மை வனமயிலாக நிழலாடுதல் காணலாம்.

கறைகொண்டு நச்சரவக் கச்சணிந்தா ரென்று
மறைகொண்டு வாழ்த்துவதும் வம்பே
—இறைகொண்டு
அயிலிருக்கும் முத்தலைவேல் அண்ணலுக்
கென்னே ஓர்
மயிலிருக்கத் தில்லைவனத் தே.

பச்சை அன்னம் :

ஒரு மணியில் மயிலாய்க் காட்சியளிக் கின்ற அம்மை, மற்றொரு மணியில் அன்ன மாய்க் காட்சி அளிக்கின்றாள்: அன்னம் வெண்மை நிறம் உடையது; இது பச்சை நிறம் உடையது. எனவே, இஃது ஓர் அதிசய அன்னம். இவ்வன்னம் பல்லாயிரம் அண்டங் களை (முட்டைகளை-உலகங்கள்) ஈன்றது; தனது சிறகுகளால் (கைகளால்) பல குஞ்சுகளையும் (உயிர்களையும்) அணைத்துக்கொண்டு, இரை தேடித் தந்து (உலகப் பயன்களைக் கூட்டு வித்து) வளர்க்கின்றது. இது மூழ்கி விளையாடு வது, தில்லைக் கனகசபையில் அலைவீசுகின்ற (ஆடுகின்ற) ஓர் ஆனந்தக் கடலிலேயாகும்.

வன்னஞ் செறிவனைக் கைச்சிறகால்
தன் வயிற்றி னுள் வைத்து
இன்னஞ் சராசர ஈர்க்குஞ் சணைத்(து)
இரை தேர்ந்தருத்திப்
பொன்னம்பலத்துளோர் ஆனந்த வாரிபுக்(கு)
ஆடும் பச்சை
அன்னம் பயந்தன கொல்லாம்
பல்லாயிர அண்டமுமே.

கொம்பர்-குமரி :

மயிலாய்ப் பச்சை அன்னமாய்க் காட்சி வழங்கும் சிவகாமி, மற்றொரு மணியில் கற்பகப் பூங்கொம்பாய் இறுதியில் என்றும் அறியாத கன்னிகையாய்க் காட்சி வழங்குகின்றாள்.

நிறையப் பூத்த பூக்களையுடைய பூங் கொம்புகள் அளிக்கூட்டம் (வண்டின் குழாம்) வந்து இசையைத் தோற்றுவிக்கத் தலையிறங்கிப்

பூங்கொத்துகளை வளைத்து நிற்கும். ஆயினும் தேவர் உலகத்தில் உள்ள கற்பக தருவின் பூங்கொம்புகளை அளிகள்(வண்டுகள்)'அணுகுவதில்லை. எனினும், தில்லைச் சிவகாமி, தில்லைப் பெருமானது அளிக்கூட்டத்திற்கு (அருள் வெள்ளத்திற்கு)த் தலையிறங்கிக் குலை வளைக்கின்ற பூங்கொத்துக்களைத் தருகின்ற—உடல் வளைகின்ற கற்பகப் பூங்கொம்பாயும் அப்பெருமானுக்குப் பிறந்த பல உயிர்களைப் பெற்றும் என்றுமே குமரியாயும் காட்சியளிக்கின்ருள். அக்காட்சி நிழலையுடைய மணி இது.

தலைவளைத்து நாணி, எந்தை தண்ணளிக்கே
ஒக்கும்
குலைவளைத்த கற்பகப் பூங்கொம்பர் குலமறைகள்
நான்குமரி யார்க்கிந்த ஞாலமெலாம்
ஈன்றளித்தும்
தான் குமரி யாகியிருந் தாள்.

(பெருது பெற்றவள் ஆதலின் குமரியே யாகின்ருள்)

இவ்வாறு அகிலசோதியனுய் அம்பலத்தில் ஆடும் ஆனந்தக் கூத்தனை அகலாது அணைந்து நிற்கின்ற அம்மை சிவகாமி, அலகிலா வடிவில் காட்சியளிக்குமாறு அவட்குக் குமரகுருபரர் அணிவித்த இரட்டைமணி மாலையால் நாமும் அவ்வம்மையை அலங்கரித்து அவளது அருளைப் பெற்று உய்வோமாக. ★

பழநி மூன்ருவது படைவீடு திருவாவினன்குடி திரு. குழந்தைவேலாயுத சுவாமி கும்பாபிஷேக வைரவிழா நிகழ்ச்சியில், வைரவிழா மலரைப் பொள்ளாச்சி திரு. N. மகாலிங்கம் அவர்கள், வெளியிடத் திருப்பணி நன்கொடையாளர் திரு. S. P. இராமநாதன் செட்டியார் அவர்கள் பெற்றுக்கொள்ளுதல்.

சண்டேசுவரர்

வித்துவான், தவத்திரு.
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்,
தலைவர், காசிமடம், திருப்பனந்தாள்.

ஆலயங்கள்தோறும் விநாயகர், சுப்பிரமணியர், சுவாமி, அம்பாள், சண்டேசுவரர் என்ற ஐந்து மூர்த்திகளுக்கும் தனித்தனி சந்திதிகள் அமைந்துள்ளமை காணலாம். உற்சவ காலங்களிலும் அந்த ஐந்து மூர்த்திகளின் உற்சவப் படிமங்களே வீதியில் எழுந்தருளச் செய்யப்பெறுகின்றன. அந்தப் பஞ்ச மூர்த்திகளில் ஒரு மூர்த்தியாகிய சண்டேசுவரரைப் பற்றியது இக்கட்டுரை.

தோற்றம்

சைவாகமங்களில் விநாயகர் சுப்பிரமணியர் போன்று சண்டேசுவரர் தோற்றம் பற்றிய வரலாறு யாதும் அறியக்கூடவில்லை. சண்டம் என்ருல் கோபம் என்று பொருள்படும். சண்டி கோபக்குணமுடையவர்; ஆகவே "உருத்திர மூர்த்தியின் கோபாக்கினியில் உதித்தவர் பயங்கரமுடையவர்" என்று அகோர சிவ பத்ததி, சண்டேசுவர பூசைப் பகுதியில் சண்டேசுவரர் தியானத்தில் உள்ளது.

"சீரார் சண்டன் பூசை செய்" என்ற சைவ சமய நெறி 554-ஆம் பாப்பகுதிக்கு யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் அவர்கள் "கோபம் பொருந்திய சண்டேசுவரரைப் பூசை பண்ணுக" என்று உரை எழுதியுள்ளார். எனினும் சிவபெருமான் கோபம்கொண்டு சண்டேசுவரர் பிறந்த வரலாறு தெரியவில்லை.

சுப்பிரபேதாகமம் சண்டேசஸ்தாபன விதிப் படலத்தில்: சண்டன் என்ற பெயரோடு விளங்குகிறவர்கள் எல்லோரும் ஸ்ரீருத்ரனுடையதாகவே இருக்கிற உருத்திராம்சத்தைச் சார்ந்தவர்கள். பிரசண்டன் முதலான ஐந்து உருவத்தோடு தோன்றியவர்கள். மூன்ருவது ஆவரணமான கணேசுவரர் அம்சத்தைச் சார்ந்தவர்கள். 1. பிரசண்டசண்டன், 2. வக்கிராந்த சண்டன், 3. விபுசண்டன், 4. வீரசண்டன், 5. சண்டேசன் ஆகிய இவர்கள் சிவபெருமானுடைய பஞ்சப் பிரம்மம் என்று சொல்லப்படுகிற ஈசானம் முதலியவைகளிலிருந்து தோன்றியவர்கள். கிருத யுகத்திற்கு அதிபதியாகப் பிரசண்டசண்டனும், திரேதா யுகத்திற்கு அதிபதியாக விக்கிராந்தசண்டனும், துவாபரயுகத்திற்கு அதிபதியாக விபு சண்டேசனும், கலியுகத்திற்கு அதிபதியாக வீர சண்டேசனும் சொல்லப்படுகிருர்கள்.

உருவ வகைகள் :

சண்டேசர், பாம்பு அணி, நீலகண்டம் சடைமுடி சந்திரசூடம் திரிநேத்திரம் நான்கு முகம் எட்டுத்தோள் உருத்திராக்கம் சூலம் எழுத்தாணி கமண்டலம் பிநாகம் பாணம் வச்சிரம் வரதம் அபயம் முதலிய உடையவராய் வீராசனம் கொண்டு எழுந்தருளியிருப்பார். இவர்க்குக் கிருதயுகத்தில் எட்டுத்தோள், திரேதாயுகத்தில் ஆறு தோள், துவாபர யுகத்தில் நான்கு தோள், கலியுகத்தில் இரண்டு தோள். இவர் சாமள நிறத்துடன் கூடிய சண்டிகாதேவியுடன் கூடியிருப்பவர். இவர்க்குக் காமிகாகமத்தில் தனியே ஆலயம் முதலிய உற்சவாதிகள் கூறப்பட்டிருக்கின்றன. வாகனம் இடபம். சிம்மள தேசத்தில் இவரது ஆலயப்பிரதிட்டை கூறப்படுகிறது. இவர் உருத்திர கோபத்தில் உதித்தவர்.

மற்ருெரு வகை :

மைந்நிறமுடையவராய்ப் பயங்கரமுடையவராய்ச் சூலம் உளி முதலிய ஆயுதங்களுடையவராய் உருத்திர சம்பந்தம் உள்ளவராய், நான்கு தோள்களையும், நான்கு முகங்களையும் உடையவராய், அக்னிச்சுவாலா முகராய்ப் பன்னிரண்டு கண்களையுடையவராய், சடைமுடியிற் பிறைச்சந்திரனைத் தரித்தவராய், சர்ப்ப

கங்கணமுடையவராய், நாக யஞ்ஞோபவீதராய் வெண்டாமரை ஆசனத்தில் வீற்றிருப்பவர். (சைவ பூஷணம்).

மூன்ருவது வகை :

நின்ற கோலம் அல்லது வீற்றிருக்கும்நிலே; இரண்டு புயங்கள்; மூன்று கண்கள்; மைந்நிறம்; சடைமுடி; வீற்றிருக்கும் திருக்கோலம்; ஆயின் வலது காலேத் தொங்கவிட்டு இடது காலே ஆசனத்தில் மடித்து வைத்திருக்கவேண்டும். இடது கை இடது துடையின் மேல் இருக்கலாம்; அல்லது வரதநிலே. வலது கையில் டங்கம் (உளி) இருக்கும்; அல்லது இரண்டு கைகளும் அஞ்சலி நிலேயில் இருக்கலாம்.

நான்காவது வகை :

நான்கு திருக்கைகள் ; டங்கம் பாசம் சூலம் பூண்டவை; ஒன்று அபயம். இங்ஙனம் தென்னிந்தியப் படிமக்கலே தொகுதி 5, பக்கம் 466-ல் கூறப்பெற்றுள்ளது. பரிவார தேவதையாக இல்லாமல், தனிக்கோயிலாக இருப்பின் மேலே கண்டவண்ணம் விக்கிரகம் அமைக்கப்பெறும். கோயிலில் பரிவார தேவதையாக இருப்பதாயின் சிவன் கோயிலில் வடகிழக்கு மூலேயில் சண்டேசுவரர் ஆலயம் அமைக்கப்பெறல் வேண்டும். இதில் உள்ள சண்டேசுவரருக்கு மூன்று கண், நான்கு முகம்; அல்லது இரண்டு முகம்; கோபமான தோற்றம்; சடைமுடி இரண்டு கைகளே இருப்பதாயின், ஒன்று வரதம் மற்ருென்றில் டங்கம்; வெண்மையான பூணூல்; உட்கார்ந்தோ நின்ருே இருக்கலாம்.

இனிச் சிவபெருமானுக்கேயன்றி மற்ற மூர்த்திகளுக்கும் தனி ஆலயம் தனி வழிபாடு உள்ளபோது, தனித்தனி சண்டேச மூர்த்தங்கள் உள்ளன. விநாயகருக்கு-அம்போச்சண்டர் அல்லது கும்போதரச் சண்டரும், முருகனுக்கு-மாத்ரு சண்டர் அல்லது சுமித்ர சண்டரும், சக்திக்குச்-சக்தி சண்டர் அல்லது நீலிச் சண்டர் (சண்டேசுவரி) (சக்தி சண்டத்தை ஆறுமுக நாவலர் யமனி என்பர்); தில்லே நடராஜப் பெருமானுக்குப் பிரமசண்டர்; சூரியனுக்குத் தேஜஸ்சண்டர் என்பர். பொதுவாகச் சிவாலயங்களில் இந்த யுகத்தில் உள்ள சண்டர் தொனிச்சண்டர் என்பதே ஆகமங்களின் முடிவு ஆகும்.

சண்டீசரும்–சண்டேசுவரரும் :

பெரியபுராணத்துள் குறிக்கப்பெற்ற சண்டீச நாயனுர் காலத்திற்கு முன்பே ஆலயங்களில் சண்டேசுவ்ர மூர்த்தம் உள்ளது. ஆகமங்கள் சண்டர், சண்டேசுவரர் என்று குறிப்பிடுகின்றன. சேக்கிழார் பெரியபுராணத்துள் சேய்ஞ்ஞலூர்ப் பிள்ளேயாருக்கு (விசாரசருமருக்குச்) சிவபெருமான் திருவாக்காக "சண்டீசனுமாம் பதம் தந்தோம்" என்றே குறிப்பிடுகிருர். இங்கு மாணிக்கவாசகர் தனக்குச் சிவபெருமான் சிவபதம் அளித்தமை குறித்துச் சிவபெருமானே, "செம்மையேயாய சிவபதம் அளித்த செல்வமே சிவபெருமானே" என்று விளித்துள்ளதனேயும் நோக்கச் சண்டேசுவரரும், சண்டீச நாயனுரும் வேறு என்று ஏற்படுகிறது. விசாரசருமர் பெற்றது சண்டீசப்பதம் என்பது சிலரது கருத்து.

பெரியபுராண வரலாற்றுள் குறித்துள்ளது போலவே "தந்தைதனேச் சாடுதலும் சண்டீசன் என்றருளி", "எழில்கொள் சண்டீசனெனச் சிறந்த பேறளித்தார்" எனச் சம்பந்தப் பெருமானும், "ஆங்கணே ந்த சண்டிக்கும் அருளியன்று தன் முடிமேல் அலர் மாலே அளித்தல் தோன்றும்", "தண்டியார்க்கு அருள்கள் செய்த தலேவர் ஆப்பாடியாரே" என அப்பர் பெருமானும் திருமுறைகளில் குறித்துள்ளனர். "தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு" என்பது திருப்பல்லாண்டு. இனிச் சண்டீசர் பற்றிப் பெரிய புராணத்தில் குறித்துள்ளதுபோன்றதொரு வரலாறு அபிதான சிந்தாமணியில், சண்டேசர் என்ற தலேப்பில் காணப்பெறுவது.

பின்வருமாறு :

கர்க்க குலத்தில் கணபத்திரன் என்னும் அந்தணன், மால்யவான் எனும் பர்வதத்தில் தன் மனேவி சுநீதையுடன் இல்லறம் வழுவாது நடத்துகையில், அநமித்திரன் எனும் விதர்ப்ப நாட்டரசன் அவ்விடம் வந்து அந்தணனேத் தான் செய்யும்அசுவமேத யாகத்திற்குஹோதாவாயிருக்க வேண்டி அழைத்து, அவ்வியாக பூர்த்தியில் அநேக பசுக்களேயும் பொருள்களே கொடுத்தனன். இவ்வந்தணன் தன் குமாரர் சண்டர் வசம் அப்பசுக்களே ஒப்படைத்து மேய்த்துவரச் செய்தனர். இவர் அப்பசுக்களே மேய்த்து வருகையில் அப்பசுக்கள் அதிகமாய்ப் பால் கொடுத்தன. அவற்றைக்கண்ட சண்டர் இவை நம் இறைவனுக்குப் பயனிலாது போதற்கோ; நாம் இப்பசுக்களே மேய்ப்பதென்று சுரைக்குடுக்கைகளில் அப்பால் முழுவதும் கறந்து, அவ்வனத்திலுள்ள சிவப்பிரதிஷ்டைகளுக்கும் தமது ஆத்மார்த்த மூர்த்திக்கும் அபிஷேகித்து வருவர். இவ்வாறு

N72.14.9

வருகையில் பால் குறையக்கண்ட தந்தை மகனைக் கேட்கக் கன்றுகளின் மூதிர்வில் பால் குறைந்ததென, நம்பாமல் அவருடன் பசுக்களை மேய்க்கும் பிள்ளைகளைக் கேட்டு உண்மையறிந்து அதனைக் காணுமாறு ஒரு மரத்திலே ஏறியிருந்து இவர் மணலால் சிவலிங்கம் அமைத்துப் பாலை அச்சிவலிங்கத்திற்கு அபிஷேகிக்கக் கண்டு, கடுங்கோபங்கொண்டு விரைந்து வந்து, அச்சிவலிங்கத்தையும் அதற்கு நிவேதனமாக வைத்திருந்த பாலாதிகளையும் காலாலிடறக்கண்டு இவர் அதிகோபாக்கிராந்தராய், உம்மை இகழ்ந்தவன் மகாபாபியென இடறிய காலைத் தருப்பை கொய்ய வைத்திருந்த கோடரியால் சேதித்தனர். உடனே சிவபெருமான் சண்டருக்குத் தரிசனம் தந்து, அவர் தந்தைக்குப் பிராட்டியாரால் உடைந்த கால்களைத் தருவித்து இவரை முதுகைத்தடவி, "நீ இன்று முதல் சண்டகேசன் எனும் பெயரடைக; நாம் உனக்கு எமது பொற்கோயிலும், மணி முடியும் மாலையும் எமது நிவேதனமும் தந்தோம். இனி நீ தொண்டர் நாயகனாக விளங்கி, எம்மைப் பணிவோர் உன்னைப் பணிந்து எமது தரிசனப் பலன் பெறுக" என்று அநுக்கிரகிக்கச் சாரூபமும் பெற்றவர். (சிவரகசியம்).

148698

சண்டேசுவரர் காதுகேளாக் கடவுளா ?

★ நம் முன்னோர்கள் வழிபாட்டில் செய்து வந்த சில மரபுகளுக்கு, நாம் தக்க விளக்கம் பெறாததால், சில தவறான எண்ணங்களும் தோன்றிவிடுகின்றன. அதிலே ஒன்று சண்டேசுவரர் சந்நிதியில் கைதட்டுதல். கைதட்டுவதற்கு அவரவர்கள் அறிவு சென்ற வழியிலெல்லாம் விளக்கம் காணுகின்றனர். 3—2—72-ல் கொச்சியில் நடைபெற்ற ஒரு சங்கத்தின் நான்காவது ஆண்டு விழாவில் அக்கூட்டத்தின் தலைவர் "கடவுளும் செவிடு இல்லாதவர் அல்லர்" என்றும், "சண்டேசுவரர் செவிடர் அதனால்தான் அங்குக் கைதட்டுகின்றனர்" என்றும் கூறியுள்ள செய்தி, இந்துப் பத்திரிகையில் வெளிவந்தது. அதையொட்டிச் சிறுவர்களுக்குரிய ஒரு வாரப் பத்திரிகையிலும், "கடவுளுக்கும் மனிதர்களைப்போல் உடலில் குறைகள் உண்டு; சண்டிகேசுவரக் கடவுள் என்று ஒரு கடவுள்; இவருக்குத் தென் இந்தியாவில் சில இடங்களில் கோவில்கள் இருக்கின்றன; இந்தச் சண்டிகேசுவரக் கடவுளுக்குக் காது கேட்காதாம்; இதனால் இந்தக் கடவுளை வணங்குகிறவர்கள் இந்தக் கடவுள் சிலைக்குப் பக்கத்தில் போய்க் கைதட்டிக் கும்பிடுகிறார்கள்" என்று வெளிவந்துள்ளது. மற்றொரு சாரார் சண்டேசுவரர் யோகத்திலிருப்பதாகவும், அவரை யோகத்திலிருந்து எழுப்பிப் பிரார்த்திக்கவே கை தட்டுவதாகவும் சொல்லுவார்கள். முன்னது உண்மையல்ல. பின்னது பொருந்துவது அல்ல. தவத்தை-யோகத்தைக் கலைத்தால் ஏற்படும் விபரீதங்களை மன்மதன், எச்சதத்தன் அடைந்த பலன்களைக்கொண்டு நாம் உணரலரம்.

கை தட்டுவது எதற்கு ?

மூர்த்திகள் வழிபாட்டில் முத்திரை காட்டுதலும் ஒன்று. அந்த வகையிலே சண்டேசுவரர் சந்நிதியில் அஸ்திர மந்திரம் சொல்லித் தாளத்திரயம் செய்கிறதாகிய முத்திரையே கை தட்டுவதாகக் கருதப்படுகிறது. வழிபாட்டின் தொடக்கத்தில் விநாயகப் பெருமானிடம் வழிபாட்டில் இடையூறு-விக்கினம் வராமலிருக்கத் தலையில் மும்முறை குட்டிக்கொண்டு பிரார்த்திக்கிறோம். வழிபடுகிறோம். வழிபாட்டில் அறிந்தும் அறியாமலும் முக்கரணங்களாலும் ஏற்படும் அபசாரங்களை நீக்கிச் சிவ தரிசன-வழிபாட்டு-பூசைப் பலன்களை அருளுமாறு சண்டேசுவரரிடம் பிரார்த்தித்து, அபசாரங்கள் நம்மை விட்டு நீங்கியதாகத் தாளத்திரய முத்திரை காட்டுதலே யுக்திக்குப் பொருந்துவதாக உள்ளது.

சண்டேசுவரர் சந்நிதியில் செய்யத்தகாதன:

ஆலயங்களில் செய்யப்பெறும் பரார்த்த பூசையில் பூசை செய்பவர்கள் சிவ நின்மாலியத்தைச் சண்டேசுவரரிடம் சேர்ப்பித்தலே தகும். ஆன்மார்த்த பூசையிலும் அவ்வாறே செய்தல் வேண்டும். இஃதன்றி நாம் சந்நிதிகளில் பெற்ற பூ, பூமாலை முதலியவற்றைச் சண்டேசுவரர் சந்நிதியில் இடுதலோ, ஆடையிலிருந்து நூலை எடுத்துப் போடுதலோ, 'காது கேளாத கடவுள் அல்லது யோகத்தில் உள்ளவர்' என்ற கருத்தில் கை தட்டுதலோ, செய்யத்தகாதன. அஸ்திர மந்திரம் சொல்லி, இடது உள்ளங்கையில் வலது கைவிரல்களால் தட்டுகிறதாகிய தாளத்திரயமே செய்யத்தகும்.

சண்டேசுவரர் சந்நிதியில் கைந்நொடித்தலும்கூடாது. உலகியலில் சாதாரணமர்க ஒரு பெரியவர் முன் கைந் நொடித்தாலே தவறாக எண்ணப்படும்போது, சண்டேசுவரப் பெருமானிடம் கைந்நொடித்தால், எத்தகைய அபசாரம் வந்து சேரும் என்பது சொல்லத்தேவையில்லை. இன்னொன்று சொல்லவேண்டியுள்ளது. சங்கீதத்தில் கைந்நொடி பொருந்துவதோ என்னவோ? திருமுறை அன்பர்கள் தாளத்திற்குப் பதில் கைந்நொடிக்காதிருப்பார்களாக. தாளமில்லாதபோது கைத்தாளம் "கையதனால் ஒற்றறுத்துப்பாடு"வார்களாக. கைத்தாளமிட்ட அதனாலன்றோ, கோலக்கா இறைவன் சம்பந்தப் பெருந்தகையாருக்குப் பொற்றாளம் வழங்கினார்.

இதனை ஆய்வாளர்களும், சைவ அன்பர்களும் ஆய்ந்து, மேலும் விளக்கம் கண்டு காட்டுவார்களாக ! ★



விருத்தாசலம் வட்டம், மணவாளநல்லூர்க் கொளஞ்சியப்பர் கோயில் திருமண மண்டபம், மேனிலை நீர்த்தேக்கம் திறப்பு விழாவில், திரு, செல்வராஜ், M. L. A. அவர்களும், மாண்புமிகு சட்ட அமைச்சர் செ. மாதவன் B.Com., B.L., அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தல். (27—3—72)



இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. V. V. கிரி அவர்கள் திருமயிலைக் கபாலீசுவரர் கோவிலுக்கு 14—2—72 அன்று வருகைதந்தபோது எடுத்த புகைப்படம்.

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34, Printed at Sivarts Printers. 119, Strahans Road, Madras-12. Editor N. R. Murugavell, M.A., M.O.L.